
வீரகேசரி
பிரசுரம்
கே. எஸ். ஆனந்தன்
தீக்குள்
விரலை
வைத்தால்

Mr. K. S. Anandan
and
Mrs. K. S. Anandan.

மறு பிரசுரம்

# தீக்குள் விரலை வைத்தால்

கே. எஸ். ஆனந்தன்

வெளியீடு
வீரகேசரி
த.பெட்டி 160,
கொழும்பு.

# Theekul Viralai Vaithal

by

**K. S. ANANTHAN**
(Yarl Janarthanan)

FIRST EDITION
**AUGUST 1972**
REPRINTED
**JULY – 1978**

**PRICE Rs. 4-60**

*COPYRIGHTS*
RESERVED WITH
THE PUBLISHERS

**Published by**

**VIRAKESARI**
**P. O. Box 160, COLOMBO.**

**Sole Distributors:**
*Express Newspapers (Ceylon) Ltd.*
185, GRANDPASS ROAD,
COLOMBO-14.

# ஆசிரியர் உரை

நாவல் இலக்கியம் என்ற புத்திலக்கிய வகையில் நவீன அம்சங்களைப் புகுத்துவதால் பரந்த அடிப்படையில் வாசகர்களைத் தோற்றுவிக்கலாம். அதன் மூலம் எழுத்துத் துறையில் பலரை ஆர்வங் கொள்ளச் செய்யலாம் என்ற எனது நினைவுக்குச் சான்ருக விளங்குவது இந்த நவீனம், பத்திரிகையில் ஓர் முறையும், புத்தக உருவில் இரண்டாவது பதிப்பாகவும் வெளிவந்து, இன்றும் பல்லாயிரக் கணக்கானவர்களின் பாராட்டுதல்களைப் பெற்றுக்கொண்டிருக்கின்றது என்பதை எவரும் மறுக்கமுடியாது. நான் எழுதிய நாவல்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு கோணத்தில் படைக்கப்பட்டனவாயினும், இந்நாவல் பலதரப்பட்ட வாசகர்களினுலும் வரவேற்கப்பட்ட ஒன்ருகும். ஆகவே, இந்நாவல் இரண்டாம் பதிப்பாக வருவதில் பெருமைப்பட எதுவும் இல்லை. இந்திய நூல்கள் குப்பை குப்பையாக வந்திறங்கும் இவ்வேளையில் இந்நூலை மறுபிரசுரம் செய்யவேண்டிநிற்கும் வீரகேசரி புத்தக வெளியீட்டு இலாகாவையும், நண்பர் திரு. சி. பாலச்சந்திரன் அவர்களது துணிவையும் பாராட்டவேண்டும். அதே வேளையில், முதற்பதிப்பு வெளியான வேளையில் பல்லாயிரக்கணக்கான பாராட்டுக் கடிதங்களை 'கேசரி' வெளியீட்டுப் பகுதிக்கும், எனக்கும் அனுப்பிவைத்த வாசக அன்பர்களுக்கு தனிப்பட்ட முறையில் நன்றி தெரிவிக்கமுடியாதுபோனுலும், இந் நவீனத்தின் மூலம் மீண்டும் சந்தித்து நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

கே. எஸ். ஆனந்தன்.

'அன்பகம்'
இணுவில் கிழக்கு,
இணுவில்.

# மதிப்புரை

சமூக வாழ்க்கையைக் களமாகக் கொண்டு படைக்கப் படும் நவீனத்திலும் ''சஸ்பென்ஸ்'' அம்சத்தை சாதுர்ய மாகக் கையாள்வதால் போதிய விறுவிறுப்பையும், வாசகர் கவர்ச்சியையும் தோற்றுவிக்கலாம் என்பதை இந்நாவல் மூலம் நிரூபித்துள்ளார் கதாசிரியர் கே. எஸ். ஆனந்தன்.

ஜீவ களை நிறைந்த பாத்திரங்கள், உள்ளத்தைத் தொடும் சம்பவங்கள், உணர்ச்சிமயமான இனிய நடை— இவையனைத்தும் கதைக்கு உயிரோட்டத்தை அளிக் கின்றன.

தீ சுடுமென தெரிந்தும், விஷப் பரீட்சையில் துணிந்து இறங்கும் பானுமதிக்காக இரங்காமலிருக்க முடியவில்லை. வீட்டாரும், வெளியாரும் 'கெட்டவன்' என்று ஒதுக்கி விட்ட ரகுராமன், உதாரண புருஷனுகப் பரிணமிக்கும் போது, வாசகர் உள்ளத்தைக் கொள்ளை கொண்டு விடுகிறுன்.

படித்து முடித்ததும், நல்ல ஒரு நவீனத்தைச் சுவைத் தோம் என்ற மனச்சாந்தி ஏற்படுகின்றது.

ஈழத்து வாசகர்களின் நன்மதிப்பைப் பெற்றுவிடு மென்பதில் ஐயமில்லை.

வெளியீட்டாளர்.

1-8-72.

# தீக்குள் விரலை வைத்தால்....!

## அத்தியாயம் ஒன்று

குத்துவிளக்கு முத்துப் போல் எரிந்து ஒளி வீசியது. ஊதுவத்தியின் மணமும், சாம்பிராணியின் மணமும் கலந்து ஒரு சுகந்த மணம் வீடு முழுவதும் பரவியிருந்தது. தம்புராவின் சுருதியோடு இணைந்து ஒலித்த பாரதியின் குரலிலே தோய்ந்து போய் உட்கார்ந்திருந்தாள் அன்னபூரணியம்மாள்.

பாரதி பாட்டை முடித்துவிட்டு, தம்புராவைவைத்து விட்டு எழுந்தபோது, ''ஆண்டவனே என் பிள்ளை ரகு திருந்தமாட்டானா? அவனுக்கு இந்த வருடத்திலாவது ஒரு கால்கட்டுப் போட்டு, என் மனதில் அமைதியைத்தோற்றுவிக்கமாட்டாயா?'' என்று கேட்டபடியே அன்னபூரணி அம்மாள் நின்றுகொண்டிருந்தாள். அவள் விழிகளில் நீர்த்துளிகள் முத்துப் பரல்களென உருண்டு கொண்டிருந்தன.

''அம்மா! அண்ணனுக்காக நீங்கள் தினமும் இப்படிக் கண்ணீர் விடுகின்றீர்கள். ஆனால், அண்ணன் நீங்கள் நினைப்பது போலிருப்பான் என்று என்னால் நம்ப முடியவில்லையே அம்மா'' என்றாள் பாரதி.

''கைப்புண்ணுக்கு கண்ணாடிவேண்டுமாம்மா? அவன் திருந்தி நடந்தால், நல்லவனாய் இருந்தால் எனக்குச் சந்தோஷம்தானே. எல்லாம் அவன் விட்ட வழி'' என்று அவள் கூறி முடித்த போது, அழைப்பு மணி வீடு முழுவதும் கணகணவென ஒலித்தது.

"எங்கப்பன் முருகன் என்னைத் தவிக்கவிடமாட்டான் பாரதி. பார்த்தியா மணி ஒலிக்கிறது. போய்ப் பாரேன் பாரதி. யாரோ வந்திருக்கிறார்கள் போலிருக்கிறதே'' என்று கூறினாள் அன்னபூரணி அம்மாள். பாரதி பூசை அறையை விட்டு வெளியே எழுந்து சென்றாள்.

அழைப்பு மணியின் பித்தானை அமுக்கிவிட்டு யார் வருவார்களோ என எண்ணமிட்டவாறே அங்குமிங்கும் பார்த்து மிரண்டு கொண்டு நின்றாள் பானுமதி.

வீட்டு முகப்பில் அழகான பூஞ்செடிகள் பூத்துக் குலுங்கி நின்றன. வீட்டின் தென்புறமாக விதம்விதமான குரோட்டன் செடிகளும், ரோஜாக் கன்றுகளும், குண்டு மல்லிகையுமாகப் பார்த்துக்கொண்டேயிருக்கலாம்போல் தோன்றியது. மெல்லென வீசும் சீதளத் தென்றலில் மலர்களின் நறுமணம் கலந்து வந்ததாலோ என்னவோ அந்த வாசனையில் தன்னையே மறந்து நின்றாள் பானுமதி.

கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்த பாரதி சில கணப் பொழுது அப்படியே அவளைப் பார்த்துக் கொண்டு நின்றாள். பானுமதி மலர்களைப் பார்த்துக் கொண்டு நின்றவள் தோளில் யாரோ தொடுவதை உணர்ந்து திடுக்கிட்டுத் திரும்பினாள். திரும்பியவள் திகைத்தவளாய் ''பாரதி நீங்களா?'' என்றாள்.

''பானு நான் முதலில் நம்பவேயில்லை, அப்புறம் நீ என்னை அழைத்தபோதுதான் உண்மையிலேயே பானுமதிதான் என்பதை உறுதி செய்து கொண்டேன். அது சரி ஏது இந்தப் பக்கமாக... வா பானு உள்ளேயிருந்து பேசலாம்'' என்று அவள் கரங்களைப் பற்றி உரிமையுடன் அழைத்துச் சென்றாள்.

பானுமதியும், பாரதியும் கல்லூரியில் ஒன்றாகப் படித்தவர்கள். அது மட்டுமல்ல, ஒருவரோடு ஒருவர் நெருங்கிய

சிநேகிதிகளுமாவர். பானுமதி பல்கலைக் கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டு மேற்படிப்புக்குச் சென்று விட்டாள். ஆனால், பாரதிக்குப் படிப்பைத் தொடர முடியாது போய்விட, அவள் திருமணத்திற்குத் தயாராகிவிட்டாள். பதிவுத் திருமணம் முடிந்து விட்டது, அவள் கணவன் லண்டனில் உயர் கல்வி கற்கச் சென்று விட்டான். இன்னும் மூன்று மாதங்களில் திரும்பிவிடுவான். அதன் பின்புதான் சம்பிரதாயப்படி திருமணம்.

''ஏன் பானு ஒன்றுமே பேசாமலிருக்கிறாய்?,' என்றாள் பாரதி'

''பாரதி இது உங்கள் வீடுதானே?''

''ஆமாம். எங்கள் வீடுதான். அது சரி; நாங்கள் கல்லூரியில் படித்த போது எப்படி நீ... உன் என்று என்னை அழைத்தாயோ அப்படியே அழைப்பது தானே. எனக்கு மரியாதை எல்லாம் தேவையில்லை பானு.''

''பாரதி உனக்குத் திருமணம்...''என்று நிறுத்தினாள்.

''சட்டப்படி முடிந்து விட்டது. கல்யாணத்துக்கும் திகதி வைத்தார்கள். இருந்தாற்போல் அப்பா மாரடைப்பால் இறந்து போனார். பின்னர்...''என்று தன் கதையைக் கூறி முடித்தாள்.

''நீங்கள் இங்கே வந்து...''

''மூன்று வருடங்களாச்சு. அது பெரிய கதை. அது சரி பானு, நீ வந்த விடயத்தைக் கூறவில்லையே?' என்று கேட்டாள் பாரதி.

''பாரதி நான் இங்கே வரும்போது நம்பிக்கையீனத்துடன்தான் வந்தேன். ஆனால், உன்னைப் பார்த்ததும்

பாதி நம்பிக்கை ஏற்பட்டது. உன் வீடென்று அறிந்ததும் முழு நம்பிக்கையே ஏற்பட்டுவிட்டது.''

''என்னென்றுதான் விடயத்தைச் சொல்லேன்.''

''வீடு வாடகைக்கு...''

'வீடு வாடகைக்கா? உனக்கா?'' என்று துள்ளி எழுந்தாள் பாரதி.

''ஏன் பாரதி எனக்கு...''

''ஒன்றுமில்லை பானு. விளம்பரத்தில் ஆண்களுக்கு மட்டும் என்று போடப்பட்டிருந்ததே?''

''பார்த்தேன். ஆனால், வேறு யாராவது எனக்கு முன்னுடி வந்தார்களா?''

''நோ நோ...''

''அப்புறம் என்ன? பாரதி, நான் டவுனிலேதான் லேடீஸ் கொலஜ்ஜில்தான் ரீச்சராயிருக்கிறேன். அங்கே இருக்க முடியாது பாரதி. உனக்கு என்னைப் பற்றி தெரியும்தானே?''

''அதை வேறு சொல்லணுமா?''

''கடைசியில் நேற்றுத்தான் ஒருமுடிவுக்கு வந்தேன்'''

''என்ன முடிவு பானு?''

''தொடர்ந்து படிப்பிப்பதா? அல்லது வேலையை விட்டிட்டுப் போறதா? என்பதுதான்.''

''ஏன் அப்படி?''

''அதுதான் இடப் பிரச்சினை. பாரதி, எப்படியாவது உங்கள் வீட்டில் எனக்கு இடம் தருவாய் என்ற நம்பிக்கை

சற்று முன்னர்தான் ஏற்பட்டது. பிளீஸ் நீயே சிபார்சு செய்து எனக்காக...''

''பானு உனக்கில்லாத வீடா? ஆனல், அம்மா இலகுவில் சம்மதிக்கமாட்டாளே!''

''ஏன் ?''

''இங்கே கல்யாணமாகாத அண்ணன்மார்கள் இருக்கிறார்கள். அப்புறம் ஊரார்... அதனுல்தான் ஆண்களுக்கு மட்டும் என்று...''

''அதுசரி பாரதி, என்னைப்பற்றி உனக்குத் தெரியும்தானே? அப்புறம் நான்...''

''பானு நான் உண்மையைச் சொல்லப் பயப்படவே இல்லையடி. எங்க சின்னண்ணுவைப்பற்றி ஊரெல்லாம் கண்டபடி சொல்லுவார்கள். அப்புறம் நீயும் இங்கிருந்தால், உன் நல்ல பெயருக்கு அவனுல் கெட்ட பெயர் ஏற்பட்டுவிடுமென்று அம்மா...'' அவள் விழிகள் பனித்து நின்றன.

''பாரதி! உங்கண்ணனைப்பற்றி அம்மா கூடவா தப்பா நினைக்கிறார்கள்?'' என்ருள் பானு.

''ஆமாண்டியம்மா, நினைப்பதென்ன? அவன் செய்வதுகூட ஒன்றும் நல்லாயில்லையே! பிறர் சொல்லித்தான் நான் தெரிந்துகொள்ளணுமா? என் வயிற்றில் இவன் எங்கு வந்து பிறந்து தொலைத்தானே?'' என்று கூறினுள் அங்கு வந்த அன்னபூரணி அம்மாள்.

''அம்மா! நீங்களே இப்படிக் கூறினுல் மற்றவர்கள் எப்படி நினைப்பார்கள்? சின்னண்ணு என்னதான் அப்படி உங்களுக்கு...?'' என்று கூறி நிறுத்திஞள் பாரதி.

''பாரதி! ஊர் உலகம் கதைக்கிறது போகட்டுமடி. இங்கே எத்தனை பேர் அவனைத் தேடி வாருளவை. இதெல்லாம்... ஏன்டியம்மா உனக்கு இதெல்லாம் எதுக்கு? வீடு உனக்குக் கிடைக்காது'' என்ருள் அன்னபூரணி அம்மாள்.

''அம்மா! அப்படிச் சொல்லாதீங்க. கொடும் புலிகள் வாழும் காட்டில் இருப்பது போன்று இருந்த இடத்தில் நலித்தபடியால்தான், ஆண்களுக்கு மட்டும் என்று விளம்பரம் செய்திருப்பினும் என் உண்மை நிலையை எடுத்துக் கூறி, காலில் விழுந்தாவது கெஞ்சிக் கேட்போம் என்று ஓடி வந்தேன்'' என்று மேலும் என்னவோ எல்லாம் கூறினாள் பானுமதி.

''உன் பேரென்னம்மா பானுமதியா?''

''ஆமாம்மா.''

''பானு! வீட்டை உனக்குத் தருவதில் எனக்கொன்றும் ஆட்சேபனையில்லை. வீணாக உன் பெயரைக் கெடுத்துக் கொள்ளப் போறியே என்றுதான்...'' என்றாள் அன்னபூரணி அம்மாள்.

''அம்மா! பானு மிகவும் கெட்டிக்காரி. அவள் எல்லோரையும் சமாளித்துவிடுவாள். பாவம் அம்மா'' என்றாள் பாரதி.

''எனக்கென்னடியம்மா. அப்புறம் உன் பிள்ளை என்னை அப்படி இப்படி... எதுவும் என்னிடம் வந்து...''

''கடைசி வரைக்கும் அப்படி நடக்காமல் இருந்து விடுகிறேன்'' என்றாள் பானுமதி.

''பாரதி நீயே கூட்டிக்கொண்டு போய் வீட்டைக் காட்டு'' என்று கூறிவிட்டு உள்ளே சென்றாள் அன்னபூரணி அம்மாள்.

அன்னபூரணி அம்மாளின் பெரிய வீட்டிற்குத் தென் கிழக்குப் பக்கமாக, நூறு யார் தொலைவில் இருந்தது அந்தச் சிறிய வீடு. வீடு என்று சொல்ல முடியாதபடி நவீன பாணியில் அமைக்கப்பட்ட ஒரு ஓட்டல் அறை என்றுதான் கூறவேண்டும். படுக்கை அறை. படிப்பதற்கும் புழக்கத்துக்குமாகச் சேர்த்து ஒரு அறை, சமையல் அறை, குளியல் அறை என்றெல்லாம் சேர்த்து மிகவும்

துப்புரவாகவும், அழகாகவும் விளங்கியது அந்தச் சிறிய வீடு. பார்த்த மாத்திரத்திலேயே பானுமதிக்கு மிகவும் சந்தோஷம்!

''பாரதி! நான் விரும்பும் தனிமையும், அமைதியும் இந்த வீட்டில் கிடைக்கும் பாரதி'' என்றாள் பானு.

''அமைதி கிடைக்குமோ என்னவோ? அதை முன் கூட்டியே முடிவு செய்யாதே பானு. ஆனால், தனிமையில் நீ இருந்தாலும், என் தங்கையர் இருவர், தம்பி ஒருவன் இங்கே வந்து தொல்லை தருவார்கள். அவர்களோடு அள வோடு பழகிக்கொள். ரோட்டுக்குப் போவதானாலும் தனிப் பாதை இதற்குண்டு. உன் விருப்பப்படியே செய்ய லாம் பானு'' என்றாள் பாரதி.

சில நிமிடப் பொழுது சிந்தனையிலாழ்ந்திருந்தாள் பானுமதி. ''அழகான அமைதியான வீடு. சுற்றிவர அழகான பூந்தோட்டம். நல்ல குடும்பம் என்றாலும் அதில் ஒரு விஷப் பூண்டா? அது ஒன்று போதுமே அந்தக் குடும் பத்தைக் கெடுப்பதற்கு. பெற்ற தாயே புறக்கணித்துக் குற்றம் சுமத்தும் அளவுக்கு அவள் பிள்ளை கெட்டவன் என்றால் அவனைப்பற்றிச் சிந்திக்காமல் இருப்பதும் தவறு தான். அப்படி என்ன செய்துவிடுவான் பார்ப்போமே'' என்று தனக்குள் திட்டமிட்டவளாக நிமிர்ந்தபோது, பாரதி அவளையே பார்த்துக்கொண்டு நின்றாள்!

''என்ன பானு ஒரேயடியாய்ச் சிந்தனையிலாழ்ந்துவிட் டாய்?'' என்றாள் பாரதி!

''பாரதி! உங்கள் சின்னண்ணாவைப் பற்றிப் பய முறுத்திவிட்டீர்கள். அதுபற்றித்தான்...''

''பானு! எங்கண்ணா ராஜாராமன் பெண்டாட்டி வீட்டிலேயே தஞ்சம். அவர் நல்லவர்; ஒழுங்கானவர் என்று ஊரெல்லாம் சொல்லும் அதே அண்ணனுடன் பிறந்த தம்பிதான் இந்த ரகுராமன். 'மைனர்' என்று

சிலர் கூறுவார்கள். பொல்லாதவன் என்றாலும் அவனிட முள்ள நல்ல குணம் எங்கள் பெரியண்ணாவிடமே கிடை யாது. அப்படிப்பட்ட ஒரு பிறவி ரகுராமன்'' என்றாள் பாரதி.

''என்ன வேலை பார்க்கிறார்?''

''வேலையா? எதுவுமே கிடையாது. இரண்டொரு இடங்களில் வேலை பார்த்தான். அதுவும் ஒழுங்காய்ப் பார்த்தால்தானே? அவர்களோடு சண்டை போட்டுக் கொண்டு வேலையையே விட்டுவிட்டான்.''

''எதுவரை படித்தார்?''

''பீ. ஏ. படித்தான். ஆனால்,பரீட்சை எடுக்கு முன்பே ஒரு வேலையில் சேர்ந்தான். கடைசியில் படிப்பும் இல்லை. வேலையும் இல்லை. நான்தான் சொன்னேனே அவன் ஒரு விசித்திரப் பிறவி.''

''அப்படியா?'' என்றவள் அவன் எப்படியிருப்பான் என்ற சிந்தனையில் லயித்துவிட்டாள்.

மனிதர்கள் சில சமயம் அபூர்வப் பிறவிகளாய் இருப் பது விந்தைதான். அதிலும் வாழ்வில் ஒரு பிடிப்பில்லாமல், பொறுப்பில்லாமல் நடந்துகொள்வான் என்றால் அவன் ஊதாரியா? அல்லது...?

''பானு!''

''என்ன பாரதி?''

''நீ எப்போ குடிவரப் போறே?''

''இன்று மாலையே வரலாம் என்றுஎண்ணுகின்றேன். வாடகை முற்பணம் ஏதும்...?''

''பானு உன்னிடம் முற்பணமா? உன்னைப் பற்றி எனக்குத் தெரியாதா? நீ பிறர் தயவை எதிர்பார்த்து வாழாதவள். ஆனாலும், வாடகையை மாதா மாதம் அம்மாவிடம் கொடுத்துவிடு போதும். வேறு உனக்கு என்ன உதவி வேணுமோ நான் இருக்கேன்'' என்றாள்.

அவர்கள் வீட்டைப் பூட்டிக் கொண்டு பெரிய வீட்டின் முகப்புக்கு வந்த போது வெளிக் கேற்றுக்குச் சமீபமாக ஒரு பொலிஸ் ஜீப் வந்து நிற்பது தெரிந்தது. அதிலிருந்து பொலிஸ் இன்ஸ்பெக்டர் மட்டுமே இறங்கி வந்தார்.

''குட்மோனிங்! மிஸ்டர் ரகுராமன் வீடு தானே?'' என்றார் இன்ஸ்பெக்டர்.

''யேஸ்! ஆனால், அவர் இல்லையே'' என்றாள் பாரதி.

''இல்லையா? ரகுராமனைத் தேடிக் கொண்டு தானே வந்தேன்'' என்று இன்ஸ்பெக்டர் கூறியபோது, பானுமதியும், பாரதியும் ஒருவரை ஒருவர் பார்த்து விழித்தனர். அவர்கள் இருவர் உள்ளங்களையும் பயம் கவ்விக் கொண்டது.

மனித மனத்திலுள்ள ஒரு மாபெரும் பல்வீனம் என்னவெனில், நடக்கப்போகும் நிகழ்ச்சி எதுவானாலும் அது நிகழப்போகும் சந்தர்ப்பத்தின் ஆரம்பம் வரை அது பற்றி இல்லாத பொல்லாதவற்றை எல்லாம் யோசித்து தன்னைத்தானே வீணாக வருத்திக்கொள்வது தான். அப்படித் தான் பாரதியும் பானுமதியும் பொலிஸ் இன்ஸ்பெக்டரைச் சந்தித்தது முதல் என்னவோ எல்லாம் எண்ணிப் பயந்தனர். ஆனால், பொலிஸ் இன்ஸ்பெக்டர் அவர்கள் இருவரும் நின்ற தோற்றத்தைப் பார்த்து விட்டுத் திரும்பியவர் ''சரியம்மா நான் அப்புறம் வந்து போகிறேன்'' என்றார்.

''சார்! என்ன விடயம் சார்?'' என்றாள் பானுமதி.

''நதிங்! ஆனால், மிஸ்டர் ரகுராமனைச் சந்திக்க வேண்டும். அவனிடமே கூறவேண்டிய விடயம். நீங்கள் ஒன்றுக்கும் பயப்படாதீர்கள். பயப்படக் கூடியதாக ஒன்றும் நடந்து விடவில்லை'' என்றார்.

''அப்பாடா'' என்று பாரதியின் கைகளைப் பற்றினாள் பானுமதி.

''என்ன பானு நீ பயந்திட்டியா? இப்படித் தான் எப்பவாவது பொலிசார் அவனைத் தேடிக் கொண்டு வரு

வார்கள். அப்படி என்னதான் செய்கிறானோ அண்ணன்'' என்று பெருமூச்சு விட்டாள் பாரதி.

''அதற்கில்லை பாரதி, நான் வந்ததும் வராததுமாக பொலிசார் உன் அண்ணனைத் தேடிக்கொண்டு வந்ததும் எனக்கு......''

''பைத்தியம் நீ இன்னும் பழைய பானுவாய்த்தாண்டி இருக்கிறாய். அது சரியடி பானு, நீ இப்பவே போகணுமா?''

''ஆமாம். நான் போய்விட்டு அப்புறமாக வாறேன். இதற்காகவே இன்று கல்லூரிக்கும் லீவு போட்டுட்டேன்'' என்றாள்.

''அடி பைத்தியமே! ஏன் அப்படிச் செய்தாய்? மாலை வந்திருக்கலாமே!''

''அப்படி வந்திருக்கலாம் தான். ஆனால், நீ தான் வீட்டுக்காரியென்று முன்பே தெரியாமல் போய் விட்டதே பாரதி! அது சரி உங்கண்ணன் இப்போ எங்கே?''

''அவனா அவன் எங்கே என்று நிச்சயமாகக் கூறமுடியாது. விரும்பின நேரம் வீட்டுக்கு வருவான். போவான் அவன் போக்கு அப்படி'' என்றாள் பாரதி.

''அப்படியா? சரி பாரதி நான் வருகிறேன். அம்மாவிடம் கூறு'' என்று சொல்லிவிட்டுச் சென்றாள் பானுமதி.

## அத்தியாயம் இரண்டு

**வா**ழ்க்கையின் இனிய பகுதிகளை மட்டும் சுவைத்தவர்கள் வாழ்வு சொர்க்கம் என்பார்கள். துன்பத்தை மட்டும் சந்தித்தவர்கள் வாழ்வு ஒரு மாயக் கண்ணாடி என்பார்க்கள். ஆனால், ரகுராமனுக்கோ வாழ்வு ஒரு விளையாட்டுக் களம். அவன் வாழ்வைப் பற்றிக் கவலைப்படுபவனாகவோ, சந்தோஷமடைபவனாகவோ தெரியவில்லை.

அதிக வெண்மையோ, அதிக கறுப்போ இல்லாத பொது நிறம். சுருண்ட மயிருடன் பக்கவகிடு எடுத்த கிராப்பு. கழுத்தில் புலிநகம் பதித்த தங்கச்சங்கிலி. புன்னகை பூத்த முகத்தில் நெற்றிக்குக் கீழே ஒரு கறுப்பு மச்சம். மேலுதட்டில் அழகான நறுக்கிவிடப்பட்ட மீசை. கறுப்பு நிறத்தில் உயர்ந்தரக துணியாலான நீண்ட காற்சட்டை; தூயவெள்ளையில் அல்லது மெல்லிய கலரினுலான ரெறலின் ஷேர்ட். இதுதான் ரகுராமனுடைய அழகிய உருவம். அவன் நடையிலும்சரி, கதையிலும் சரி ஒருவித தனிக்கவர்ச்சி. அந்தக் கவர்ச்சியில் அவனிடம் மயங்காதவர்கள் இல்லை.

பானுமதி பஸ் வண்டியில் பெண்களுக்கான பிரத்தியேக சீட்டில் அமர்ந்திருந்தாள். வண்டிக்குக் குறுக்கே போடப்பட்ட உருக்குக் குழாயில் சாய்ந்தபடியே ஆழ்ந்த சிந்தனையில் லயித்து நின்ற அந்த வாலிபனை ஏனே அடிக்கடி அவள் பார்த்துக் கொண்டாள்.

அநேகமாக பஸ்ஸில் ஒரு அழகான பெண் ஏறி விட்டால் அந்த வண்டியில் உள்ள அத்தனை கண்களும் அவளை மொய்த்துத் திரும்பும். பானுமதி பஸ் வண்டியில் இருந்து வெளியே தான் அநேகமாகப் பார்த்துக்கொண்டிருப்பாள். ஆனுல், அந்த வாலிபனுடைய அலட்சிய மனப்பான்மை அவள் மனதைக் குடைந்தது. அவனுடைய அழகுக்கவர்ச்சியினுல் ஏற்பட்ட கர்வமோ, அல்லது பெண் வர்க்கத்தை விரும்பாத மனமோ? ஏன் அவன் அப்படி என்ற சிந்தனை ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தாள் பானுமதி. அதே வேளையில் அவன் விழிகள் பஸ் வண்டியில் இருந்த பானுமதியின் முகத்தில் ஒரே ஒரு நிமிடம் பதிந்து திரும்பியது. பானுவும் பார்த்தாள். அடுத்த கணம் அவன் திரும்பி விட்டான்.

அன்று மாலையில் பானுமதி புது வீட்டுக்குக் குடி வந்து விட்டாள். அவள் வீட்டுக்கு வந்த பொழுது பாரதியின் தங்கை, தம்பிகளும் வந்துவிட்டனர். அந்தச் சிறு வீடு கலகலப்புடன் விளங்கிற்று. பானுவுடன் பாரதியின் இளைய

தங்கை மாலதி ஒட்டிக் கொண்டு விட்டாள். "ரீச்சர் ரீச்சர்" அவளைச் சுற்றிவர ஆரம்பித்து விட்டாள்.

"மாலதி உன்னை விடமாட்டாள் போலிருக்கேபானு" என்றாள் அன்னபூரணி அம்மாள்.

"அவள் சின்னப்பெண் தானே? நான் ரியூசன் சொல்லிக்கொடுப்பேன். உங்களுக்கு ஆட்சேபனையில்லையெனில் என்னுடனே இருப்பாளாக்கும்?" என்றாள் பானு.

"எனக்கென்னடியம்மா அவள் விருப்பம், உன்விருப்பம். என் பிள்ளை எதுதான் என்இஷ்டப்படி நடக்கிறது?" என்றாள் அன்னபூரணி.

"ஏன் அம்மா நான் இல்லையா?" என்று கேட்டுக் கொண்டே உள்ளே வந்தான். சிவராமன். அவன்தான் பாரதியின் இளைய தம்பி.

"சிவா, நீ சரி, வேறு யாரும்சரி—அதாவது ஆண்கள் இந்த வீட்டுக்குள் காலடி எடுத்து வைக்கக் கூடாது" என்றாள் அன்னபூரணி.

"ஏன் ரீச்சர் அப்படித்தானா? உங்களுக்கு ஏதாவது வாங்குவதாய் இருந்தால் என் உதவி இல்லாமல் எப்படி வாங்குவீர்களாக்கும்?" என்றான் சிவராமன்.

"ஏன் அம்மா சிவா சிறுவன்தானே? அதனால் என்னம்மா?" என்றாள் பானு.

"பானு இவர்களெல்லாம் மெல்லமெல்ல வந்து உனக்குத் தொந்தரவு தருவார்களே என்றுதான் பார்த்தேன். சரி, உன் இஷ்டப்படியே செய்துகொள்ளேன்" என்று கூறிவிட்டு விடைபெற்றுச் சென்றாள் அன்னபூரணி.

## அத்தியாயம் மூன்று

காங்கேசன்துறையில் உள்ள பொலிஸ் நிலையத்தில், குற்றத்தடுப்பு இலாகா இன்ஸ்பெக்டர் விக்டர் இம்மானுவேல் எதையோ தேடிக்கொண்டே இரண்டு மூன்று பைல்களைப் புரட்டிக்கொண்டிருந்தார். அவருடைய நெற்றியில் வியர்வை அரும்பி நின்றது. அதேவேளையில் உள்ளே நுழைந்து இரகசியப் பொலிசான கபூர், ''என்ன சார் ஃபானைக்கூடப் போடாமல் தேடிக்கொண்டிருக்கின்றீர்கள்?'' என்றவாறே மின் விசிறியின் சுவிச்சைத் தட்டிவிட்டான்.

''ஓ... கபூர் நீங்கள் வந்ததும் நல்லதாய்ப் போய் விட்டது.' ரகுராமன் இருக்கிறானே, அவனுக்கு ஒரு வேலைக்குச் சிபார்சு செய்யவேண்டியிருக்கு. நான் போவது சரியல்ல. அதில் உங்கள் உதவி தேவை'' என்றார்.

'சார்' என்று கூறிச் சிரித்த கபூர், தலையாட்டியபடி அங்கு மிங்குமாகச் சிறிது நேரம் உலாவினார்.

''ஏன் சார் அந்த ஏற்றுமதி இறக்குமதிக் கம்பனி...''

''ஜேஸ் ஜேஸ் அப்துல்லாவுக்குக் கூடிய பங்குண்டு. அவனுக்கு அறிமுகமான ஒருவரிடமிருந்து சிபாரிசுக் கடிதம் வாங்கினால் நல்லது.''

''ஆல் ரைட் அப்படியே செய்கிறேன்'' என்று கூறிக் கபூர் எழுந்த போது தொலைபேசி மணி ஒலித்தது.

இன்ஸ்பெக்டர் இமானுவேல் போனை எடுத்து, ''ஹலோ, இன்ஸ்பெக்டர் இமானுவேல் ஸ்பீக்கிங்'' என்றார்.

''சார், நான்தான் ரகு பேசுகிறேன். 'அப்துல்லா அன் கோ'வில் எனக்கு இடம் கிடைத்துவிட்டது. உங்கள் சிபார்சின்றியே வேலை கிடைத்துவிட்டது. இதை அறிவிக்கத்தான் அழைத்தேன்சார்.''

''நல்லது ரகு. உன் பெயருக்கு எந்தவிதமான இழுக்கும் வராமல் நடந்துகொள். இந்த வேலையை மட்டும் ஒழுங்காகப் பார்த்தியோ உனக்குப் புறமோஷன் நிச்சயம்.''

''ஒழுங்காகவும், நம்பிக்கையோடும் நடப்பேன் சார். உங்கள் ஆதரவுக்கு நன்றி'' என்று கூறி முடித்தான்.

போனை வைத்துவிட்டுப் புன்சிரிப்புடன் கபூரைப் பார்த்தார் இமானுவேல். கபூர் தலையாட்டியபடியே 'மிஸ்டர் ரகு கெட்டிக்காரன்தான். யாரையோ பிடித்துக் கொண்டு நுழைந்துவிட்டான். நல்லவன்தான். ஆனுல், அவன் அண்ணன் ராஜாராமனே அவனைப்பற்றி நல்லதாக ஒரு வார்த்தையேனும் கூறக் காணேம்' என்ருர்.

''கபூர், ரகுராமன் ஒரு இடத்திலாவது ஒழுங்காக வேலை செய்தால் அல்லவா வீட்டினர் அவன் மீது நல்ல அபிப்பிராயம் வைத்திருப்பார்கள்' என்று கூறிச் சிரித்தார்.

''இதுவும் கொஞ்ச நாளைக்குத்தானே என்னவோ?'' என்ருர் கபூர்.

''கபூர், இதில் கொஞ்சக்காலமாவது ரகு நிலைத்திருப்பான் என்றுதான் தோன்றுகிறது. அப்துல்லா லேசான புள்ளியில்லை. ரகு ஏதும் தப்புத்தண்டா செய்தானே தொலைச்சுப்போடுவான்'' என்ருர் இமானுவேல்.

''நான் வரேன் சார்'' என்று கூறிவிட்டுச் சென்ருர் கபூர்.

# அத்தியாயம் நான்கு

காலையில் துயில் நீங்கி எழுந்த பானுமதி தன்னைக் கட்டி அணைத்தவாறே படுத்திருக்கும் மாலதியின் கன்னத்தில் முத்தமிட்டவாறே எழுந்திருந்தாள். அவள் காலைக் கடன்களை முடித்துக்கொண்டு வருவதற்குள் மாலதி எழுந்து வீட்டுக்குள் ஓடிவிட்டாள்.

கல்லூரிக்குப் புறப்படுவதற்குமுன்பு, சமையல் வேலைகளை முடித்துவிட்டுத்தான் குளிக்கச் சென்முள் பானுமதி. அதே வேளையில் 'பானு... பானு' என்று ஓடி வந்தாள் பாரதி.

''என்ன பாரதி?'' குளியல் அறையில் இருந்தவாறே குரல் கொடுத்தாள் பானுமதி.

''பானு நேற்று பயந்துவிட்டதாகக் கூறினுய் அல்லவா?''

''எதற்கு?''

''நீ வந்ததும் வராததுமாகப் பொலிஸ் வந்துவிட்டதேயென்று.''

''ஆமா அது மறுபடியும் பொலிஸ்...''

''இல்லை பானு. எங்கண்ணுவுக்கு 'அப்துல்லா அன் கோ'வில் வேலை கிடைத்துவிட்டதாம். போன் செய்தான்.''

''அப்படியா? சந்தோஷம் பாரதி'' என்று கூறிக்கொண்டே சேலையைச் சுற்றிக்கொண்டு வந்தாள் பானு.

''வேலை என்னமோ கிடைச்சுது. ஒழுங்காயிருப்பானே அல்லது இரண்டு மூன்று மாதமோ யார் கண்டது''என்ருள் பாரதி.

''பாரதி; இந்த முறை உங்கள் அண்ணு வந்தால் நானே கூறிவிடட்டுமா?'?

''நீயா, என்ன கூறப்போகிருய்?''

''வீட்டுக்கு நல்ல பிள்ளையாய் வாழுங்கள்'' என்று தான்.

''பானு'' என்று கூறிவிட்டுச் சிரித்தாள் பாரதி.

''ஏன் பாரதி சிரிக்கிறே?''

''பானு உன்னை எண்ணி நானே பயந்து சாகிறேன். நீ என்னடாவென்ருல் அவனுக்குப்புத்தி...'' என்று கூறிவிட்டு மீண்டும் சிரித்தாள் பாரதி.

''பாரதி! உங்கண்ணு இப்படி ஊர் சுற்றும் வேளையில் அவருக்கும் பணம் கொடுத்து உங்கள் அம்மா தானே கெடுக்கிருர்கள்.''

''பணமா? அம்மாவா?''

''ஆமா.''

''அது தான் இல்லை பானு. அவன் ஒரு சதம் கூட ஒருத் தரிடமும்வாங்க மாட்டான். இன்னும் சேலை துணி அது இது என்று வாங்கி வந்து தருவானேயன்றி பணம்கேளான். ஆனல், அம்மாவுக்குப் பணம் கொடுப்பான். எப்படிப் பணம் வருகிறது என்று தான் தெரியாது.

',ஏன் கேட்பது தானே?''

''கேட்டாலும் சொல்லான். அவன் தான் ஒரு விசித் திரப் பிறவி என்றேனே'' என்று சிரித்தாள் பாரதி.

''பாரதி உன் அண்ணனை ஒரு சமயம் புகழ்கிருய். ஒரு சமயம் ஏசுகிருய். ஒரு சமயம்...''

''பானு! அவன் ஊரும் உலகமும் மெச்ச வாழ்ந்தால் எனக்குச் சந்தோஷம் தான் பானு. நாங்கள் அவனைப்

பேசுறம். ஊரார் பேசுகிருர்கள். ஆனுல், அவன் கவலைப் படமாட்டான். பதிலுக்குச் சிரிப்பான். அந்தச் சிரிப்பிலே எத்தனையோ பெண்கள் மயங்கி அவன் பின்னே சுற்றுவார்கள்.''

''என்ன பாரதி? அப்படிப்பட்டவனு உன் ...''

''நீயே அவனைப் பார்த்தால்...... ஆனுல், நீ அப்படியில்லை பானு ஆனுல்...''

''மயங்கிவிடுவேன் என்று கூறுகின்ருயா? பாரதி இந்தப் பானு எவரிடத்திலும் தன்னை இழந்து விடமாட்டாள்'' என்று கூறிச் சிரித்தாள்.

## அத்தியாயம் ஐந்து

அன்று போயா தினம். காலை ஏழு மணியிருக்கும். மல்லிகைப் பந்தலில் பூக்கள் மலர்ந்து மணம் வீசிக் கொண்டிருந்தன. குண்டு குண்டாய்க்குலுங்கும் மல்லிகைப் பூக்களைக் கொய்து கையிலிருந்த தட்டில் போட்டவாறே, மேலும் மலர்களைக்கொய்து கொண்டு நின்ருள் பானுமதி. அவளுடைய பின்னழகு ஏறக்குறைய பாரதி போன்றிருந்தாலும், முன்னழகில் பாரதியைவிட மேலும் அழகானவள் என்றுதான் கூறவேண்டும். மேலே உயர்ந்திருந்த ஒரு கொத்து மலர்களை எட்டிப் பறிக்கக் கையை நீட்டியபோது அவள் விழிகளை யாரோ பின்புறம் நின்று கைகளால் மறைத்துப் பிடித்துக் கொண்டனர்.

''யாரது விடுங்கள் கையை'' என்று கூறித் திமிறித் திரும்பினுள் பானுமதி. அந்த வேகத்தில் கையிலிருந்த

மலர்த் தட்டும் கீழே விழுந்தது. அவள் எதிரே ஒரு வாலிபன் நின்றுகொண்டிருந்தான். அவன் காலடியில் மலர்த் தட்டும், மலர்களும் குவிந்து கிடந்தன.

''மன்னிக்கவேண்டும். நான் பாரதி என்று நினைத்து...'' என்று அவன் தயங்கினான். அவன் முகத்தில் தவறு செய்ததற்கான பயவுணர்வுகள் தோன்றியிருந்தன.

''பரவாயில்லை. பாரதி என்றுதானே தெரியாமல்...'' என்று பானுமதி பதில் கூறினாள். ஆனால், அவள் மனதில் அவனை எங்கோ பார்த்த ஞாபகம்.

''தெய்வத்திற்கு சமர்ப்பணமாகவேண்டிய மலர்கள் என்றால்...'' என்று கூறி மலர்த் தட்டை எடுத்து அவளிடம் கொடுத்துவிட்டு அவன் வீடு நோக்கிச் சென்றான்.

சந்தர்ப்பங்கள் சில சமயம் தவறான கருத்துக்களையும், முடிவுகளையும் கொண்டதாக அமைந்துவிடுகின்றன. அதே வேளையில் உண்மை வேறொன்றாக அமைந்துவிடுகின்றது. ஆழ்ந்து சிந்தித்தால் இதற்கெல்லாம் காரணம் மனோவேகம் - மற்றவர்களைப்பற்றி ஆராய்ந்து அறியு முன்பு அவர்களைப்பற்றி நாம் அவசரமாக ஊகித்து எடுத்துக் கொள்ளும் முடிபுகள்தான் என்பது புலனாகும். அப்படித் தெரிந்து கொண்ட பின் நாமே எமது பேதமையை எண்ணிச் சமாளித்துக் கொண்டு விடுகின்றோம். அப்படித்தான் பானுமதியும் மலர்த் தட்டைக் கொடுத்துவிட்டுச் சென்ற வாலிபனைப் பற்றிச் சிந்தித்தாள்.

பாரதி என்று தன்னை... என்று அவன் கூறியதால் சில சமயம் பாரதிக்கு நிச்சயம் செய்யப்பட்டவனாக இருக்குமோ? அப்படி இல்லையென்று அவள் மனத்தில் ஏதோ உறுத்தியது. அது என்ன? அவனை அவள் இதற்கு முன் எங்கோ சந்தித்திருக்கின்றாள். பாரதியின் கணவனாகப் போகிறவன் வெளி நாட்டிலிருந்து வந்திருக்க முடியாது, அப்படியானால் பாரதியை அப்படி உரிமையுடன்..,

சில சமயம் ரகுராமனாக இருப்பானோ? அப்படியும் இருக்க முடியாது. ரகுராமனைப்பற்றி அவள் அறிந்தவற்றிலிருந்து அவன் தவறு செய்து வருந்தியதாக அறிந்ததில்லை. சாதாரணமாகத் தெரியாமல் செய்த ஒன்றுக்கு அவன் பயந்து நடுங்கினானோ? அப்படியாயின் அவன் யாராயிருக்கும்? என்று பலவாறாக மனதை அலட்டிக்கொண்டு தன்னையே மறந்து நின்ற பானுவுக்குச் சமீபத்தில் 'மன்னிக்க வேண்டும்' என்ற குரல் கேட்டது. திடுக்குற்றவளாகத் திரும்பி, 'நீங்களா?' என்றாள்.

''ஆமாம். நானேதான்'' என்றான் அந்த வாலிபன்.

''என்ன வேண்டும்?''

''நீங்கள் இங்கு நடந்ததை யாரிடமும் கூறிவிடாதிருந்தால் போதும். ஏனெனில்... பிளீஸ், இதை நீங்கள் யாரிடமும் கூறிவிடாதிருந்தால் இருவருக்குமே நல்லது' என்று கூறிவிட்டு, அவள் பதிலுக்குக் காத்திராமல் வீட்டை நோக்கிச் சென்றான்.

அவளுக்கு ஒன்றுமே புரியவில்லை. அவன் ஏன் திரும்பி வந்து அப்படிச் சொல்லிவிட்டுப் போகவேண்டும் என்று நினைத்தவளாக, மீண்டும் மலர்களைப் பறித்துக் கொண்டிருந்தாள்.

''பானு, பானு'' என்று ஓடிவந்தாள் பாரதி.

''என்ன பாரதி?'' என்று ஏதும் நடவாததுபோல் விசாரித்தாள் பானுமதி.

''பானு, எங்கள் ரகு அண்ணா வந்திருக்கிறான். இதை உனக்கு அறிவித்துவிட்டுப் போகவே வந்தேன்'' என்றாள்.

''மிஸ்டர் ரகுராமனா'' என்று வியப்புற்றாள் பானு.

''ஏன் பயமாகவிருக்கா பானு?''

''நீ நினைக்குமளவுக்கு இல்லை பாரதி. ஆனால்......'

''சொல்லேன். சொல்ல வந்ததை ஏன் இடையில் நிறுத்திவிட்டாய்?''

''பாரதி! நீ என்னை நன்கு புரிந்துகொண்டவள் என்பதால் கூறுகிறேன். நீங்கள் நினைக்குமளவுக்கு அண்ணன் பொல்லாதவனாக இருப்பான் என நான் நினைக்கவில்லை. ஆனால்...''

''பானு! நீ எங்கண்ணனைப் பார்த்தியா பானு?''

''சற்று முன் பார்த்தேன் பாரதி. வேறு பல இடங்களிலும் பார்த்த ஞாபகம்.''

''நிஜமாகவா?''

''ஆம்.''

''பானு, அப்படியானால் உள்ளே வா. அவனுக்கு உன்னை அறிமுகம் செய்து வைக்கிறேன்'' என்று பானுவை கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு வீட்டுக்குள் நுழைந்தாள்.

அதே வேளையில் ரகுராமன் பாரதியை அழைக்கும் குரல் கேட்டது. அவன் குரல் ஓயுமுன்பே ''ரகு, ரகு நில்லடா'' என்று அன்னபூரணி கூறிக்கொண்டே ஓடிவந்தாள்.

பாரதியும், பானுமதியும் முன் ஹோலிலேயே நின்று விட்டனர். அவர்கள் நின்ற இடத்திலிருந்து பார்க்கும் பொழுது பின் பக்கம் தெரியாது. ஆனால், அங்கு கதைப்பவை நன்கு கேட்கும்.

''ஏன் அம்மா?'' என்று ரகு திரும்பக் கேட்டான்.

''ரகு! உன் தங்கையின் சிநேகிதியாம் ஒரு பெண், எங்கள் சின்ன வீட்டில் குடியிருக்கிறாள். நீ அந்தப் பக்கம் போகாதே.''

''ஏன் போனால் என்ன?''

''நீ போவதால் அந்தப் பெண்ணுக்குக் கெட்ட பெயர் ஏற்படும். அந்தப் பெண் நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவள்,

நரியூருக்கு அஞ்சி புலியூருக்கு வந்தமாதிரி இந்த வீட்டுக்கு வந்திருக்கிருள். வந்ததும் வராததுமாக ஏண்டா நீ அங்கு போய்...''

''அம்மா? மற்றவர்கள் என்னைப் பற்றி எப்படி வேண்டுமானாலும் பேசட்டும். கதைக்கட்டும். நான் கவலைப்படமாட்டேன். ஆனால், நீங்கள் காரணமில்லாமல் இப்படிக் கூறும்பொழுது நான் எவ்வளவு வேதனைப்படுகிறேன் என்பது உங்களுக்குத் தெரியுமா?''

''ரகு! ஊரும் உலகமும் உன்னைப்பற்றித் தூற்றுவதைக் கேட்டு என் பெற்ற வயிறு எரிவது உனக்குத் தெரியாதா?''

''அம்மா! பொறாமைப்பட்ட சனங்கள் கண்டபடி கதைப்பதைக் கேட்டு நீங்கள் வீணுக வேதனைப்படுவதுடன் என்னையும் ஏனம்மா...?''

''ரகு! ஏண்டா நீ இப்படியெல்லாம் கதைத்து சொல்லுக் கேளாது திரிகின்ருய்?''

''அம்மா! நான் யாருக்கு என்ன செய்தேன்? யார் குடியைக் கெடுத்தேன்? என்ன அறிந்து என்மீது இப்படிப் பழி சுமத்துகிறீர்கள்?''

''அதுதாண்டா எனக்கும் புரியவில்லை. ஆனால், நெருப்பில்லாமல் புகை வருமா?''

''அம்மா! அம்மா! நான் இதனுல் தானம்மா வீட்டுக்கே வராதிருந்தேன். இப்போ நல்ல இடத்தில் வேலை கிடைத்த சந்தோஷத்தில் இங்கு வந்ததும் வராததுமாக என்னை ஏனம்மா சித்திரவதை செய்கின்றீர்கள்? உங்கள் கதைகளைக் கேட்கும் பொழுது இந்த வீட்டை விட்டல்ல, இந்த உலகத்தைவிட்டே போய்விடணும் போலிருக்கு'' என்று அவன் கூறுகையில் ஓடோடியும் சென்ருள் பாரதி.

அவன் விழிகள் கலங்கி நின்றதை இன்றுதான் முதன் முதலாகப் பார்க்கின்றாள் பாரதி. அவன் நின்ற நிலையைப் பார்த்ததும் பாரதிக்கும் விழிகள் கலங்கிவிட்டன.

''என்னண்ணு! நீங்கள் எதற்கும் கலங்காதவன் என்றுதான் இதுவரை நினைத்தேன். இப்படிச் சின்னப் பிள்ளை மாதிரிக் கூறுவது சரியா?''

''பாரதி! எப்படி வேண்டுமானாலும் யாரும் எதுவும் சொல்லட்டும். நான் கவலைப்படமாட்டேன். ஆனால், அம்மாவே இன்று இப்படிச் சொல்லிய பின்பு நான் யாருக்காக வாழணும்?''

''போங்கண்ணு, அம்மா தெரியாத்தனமாகச் சொல்லி விட்டார்கள். பானு உங்களைப் பார்க்கணும் என்று வந்தாள். இங்கே நடந்த ரகளையைக் கேட்டு முன்னுக்கே நின்றுவிட்டாள்.''

''யார் அது பானு?'' என்றான் ரகு.

''என் சிநேகிதி.''

''ஓ! உன் சிநேகிதியா? அவர்களால்தான் இந்த ரகளையே ஏற்பட்டது. அவர்கள் என்னைப் பார்க்கவும் வேண்டாம். நான் அவர்களைப் பார்க்கவும் வேண்டாம். அம்மா நிம்மதியாயிருக்கட்டும் பாரதி. நான் இன்று மாலையே புறப்படுகிறேன் பாரதி'' என்று கூறிவிட்டுச் சென்றுவிட்டான்.

அவன் சென்றதும் பாரதி பானுவைத் தேடி வந்தாள். அவள் அங்கே இல்லை. அவள் தன் வீட்டிற்குச் சென்றுவிட்டதை உணர்ந்த பாரதி, அங்கே போனாள். பானு கலங்கிய விழிகளுடன் சோபாவில் அமர்ந்திருந்தாள். அவள் பறித்துவந்த மலர்த் தட்டு மடிமீது கிடந்தது. அவள் விழிகளினின்றும் உதிரும் கண்ணீர் மல்லிகை மலர்கள் மீது பன்னீராகச் சிந்திக்கொண்டிருந்தது.

''பானு, நீ ஏன் வந்திட்டாய்?'' என்று அவள் தோள்களைப் பற்றினுள் பாரதி.

''ஒன்றுமில்லை பாரதி. நான்... நான்...''

''அண்ணு அப்படிக் கூறிவிட்டானென்று வருத்தமா பானு?''

''இல்லை பாரதி. உன் அம்மா அவரை அப்படிக் கூறியிருக்கக் கூடாது; பாவம், அவர் அப்போது கூறியதைக் கேட்டபோதே என் மனம் பட்ட பாடு நீ அறியமாட்டாய். ஆனுல், உன் அம்மா அதை உணராது 'வெந்த புண்ணில் வேல் ஏற்றியது' போன்று மீண்டும் மீண்டும்...'' என்று நிறுத்தினுள்.

''பானு! உன்னைப்போல எல்லோரும் இருக்க முடியுமாடி? என்ன இருந்தாலும் நீ பெரியவள்தான்.''

''பாரதி! ஒருவன் தான் செய்யும் தவறுக்காக வருந்துவானுயின், அவன் என்றுமே கெட்டவனுக இருக்க மாட்டான். இருக்கவும் முடியாது. நீ என்ன நினைக்கிருய் பாரதி?''

''அப்படியிருக்கலாம் பானு. ஆனுல் அண்ணன் ரகு இப்படிப் பேசி என்றுமே நான் பார்த்ததில்லை.''

''வெளியே அவர் அப்படித்திரிந்திருக்கலாம். ஆனுல், அவர் மனத்தினுள்ளே குமுறிக்கொண்டிருந்திருப்பார். ஏன் பாரதி! இன்று மாலையே புறப்பட்டுவிடுவாரா?''

''ஆமா, அவன் சொன்னுல் சொன்னதுதான். நிச்சயமாகப் புறப்பட்டிடுவான். நீ பயப்படாதே.''

''போடி பைத்தியம், அவர் அப்படிப் போகக் கூடாது. சரி நான் பார்த்துக் கொள்கிறேன். பாரதி, உன் அண்ணன் என்னுல் போவதை நான் தாங்கிக்கொள்ள முடியாது'' என்னும்போது அவள் விழிகளில் மீண்டும் நீர் முத்துக்கள் உருண்டோடின.

"பானு" என்று அவளை அணைத்துக்கொண்டாள் பாரதி.

மனித வாழ்வின் விசித்திர இயல்புகளை அளவிட்டுக் கூறமுடியாதுபோலும். இல்லையெனில் பானுமதியின் உள்ளத்தில், அப்படியொரு துணிவு ஏற்பட்டிருக்காது.

## அத்தியாயம் ஆறு

அன்று மாலை மூன்றரை மணியளவில் சொல்லியும் கேளாமல் புறப்பட்டுவிட்ட ரகுராமனை, வீட்டிற்கு வெளியே நடை பாதையில் நின்று பானுமதி "குட் ஈவினிங் மிஸ்டர் ரகுராமன்" என்று தடுத்து நிறுத்தினாள்.

"குட் ஈவினிங். நீங்கள்...?"

"நான்தான் மிஸ் பானுமதி."

"...ஓ! நீங்கள்தான் அந்த... ஐ ஆம் வெரி சொறி" என்று கூறிப் புறப்பட்டவனை "நில்லுங்கள் மிஸ்டர்" என்ற குரல் தடுத்தது.

"ஜேஸ், வட்டியு வோன்ற்?" என்ருன்.

"என்னுல்தானே நீங்கள் புறப்படுகின்றீர்கள்?"

"இல்லை. எனக்கு இங்கிருக்கப் பிடிக்கவில்லை."

"அதற்குக் காரணம் நான்தான். இல்லையா மிஸ்டர் ரகுராமன்."

"நான் இங்கு வந்தபோது உங்கள் அம்மா கூறிய யாவற்றையும் கேட்ட பின்பும் இங்கே தங்க முடிவு செய்தேன். ஏன் தெரியுமா?"

''எனக்கு என்ன தெரியும்?''

''என்னில் எனக்கு நம்பிக்கையுண்டு என்பதால்.''

''நான்...?''

''நீங்கள் தன்னம்பிக்கை இல்லாதவர். கோழை மனம் கொண்டவர்போலப் பயந்து ஓடுகிறீர்கள்.''

''மிஸ் பானுமதி!''

''நான் உங்களுக்கு என் மனதில் உள்ளதையெல்லாம் வெளிப்படையாகவே கூறுகின்றேன் மிஸ்டர். ஒரு பெண் கெட்டுப்போவதற்கு ஆண் காரணமில்லை. அவளேதான் காரணம். ஆண் அவள் கெட்டுப்போகத் துணைக் காரணி யாகுகிருன். நான் உங்களைக் கண்டோ, அல்லது கேள்விப் பட்டதாலோ பயந்து விடவில்லை. கேவலம் ஒரு பெண் ணுக்கு அஞ்சி ஓட உங்களுக்கு வெட்கமாயில்லை. நீங்கள் ஆண்பிள்ளையல்லவா?''

''மிஸ் பானுமதி, நீங்கள் வாயாடியாயிருக்கலாம். ஆனுல், குற்றம் சுமத்தப்பட்டவன் நிரபராதி. தீர்ப்பு வழங்குபவள் பெற்ற அன்னை. மற்றவர்கள் நன்மை கருதி பெற்றவளின் அமைதியை விரும்பியே நான்...''

''தர்க்க ரீதியில் நீங்கள் கூறலாம். ஆனுல், உண்மை வேறு. தவறு செய்துவிடுவேன் என்ற பயத்தினுல் நீங்கள் போவதாக நான் கூறுகிறேன்.''

''பானு'' என்று கத்தியவன் ''வெரி சொறி மிஸ் பானுமதி. என்னை நீங்கள் புரிந்து கொள்ளவில்லை'' என் ருன் நிதானமாக.

''புரிந்து கொண்டதை வைத்துத்தான் கூறுகிறேன் மிஸ்டர். ஒரு தாய் தன் மகனைப்பிரிந்திருப்பதால் அமைதி பெறுவாள் என்ற உங்கள் அசட்டுத்தனமான கருத்தைப் புரிந்து தான் பேசுகிறேன். நீங்கள் குற்றமற்றவர் என் பதை நீங்கள் வீட்டிலிருந்தே நிரூபிக்க வேண்டும். வீட்டை

விட்டுப் போவதன் மூலமல்ல'' என்று அவன் கூறி முடிக்கும் போது வாசலில் ஒரு வாடகைக் கார் வந்து நின்றது. அதிலிருந்து இறங்கினுள் ஒரு நவநாகரிக மங்கை. அவள் ரகுராமனைப் பார்த்து புன்முறுவல் பூத்தவாறே ''குட் ஈவினிங்'' என்ருள்.

பானுமதி உட்பட பாரதி, அன்னபூரணி அனைவரும் திகைத்தவர்களாய் அவளையே பார்த்தபடி நின்றிருந்தனர்.

## அத்தியாயம் ஏழு

வானத்தில் ஆயிரமாயிரம் வெள்ளிகள் நிலவாக ஜொலித்தாலும் ஒரேயொரு வெண்ணிலவு எப்படிப்பலர் கவனத்தையும் தன்பாலீர்க்கின்றதோ, அதோ போன்று பானுமதியின் உள்ளத்திலுள்ள பல்வேறு பிரச்சினைகளையெல்லாம் சிறியதாக்கிவிட்டது ரகுராமனுடைய நினைவு. அவன் என்ன மனிதன்? உண்மையிலே அவன் ஒரு உதவாக்கரைதானு? பலர் முன்னிலையில் அவளுடன் சிரித்துக் கதைத்துக் கொண்டு செல்லும் போது மற்றவர்கள் தன்னைப் பற்றி என்ன நினைப்பார்கள் என்ருவது சிந்தித்தானு? அவள் சிந்தனைக் கோட்டின் எல்லைவரை அவன் வடிவமே பூதாகாரமாக வளர்ந்து நின்றது.

''என்ன பானு ஒரேயடியாய் சிந்தனையில் மூழ்கி விட்டாய்?'' பாரதியின் குரல் கேட்டுத் திடுக்கிட்டு உணர்வு பெற்றவளாய் அவளைப் பார்த்துப் புன்முறுவல் பூத்தாள் பானுமதி.

''அவள் யார்? உனக்குத் தெரியுமா பாரதி?''

"அவளா? யாருக்குத்தெரியும். யாரோ புதிய பறவை. நாம் நினைத்தது நடந்து விட்டது. பார்த்தியா பானு?"

"பைத்தியம். கண்ணால் காண்பது பொய்யாயிருக்கலாமல்லவா?"

"பானு! நீ கூட அண்ணன் பேசுவது போல் பேசுகின்றாயே."

"ஆமாம் பாரதி. நான் சற்று முன் ஒரு சபதம் எடுத்திருக்கிறேன்."

"என்ன சபதம்?"

"உன் அண்ணனைத் திருத்துவது என்று. அவர் வழியில் சென்று தான் திருத்த வேண்டும்."

"பானு! நீ ஏன்டி நெருப்போடு விளையாட நினைக்கிறாய்? என் அண்ணன் தான். ஆனால், அவனோடு பழகுவது எனக்கு விருப்பமில்லை."

"பாரதி! நெருப்பிலே நான் விழுந்து விடாமல் அந்த நெருப்பையே நல்லதாக மாற்றியமைக்க என்னால் முடியும் பாரேன்!" என்று கூறிவிட்டு வீடு நோக்கிச்சென்றாள்.

"பாம்பின் கால் பாம்பறியும்" என்று தமிழில் ஓர் முதுமொழியுண்டு. அதுபோல் பெண் உள்ளம் ஒன்றைஇன்னொரு பெண் உள்ளத்தால் அறிந்து கொள்ளமுடியும் என்று சில பெண்கள் கூறுவது எவ்வளவு அபத்தம் என்பதை உணர்ந்து கொண்டாள் பாரதி.பானுமதி பற்றி அவளால் சரியாகப் புரிந்து அறிந்து கொள்ளமுடியவில்லை.ரகுராமனைப் பற்றி அவள் ஏன் அக்கறை கொள்ள வேண்டும். சில சமயம் அவள் மனதில் அவனுடைய அழகுக்கவர்ச்சி... அப்படியும் அவளால் நினைக்க முடியவில்லை. பேசாமல் சென்று விட்டாள்.

மறுநாள் காலை விடிந்ததும் விடியாததுமாக ரகுராமனைத் தேடிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் இமானுவேல் வந்து சேர்ந்து விட்டார். அவரை வரவேற்று உள்ளே கூட்டிச் சென்றான் ரகுராமன். யன்னலில் நின்று பார்த்துக்கொண்

டிருந்த பானுவுக்கு என்ன தோன்றிற்ருே? உடனேஅவளும் பாரதியைத் தேடிக் கொண்டு வருபவள் போல் அங்கே வந்து அவர்களுக்குத் தெரியாத இடத்தில் மறைந்து நின்று கொண்டாள்.

''ரகு! உன்னைப் பார்க்கவென்று தான் அங்கு வந்தேன். சந்திக்க முடியாததால் இன்று அதிகாலையே வந்தேன். எப்படிப் புதிய இடம்?''

''பரவாயில்லை இன்ஸ்பெக்டர். அங்கிருப்பவர்கள் எல்லோரும் எமகாதகர்கள்.ஆனுல்,அப்துல்லாவின் பிறைவேட் செக்கிறட்டரி மிஸ் ரோஸி மட்டும் நைஸ்'' என்ருன்.

''அவளோடுதான் நேற்றுச்சினிமாவுக்குச் சென்ருயா?''

''அதெப்படி உங்களுக்குத் தெரியும்?''

''நான் பொலிஸ் இன்ஸ்பெக்டர்.''

''ஏன் சார் நான் அப்படிப் போனது தவறு என்று வழக்குத்தொடரப்போகின்றீர்களா?''என்றுகேட்டுவிட்டுச் சிரித்தான். இன்ஸ்பெக்டரும் சேர்ந்து சிரித்தார்.

''ரகு, நீ என்னைக் கேட்டதும் நான் பல இடங்களில் முயற்சி செய்தேன். கடைசியில் அப்துல்லாவைக் கைக்குள் போடக் கூடிய ஒரு ஆளைத் தேடிப் பிடிக்கும்படி எங்கள் சி.ஐ.டி. கபூரைக் கேட்டுப்பார்த்தேன். ஆனுல், நீ முந்திக் கொண்டாய்.இனியும் சிறுபிள்ளைத்தனமாக விளையாடாது கவனமாக வேலை செய்து நல்லபெயர் எடுக்கத்தெண்டித்துக் கொள். உனக்கு அப்துல்லாவைப் பிடிக்காவிட்டாலும் செக்கிறட்டரியை பிடித்து விட்டது. அவள் மூலம்பிறமோஷனுக்கு வழிசெய்து நம்பிக்கையுடையவனுக நடந்து கொள். நான் வரட்டுமா?''

''நன்றி சார்!ஒருநாள் நான் செய்த உதவிக்காக என்னை இவ்வளவு தூரம் மதித்து வந்ததற்கு நான் என்றும்...''

''நோ...நோ...உன்னை என் பிள்ளை போல் நினைத்திருக்கிறேன். யார் உன்னைத் தூற்றினுலும் வெறுத்

தாலும் நான் அப்படிச் செய்யமாட்டேன். 'அப்துல்லா அன் கோ'வில் பொறுப்பற்ற தன்மையுடன் நடந்துகொண் டால் உன்மீது சிறு சந்தேகம் ஏற்பட்டாலும் கம்பி யெண்ண வைத்துவிடுவான். நம்பிக்கை ஏற்படும்படி நடந் தால் ஆறு மாதத்தில் உனக்கு இரட்டிப்புச் சம்பளமும் தருவான். புத்திசாலியாய் நடந்துகொள்'' என்று கூறி விடைபெற்றுச் சென்றார் இன்ஸ்பெக்டர் இமானுவேல்.

அவரை வழியனுப்பிவிட்டுத் திரும்பியபோது அவனை எதிர்நோக்கியிருந்த மூவரையும் ஏறிட்டுப் பார்த்தான்.

''என்னடா பார்க்கிறாய்? அந்த மனிதன் சொன்னவை ஞாபகமிருக்கா?'' என்றாள் அன்னபூரணி.

''அம்மா! அவர் வந்து என்னை நம்புமளவுக்கு என்னைப் பெற்ற நீங்கள்...''

''டேய் ரகு! என் கண்முன்னாலேயே அந்தச் சிறுக்கி வந்து அழைத்துச் சென்றாளே... நான் எப்படியடா உன்னை நம்புவது?''

''அம்மா! அவள் என் கம்பெனியில் வேலை செய்பவள்; சினிமாவுக்கு வரும்படி அழைத்தாள். அதில் என்ன தவறு இருக்கென்று எனக்குத் தெரியவில்லை.''

''நீயும் ஒரு தகப்பனாய் இருந்து, உனக்கு ஒரு பிள்ளை இப்படி நடந்தால்...''

''போதும் அம்மா, விடிந்ததும் விடியாததுமாக நீங் கள்...'' என்று கூறிவிட்டு குளியலறையை நோக்கிச் சென் றான்.

''பாத்தியாடியம்மா! நான் சொல்லுகிறேன். அவன் தன்பாட்டுக்குப் போறான்'' என்று கூறி பானுவைத் திரும் பிப் பார்த்தாள் அன்னபூரணி.

''அம்மா! ஆடுற மாட்டை ஆடிக் கறக்கவேண்டும் என்று சொல்லுவார்கள். அவருடைய இஷ்டத்துக்கு விட்

டுத்தான் திருத்தவேண்டும். திடீரெனத் திருத்த முடியாது'' என்றாள் பானு.

''நீ வாத்தியாரம்மாதான். ஆனால், அவன் படிக்கிற பையனில்லையே. பெரிய தடிக் கழுதை. அவனைத் திருத்த உன் வழி பயன்பட்டு வராதடியம்மா'' என்று கூறிவிட்டு அடுப்பங்கரை நோக்கிச் சென்றாள்.

## அத்தியாயம் எட்டு.

அன்று கல்லூரியில் பானுமதிக்குச் சில புதிய அனுபவங்கள் ஏற்பட்டன. ரகுராமன் வீட்டில் அவள் இருக்கும் செய்தியை திருமதி விமலா ராமச்சந்திரன் மணந்துபிடித்து, அந்தக் கதையை கல்லூரியின் சகல ஆசிரியர்களுக்கும் பரப்பிவிட்டாள். ரகுராமனுடைய குணாதிசயங்களைப்பற்றியும், அங்கே குடியிருக்கச் சென்ற பானுமதி பற்றியும் கேலிப் பேச்சுக்கள் தாராளமாய் நடந்தன. பானுமதி அவற்றைப் பொருட்படுத்தாவிட்டாலும், அவள் மனதில் அவளையறியாமல் ஒரு வேதனை குடிகொண்டிருந்தது என்னவோ மறுக்கமுடியாத உண்மையே.

பானுமதி குடிவந்ததன் விளைவோ அல்லது ரகுராமன் திருந்திவிட்டதன் அறிகுறியோ தெரியாது, ஒரு மாதமாக அங்கேதான் தங்கியிருந்தான் ரகு. ஆனால், அவனால் குறிப்பிடத்தக்க எதுவிதமான அசம்பாவிதங்களும் நடைபெறவில்லை. ஒரு மாத இடைவெளியில் சில தடைவைகளில் அவள் ரகுராமனை நேரடியாகச் சந்தித்திருக்கின்றாள்.

ஆனால், பேச்சுவார்த்தை எதுவும் கிடையாது. அவனுடைய அலட்சியப் போக்கு அவளை என்னவோ செய்தது. ஆனால், அவன் அப்படி நடந்துகொள்கிறான்.

அவனைப்பற்றி அவள் அறிந்தவற்றுக்கும், அவன் நடந்துகொள்வதற்கும் மலைக்கும் மடுவுக்குமுள்ள வித்தியாசம் தென்பட்டது. அவன் தன் தங்கை பாரதியோடு அரட்டையடிக்கும்பொழுது எவ்வளவு குதூகலத்துடன் காணப்படுகின்றான். அவனுடைய உருவமும், பேச்சும், கவர்ச்சிகரமான புன்னகை என்பன எந்தப் பெண்ணின் உள்ளத்திலும் ஆசையை ஏற்படுத்தவே செய்யும். அவனுடைய அந்தப் புறக் கவர்ச்சியைப் பார்த்து, நெருப்பில் விழும் விட்டிலைப்போன்று எத்தனை பெண்கள் தங்கள் பெண்மையை இழந்தார்களோ?

பானுமதியின் மனதில் எண்ண அலைகள் எழுந்து ஆர்ப்பரித்தன. அந்த நினைவலைகள், அவளது பெண்மை உணர்வின் இனிய சிந்தனைகளைத் தொட்டுத் தழுவியபோது ரகுராமன் நல்லவனாயிருந்தால்... அவனே தனது கணவனாக... என்று எண்ணிய பொழுது, 'நிலவே என்னிடம் மயங்காதே—நீ நினைக்கும் இடத்தில் நான் இல்லை' என்ற சினிமாப்பாட்டு வானொலியிலிருந்து காற்றோடு வந்து அவளை நினைவுலகுக்குக் கொண்டுவந்தது.

''நினைவு! வெறும் நினைவு! நான் ஏன் இப்படியானேன்?'' என்று தன்னுள் வெட்கப்பட்டவளாகத் திரும்பியபொழுது, தன்னையே பார்த்துக்கொண்டு நின்ற பெண்ணைக் கண்டு திகைப்படைந்தாள் பானுமதி.

''என்ன பானுமதி! கனவுலகில் சஞ்சரிக்கின்றீர் போலிருக்கே?'' என்று கேட்டாள் அவள்.

''தன்னை நன்கு அறிந்தவள் போன்றும், பல நாட்கள் பழகியவள் போன்றும் கேட்கும் அவள் யார்?'' என்பதே பானுமதியின் உள்ளத்தில் எழுந்த கேள்வியாகும். அவள்

உள்ளத்தைப் புரிந்துகொண்டவள் போன்று, ''என்னை யாரென்று தெரிந்துகொள்ள விரும்புகின்றீர் இல்லையா? நான் மிஸிஸ் ராஜாராமன். பாரதியின் அண்ணி. உன்னைப் பற்றி பாரதி யாவும் கூறினாள்'' என்றாள்.

''வாருங்கள்; உட்காருங்கள்; உங்களைப் பற்றியும் பாரதி கூறினாள். ஆனால், இன்றுதானே பார்க்கின்றேன். மிஸ்டர் ராஜாராமனும் வந்திருக்கின்றாரா?''

''இல்லை பானு, அவர் மாலை ஆறு மணிக்குத்தான் வருவார். ரகு வந்திருக்கிறான். அதுவும் ஒரு மாதத்துக்கு மேலாக வீட்டில் தங்கியிருக்கிறான் என்று அறிந்து வந்தேன். அவன் ஏன் வீட்டோடு தங்கியிருக்கிறான் என்பதை இங்கு வந்த பின்புதான் தெரிந்துகொள்ள முடிந்தது.''

''வாழ்க்கையில் பலரும் பலவிதமாகக் கற்பனை செய்வதுண்டு. ஆனால், கற்பனைவேறு, வாழ்க்கை வேறு. வாழ்க்கை யதார்த்தமானது. கற்பனை நினைவுடன் நின்றுவிடுவது'' என்றாள் மோகினியின் உள்ளக் கருத்தைப்புரிந்துகொண்டவளான பானு.

''என்ன பானு? நீ ஏதோ புரியாத வார்த்தைகள் பேசுகின்றாய்?'' என்றாள் மோகினி.

''தனக்கும் மற்றவர்களுக்கும் புரியக்கூடிய மொழியில் நாகரிகமாகப் பேசுவது சில வேளைகளில் ஒருவருடைய மனதைப் புண்படுத்தவும் கூடுமல்லவா?''

''ஏன் பானு, இங்கே ரகுராமனைப்பற்றித் தெரிந்து கொண்ட பின்புமா குடியிருக்க விரும்பினாய்?''

''பாரதி கூறியிருப்பாளே?''

''நீ சரியான நெஞ்சழுத்தக் காரியாக இருப்பாய் பொலிருக்கே?''

''சில இடங்களில் சிலர் முன்னிலையில் அப்படியிருக்க வேண்டியிருக்கிறது'' என்றார்.

''என்ன இருந்தாலும் நீ சின்னப் பெண். ரகு ரொம்பப் பொல்லாதவன். அழகியபெண்கள் அவன் கண்ணில் பட்டால் தொலைந்தார்கள். உன்னைப் பார்த்தால் நல்லவளாய் தோன்றுகின்றாய். நீ இங்கு இருப்பது நல்லதாகப் படவில்லை பானு'' என்று எழுந்தாள் திருமதி மோகினி ராஜாராமன்.

அவளுடைய தோற்றம், அவளுடைய பேச்சு, அவள் அலங்காரம் யாவும் அவளை ஒரு நல்ல குடும்பப் பெண் போல் கணிக்கத் தோன்றினாலும், அவள் உள்ளத்தில் ஏதோ ஒரு கோளாறு இருப்பது போன்று உணர்ந்தாள் பானுமதி.

ரகுவைப் பார்க்க வந்திருக்கும் அவள், தன் மைத்துனனைப் பற்றிக் கேவலமாகப் பேசுகின்றாள். எல்லோருடைய செயலும் மேலும் ரகுராமனை ஒரு கவர்ச்சிப் பொருளாக்கிக் கொண்டே வந்தன. இதேவேளையில் ஒரு வாடகை வண்டி வந்து வாசலில் நின்றது. அதிலிருந்து ரகுராமனும் இன்னொரு இளம் பெண்ணும் இறங்கி வீட்டுக்குள் சென்றார்கள்.

## அத்தியாயம் ஒன்பது

**மா**லைவேளையின் மந்தகாசமான நிலைமையிலும் பானுமதியின் மனம் ஒரு நிலையில்லாது தவித்துக்கொண்டிருந்தது. அவள் மனதில் தோன்றும் நினைவுகள் ஒழுங்கீனமானதாயும், திடமற்றதாயும் இருந்தன. அவளுடைய நினைவுகளுக்கு மாறாகவே அங்கு நடைபெற்ற யாவும் இருந்ததால், அவள் ஒரு முடிவுக்கும் வரமுடியாது திணறிக்கொண்டிருந்தாள். அதேவேளையில் பாரதி அவளைத் தேடிக்கொண்டு வந்தாள்.

''என்ன பானு? கடும் சிந்தனையிலீடுபட்டிருக்கின்றாய் போலிருக்கே?''

''உண்மைதான் பாரதி, உன் சின்னண்ணாவுடன் வந்தவள் யார்?''

''அவளா? கீதா. எங்கள் அண்ணியின் தங்கை.''

''கீதா உன் அண்ணியின் தங்கையா?''

''ஆமாம், அவளை உனக்குத் தெரியுமா?''

''தெரியும். வாசிற்றியில் பார்த்திருக்கிறேன். அவளுடைய குணதிசயம் பற்றியும் எனக்குத்தெரியும். அவள்....''

''எனக்குத் தெரியும் பானு. அவளை ரகுவின் தலையில் கட்டிவிட அவள் திரிகின்றாள்.''

''நல்ல பொருத்தமடி பாரதி.''

''நான் வருகிறேன் பானு. அண்ணா நாளை கொழும்புக்குப் போகிறான்.''

''யார்? மிஸ்டர் ரகுராமனா?''

''ஆமா. ஏதோ கம்பெனி விடயமாகப் போகிறானாம். திரும்ப நாளாகும் என்றும் கூறினான். நான் வாரேன் பானு. ஏன் வீட்டுக்குள்ளேயே அடைந்து கிடக்கின்றாய்? பெரியண்ணாவும் வருவார். அங்கே வாயேன். உன்னை அவர்களுக்கு அறிமுகம் செய்து வைக்கிறேன்.''

''எதற்கு இந்த அறிமுகமெல்லாம். நீ போ பாரதி. நான் பொறுத்து வருகின்றேன்'' என்றாள். பாரதி விடைபெற்றுச் சென்றாள்.

பானுவின் மனதில் கீதாவைப் பற்றிய நினைவுகள் தோன்ற ஆரம்பித்தன. கீதா பல்கலைக்கழகத்தில் கண்டவர்களோடும் சினிமாவென்றும், பூங்காவென்றும் சுற்றித் திரிந்ததும், அவளைப் பற்றிப் பலரும் கூறிய அருவருக்கத்தக்க கதைகளையும் நினைத்த பொழுது... சீச்சீ என்ன பிறப்புக்கள் என்றே எண்ணத் தோன்றியது.

மாலை 6 மணிக்கு ஐந்து நிமிடம்தானிருக்கும். முன்னிரவு நேரமாகையினால் இருளரக்கன் தன் வலையை விரிக்கத் தொடங்கியிருந்தான். பாரதி அழைத்துவிட்டுச் சென்றதால் அவளைப் பார்க்கச் சென்றாள் பானுமதி. முன் ஹோலைத் தாண்டிச் சென்ற பொழுது ஒரு அறைக்குள் மோகினியின் பேச்சுக்குரல் கேட்டது, ரகுராமனுடைய பெயர் அடிபட்டதால், அவர்கள் அவனைப் பற்றி என்ன கதைக்கின்றார்கள் என அறிய விரும்பியது அவள் மனம்.

''கீதா நாளை மாலையோ, மத்தியானமோ அவன் புறப்படுகின்றான். அதற்கு முன்பு நீ உன்னால் முடிந்தளவு அவனிடம் முடிவு கேட்டுவிடு.'' மோகினியின் குரல்.

''அக்கா, அவர் பேசுவது, சிரிப்பது எல்லாம் கவர்ச்சிகரமாய் இருக்குத்தான். ஆனால், அவர் நீங்கள் நினைப்பது போல் இருப்பாரென என்னால் நம்ப முடியவில்லை. நீங்களே கேட்டுப் பார்ப்பதுதானே?'' கீதாவின் குரலெனப் புரிந்து கொண்டாள் பானுமதி.

''போடி பைத்தியம். அவன் உன்னைத் தீண்டப் பயப்படுவான். அண்ணனுக்குப் பயந்து உன்னிடம் அப்படி நடக்கின்றான். இன்று இரவு நீ எப்படியும் அவன் அறைக்குச் சென்று... ஏன்டி நான் சொல்வது புரிகின்றதா? பின்பு நானே எல்லாம் கவனித்துக்கொள்ளுகின்றேன். நான் ஏன் கூறுகின்றேன் என்றால், இங்கே அவுட் ஹவுஸில் ஒருத்தி குடிவந்திருக்கிறாளே, அவள் அவனைக் கைக்குள் போடுமுன் நம் திட்டம் நிறைவேறவேணும். புரிகிறதா?''

''சரியக்கா''

''இரவு ஒன்பது மணியளவில் அவன் அறைக்குச்செல். ஞாபகமிருக்கட்டும்...'' என்று கூறிவிட்டுத் தொண்டையைக் கனைத்துக் கொண்டாள் மோகினி.

மேலும் பானு அங்கு நிற்கவில்லை. அவள் தான் அங்கு வந்தது யாருக்கும் தெரியாமல் திரும்பிச் சென்றுவிட்டாள்.

அவளுடைய மனம் தீவிரமாக வேலை செய்தது. மோகினியின் கூற்றுப்படி பார்க்கப் போனால், ரகுராமனைக் கெடுப்பது இவர்களைப் போன்ற பெண்களேயன்றி அவன் தன்னைத்தானே கெடுத்துக்கொள்ளவில்லை, கீதாவை ரகுவின் தலையில் கட்டியடிக்க முனையும் மோகினியின் நோக்கம் என்னவாயிருக்கும்? ரகுராமனுக்குரிய சொத்தின் மேல் உள்ள ஆசையா? அல்லது அந்த வீட்டின் ஆதிக்கத்தைத் தங்கள் கைக்குள் கொண்டுவர வேண்டுமென்ற பேராசையா? பதில் தெரிந்து கொள்ள முடியாத கேள்விகளோடு போராடிவிட்டு, பள்ளிக்கூட மாணவிகளுடைய அப்பியாசப் புத்தகங்களைப் பார்வையிட ஆரம்பித்தாள்.

## அத்தியாயம் பத்து

முன்னிரவு நேரமாகையினால் கீழ் வானில் வெண்ணிலவு தண்ணொளி வீசிப் பவனி வந்துகொண்டிருந்தது. பனியின் சீதளத்தில் தன்னைக் குளிப்பாட்டி இளம் தென்றலாக வீசும் காற்றில் குளிர் மிகுந்து காணப்பட்டது. இரவுச் சாப்பாட்டை முடித்துக் கொண்டு தன் அறைக்குத் திரும்பிய ரகுராமன் அங்கே கட்டிலில் படுத்து, புத்தகம் படித்துக்கொண்டு கிடக்கும் கீதாவை வெறிக்கப் பார்த்தான். அவன் பார்வையின் பொருள் அவனுக்கு மட்டுமே புரிந்த ஒன்றாகும். மெல்ல அடிமேல் அடிவைத்து அவளை நெருங்கினான். கீதா புத்தகத்தில் மூழ்கியிருந்தாள்.

''கீதா''

''ரகு... வந்திட்டீங்களா?'''

''நான் வந்தது இருக்கட்டும். உனக்குப் படிக்க வேறு இடம் கிடையாதா?''

''ஏன் இல்லை. ஆனால், உங்களிடம் நல்ல 'புக்ஸ்' இருக்கும் என்று வந்தேன். உங்களைக் காணவில்லை. கட்டிலில் இந்தப் புத்தகம் கிடந்தது. எடுத்துப் படித்துக்கொண்டிருக்கின்றேன்.''

''உனக்குப் புத்தகம்தானே தேவை?''

''ஏன் ரகு கோபமாய் இருக்கின்றாய்?'' என்று எழுந்து நின்றாள். அவளுடைய நைட் கவுணின் மேற்பகுதி பெரும் பாலும் அவள் அங்க அழகுகளை வெளிக்காட்டக் கூடிய அளவுக்குக் கழன்று அலங்கோலமாகக் காட்சியளித்தது.

''ரகு! 'ஆஸ்டின் - ஆர் - பிறீமனின்' இந்த நாவல் கிடைக்காதா என ஏங்கினேன். அது உங்களிடம் இருக்கே. அது எனக்கு எவ்வளவு சந்தோஷம் தெரியுமா?''

''சரி நீ புத்தகத்தை எடுத்துக்கொண்டு வெளியே போ.''

''ஏன் ரகு?''

''நீ இங்கே நிற்பதை நான் விரும்பவில்லை.''

''அக்கா, அத்தான் ஏதாவது நினைப்பார்களென்று பயப்படுகிறீர்களா?''

''நான் யாருக்கும் பயப்படுகின்றவனில்லை. ஆனால். நீ போவது நல்லதென்று தான் கூறுகின்றேன்.''

''ரகு நான் அழகில்லையா?'' என்று அவனுக்குச் சமீபமாக வந்து நின்றாள்.

''கீதா நீ நல்ல அழகி. தயவுசெய்து வெளியேபோகின்றாயா?''

''ரகு ஏன் நல்ல பிள்ளை வேடம் போடுகின்றாய்? நான் விரும்பி வந்து நிற்பதால் நீ...''

''பிளீஸ் கெட் அவுட்''

''ரகு'' என்று அவன் தோள் மீது சாய்ந்தாள். அவ்வளவுதான் அவள் கன்னத்தில் 'பளீர்' என ஒன்று வைத்து அறைக்கு வெளியே தள்ளிவிட்டான்.

''அக்கா, அக்கா'' என்று மோகினியைக் கட்டிப் பிடித்து அழ ஆரம்பித்து விட்டாள் கீதா.

''என்னடா ரகு? என்ன நடந்தது?'' என்று பதறினுள் அன்னபூரணி.

''என்னமோ அவனைக் கேட்கின்ருய்? பார்த்தால் தெரியவில்லை. இதனுல்தான் நாங்கள் இங்கே வருவதில்லை. வந்ததும் வராததுமாக அவளை என்ன செய்திருக்கிருன்? சீ மானங்கெட்ட பயல்? ஊரில் உலகத்தில்நடந்ததுபோல் இன்று வீட்டிலும் ஆரம்பித்து விட்டான்.''

''அண்ணு! அறிவுள்ள அண்ணனே! உன் மைத்துனியைக்கேள் என்ன நடந்ததென்று. கண்டபடிகதைத்து...'' என்று கூறிவிட்டு, ''ஏன் கீதா என்ன நடந்ததென்று அந்தப் பெரிய மனிதனுக்குச் சொல்லேன்'' என்ருன் ரகு.

''அத்தான்,என்னைத் தன் அறைக்கு வரும்படிஅழைத்து ...'' என அழ ஆரம்பித்துவிட்டாள்.

''அட படுபாவி!'' என்ருள் அன்னபூரணி.

''கீதா நீ வழியை மாற்றுகின்ருயா!'' என்ருன் ரகு.

''ஏன் மிரட்டுகின்ருய் ரகு. உன்னைப் பற்றி மற்றவர்களுக்குத் தெரியாது என்ரு? ஏதோ திருந்தி விட்டான், நல்லாயிருக்கிருன் என்று இவள் எழுதினுள். வந்தோம். சீ நீயும் ஒரு மனிதஞ?'' என்று ஏசினுள் மோகினி.

''அண்ணி உண்மை தெரியாமல் கதைக்காதீங்க'' என்ருன் ரகு.

''என்னடா உண்மை? அவள் பொய் சொல்லுகின்ருளா? இப்படியொன்று நடந்ததென்று வெளியில் தெரிந்தால், இவளை யாரடா கட்டிக் கொள்ள முன்வருவான்?''

''இப்ப என்னண்ணு நடந்தது? உண்மை தெரியாமல் நீங்கள் எல்லோரும் சேர்ந்து என்னை முட்டாளாக்குகின்றீர்களே.''

"டேய் ரகு! நீ தாண்டா எல்லாரையும் முட்டாளாக்குகின்றாய். அந்த மிருகத்துடன் உங்களுக்கென்ன கதை. நடவுங்கள்." எல்லோரையும் கூட்டிச் சென்றான் ராஜாராமன்.

"அண்ணா! என்ன நடந்தது? வீட்டுக்கு வந்தவளிடம் அப்படி..." என்று பாரதி முடிக்கு முன்பே, அவளைச் சுட்டெரித்து விடுபவன் போல் பார்த்தான் ரகு.

"ஏன் அப்படிப்பார்க்கிறே" என்றாள் பாரதி.

"பாரதி! நீ கூட என்னை நம்பவில்லை. இல்லையா? போ, என் முன் நிற்காதே போ" என்று கூறிவிட்டு ஓடிச் சென்று கட்டிலில் விழுந்தான் ரகு.

அவன் உள்ளம் பொங்கிக் குமுறியது. நல்லவனாய் நடக்க வேண்டும் என்று நினைக்கும் ஒவ்வொரு கணமும் அவன் கெட்டவனாகவே மற்றவர்களால் நினைக்கப்படுகின்றான். அதை நினைத்துத்தான் அவன் குமுறினான்.

உண்மை விரைந்து செல்லாது என்பதற்காகப் பொய்க்கு அவ்வளவு வலிமையா? உலகம் பொய்யைமதிக்கும் அளவுக்கு வாய்மைக்கு மதிப்பளிப்பதில்லை என்பது பொது நியதியாயினும் சுலபத்தில் ஒருவனைக் குற்றவாளியாக்கிவிட்டுச் சேர்ந்து பாடும் பேதமையை எண்ணி வியந்தான் ரகுராமன்.

"பொய் சொல்லக்கூடாது பாப்பா" என்று மாணவர்களுக்கு பாரதி பாட்டைக் கற்பிக்கும் ஆசிரியன் கூட உடல் வருத்தம் என்று லீவு எடுத்துச் சினிமாவுக்குப் போகும் விந்தையான காலம். உண்மையைக் கூறுவதால் சில வேளைகளில் பயனில்லாது போகலாம். அதே பலனைப் பொய் கூறுவதால் சுலபமாகப் பெற்றுக் கொள்ளலாம். அதற்காக உண்மை செத்துவிட்டது என்பதல்ல பொருள். உண்மையை விட பொய்க்கு உலகம் மதிப்பளிக்கின்றதென்றே கூறவேண்டும்.

## அத்தியாயம் பதினொன்று

காலைப் பனியில் குளித்துவிட்டு நின்ற பூஞ்செடிக ளெல்லாம் உஷைக் கன்னியின் பொன் வர்ணத்தால் மஞ் சள் பூசிக் குளித்த மங்கல மங்கையர்கள் போன்று காட்சி யளித்தன. பனி மலர்கள் போன்று சுகந்தமணம் வீசிய முல்லையும், மல்லிகையும், இனி மலர்வதற்கு இடமில்லை என்னும் வகையில் கொத்துக் கொத்தாக மலர்ந்து தூங் கின. காலைப் பனியையும் பொருட்படுத்தாது மலர்கொய் வதில் ஈடுபட்டிருந்தாள் பானுமதி. அவள் மனம் முதல் நாளிரவு வந்து தம்பியாரின் கதையைக் கூறிவிட்டு, தன்னை யும் எச்சரிக்கையாக இருக்கும்படி கூறிச் சென்ற ராஜா ராமனைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தது.

ஒரு பெண் எப்படி வேண்டுமானாலும் உலகத்தை ஏமாற்ற முடியுமா? 'ஆவதும் பெண்ணாலே, அழிவதும் பெண்ணாலே' என்று முதியோர் கூறியதன் பொருள் இது வாயிருக்குமோ? சரி எது, பிழை எது என்பதைக் கூட ஆராயாமல், அவள் கூறிய ஒன்றைக் கொண்டே யாவற் றையும் நம்பி, தன் உடன் பிறந்தவனை இவ்வளவு மட்ட ரகமானவனாக மதிக்கின்றார் அந்த ராஜாராமன்.

பாரதி கூறியது போல் அவர் பெண்டாட்டி தாசனோ? அல்லது ஆண்களின் பெரும் பகுதியினரை ஆட்டிப் படைக்கும் அற்புத சக்தி படைத்தவளா பெண்? பெண் ணுடைய வஞ்சகப் புத்திக்காகத்தான் இயற்கை, அவள் தவறு செய்தால் அம்பலப்படுத்தும் வழிவகைகளை அவ ளிடம் ஏற்படுத்தி வைத்துள்ளது போலும். பானுமதியின் சிந்தனையைக் கலைத்தது ஒருகுரல். திரும்பினாள் பானுமதி.

''ஏனடியம்மா இந்தப் பனியிலே குளித்துவிட்டு வந்து நிக்கிறியே. உடம்புக்கு ஏதும் வந்தால் என்னடியம்மா செய்யிறது?'' என்று கேட்டபடி அவளை நெருங்கினுள் அன்னபூரணி.

''அம்மா! என்னைப் பெற்றவள் கூட இப்படித்தான் என்னை அடிக்கடி எச்சரிப்பாள். இது நாளாந்தம் பழக்கப் பட்டுவிட்டதம்மா. தவிர, இது இறைவனுக்கு நான் செய் யும் நாளாந்தத் தொண்டு. அவனுக்குப் பணி செய்து நோய் வந்தால் அவனே பார்ப்பான்'' என்று கூறிச் சிரித் தாள் பானு.

''படிச்ச பொண்ணு அழகாகக் கூறுகின்ருய். அது சரி பானு. ராத்திரி நடந்த ரகளை தெரியுமா? நீ கொஞ்சம் எச்சரிக்கையாக இரடியம்மா.''

''அம்மா, உங்க மூத்தபிள்ளை இங்கே வந்து யாவும் கூறினர். என்னல் நம்ப முடியவில்லை.''

''என்னடியம்மா அவனே ஒத்துக்கொள்கிருன். நீ நம்பமாட்டேன் என்கிருயே?''

''அம்மா, கண்ணுல் கண்டது, காதால் கேட்டது யாவும் பொய்யாயிருக்கலாம். ஆனுல், தீர விசாரித்து அறிய வேண்டும்.''

''நீ ஒருத்தி தாண்டி அவனுக்காகப் பேசுகிருய். என் பிள்ளைதானடியம்மா. ஆனுல்...''

''அம்மா, நீங்கள் நடந்ததைப் பார்த்தீர்களா?''

''இல்லை''

''உங்கள் மூத்த பிள்ளை?''

''இல்லை''

''அப்போ யார் பார்த்தது?''

''அவள்தான் கூறினுள்.''

''உங்கள் பிள்ளை கூறுவதை நீங்கள் நம்பவில்லை. அவள் கூறுவதை மட்டும் நம்புகின்றீர்கள்.''

''அவன் கூறுவதையாருமே நம்பமாட்டார்கள்.அவன் குணம்தான் எல்லோருக்கும் தெரியுமே.''

''அம்மா, அதுதான் தவறு. ஒருவன் பொல்லாதவன் என்ருல் நடக்கும் தவறுகள் அத்தனையும் அவன் மீதுதான் சுமத்தப்படவேண்டுமா?''

''பானு, நீ ஏன்டி அவனுக்குப் பரிந்து பேசுகின்ருய்?''

''நான் உங்கள் பிள்ளைக்குப் பரிந்து பேசவில்லையம்மா. உண்மையென்ற ஒன்றுக்காக பேசுகிறேன். உங்கள் பிள்ளையின் அறையில்தானே இது நடந்தது?''

''ஆமாம்.''

''இவள் ஏன் அங்கு போனுள்?''

''இவன் வரச் சொன்னுனும்; அவள் போனுள்.''

''அம்மா! நீங்கள் கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். மிஸ்டர் ரகு பொல்லாதவர் என்றுதானே எல்லோரும் நினைக்கின்ருேம்.''

''ஆமாம்''

''அப்படிப்பட்ட ஒருவருடைய அறைக்கு அந்தவேளையில், அவர் அழைத்தாலும் இவள் எப்படிப் போனுள்? ஏன் போனுள்?''

''அடியாத்தே! நான் கூட இதைப்பற்றி யோசிக்கவில்லையடி! நீ பொலிசுக்காரன் கேட்டமாதிரி கேட்கிறியே.''

''அம்மா, அவசரப்படாமல் யோசித்தால் உண்மை தெரியும்''

''சரியடியம்மா, நான் வாரேன். நீ வேறு யாரிடமாவது இப்படியெல்லாம் கதைத்து விடாதே. உன்னை அவள் திட்டித் தீர்த்துவிடுவாள்'' என்று கூறிவிட்டுப் புறப்பட்டாள்.

பானு கல்லூரிக்குச் செல்ல வீட்டைப் பூட்டிக்கொண்டு புறப்பட்டாள். வழமையாக அவளுடன் மாலதியும்,

சிவராமனும் பஸ் ஹோல்டிங்வரை செல்வார்கள். அன்று அவர்கள் கல்லூரிக்குச் செல்லவில்லை.

அவள் மாலதியை அழைத்த போது, அவள் வந்து தாங்கள் ஸ்கூலுக்குப் போகவில்லை என்று கூறிவிட்டுச் செல்லுகையில், ரகுராமன் வெளியே புறப்பட்டு வந்து கொண்டிருந்தான். அவன் எதிரே நின்ற பானுமதியைப் பார்த்து விட்டு ''குட்மோனிங் ரீச்சர்'' என்றான்.

''குட்மோனிங் மிஸ்டர் ரகுராமன்'' என்று புன்முறுவல் பூத்தாள். அவள் சிரிப்பது தோட்டத்தில் மல்லிகை மொட்டுக்கள் அடுக்கி நின்ற காட்சியை நினைவுறுத்தியது ரகுராமனுக்கு. எளிய உடையில் அழகாகக் காட்சியளிக்கும் அவளுடைய விழிகளில் ஒருவித கவர்ச்சி இருப்பதை உணர்ந்தான் ரகு. காதளவோடிய அந்த விழிகள் அவனை விழுங்கிவிடுவது போல் ஆராய்ந்து கொண்டிருந்தன.

''என்ன? கொலிஜ்சுக்குப் புறப்பட்டாச்சா?''

''ஜெஸ். நீங்கள் ஆபீசுக்குத்தானே!''

''இல்லை. இன்று மத்தியானம் கொழும்புக்குப் போறன். இப்போ வேறு வேலையிருக்கு. ரவுனுக்குப் போறன்.''

''ரவுனுக்கா? நல்லது வாருங்கள். எனக்கு வழித் துணையாயிருக்கும்'' என்று பானுமதி கூறியபொழுது புன்முறுவல்பூத்த ரகுராமன்தலையாட்டியபடி ''ஆல்ரைட் ரீச்சர்'' என்றான்.

''ஏன் மிஸ்டர் ரகு. இவ்வளவுநாளும் நான் இங்கே. தானே இருந்தேன். என்னைநேருக்குநேர் சந்தித்தபோதும் எதுவும் பேசாமல் சென்றீர்களே. இன்று என்ன இப்படியெல்லாம்...'' என்றாள்.

''இன்று நான் கொழும்புக்குப் போறன். இனித் திரும்ப நாளாகலாம்.''

"நான் கேட்ட கேள்விக்கு நீங்கள் பதிலளிக்கவில்லை மிஸ்டர் ரகு. சமாளிக்கின்றீர்கள்."

"மன்னிக்க வேண்டும் ரீச்சர். உண்மையைக் கூறுகின்றேன். இவ்வளவு நாளும் இங்கே இருப்பவர்களைப் போன்று தான் நீங்களும் இருப்பீர்கள் என்று நினைத்தேன்-"

"இன்று மட்டும் எப்படித் திடீர் மாற்றம்?"

"அதுவா? உலகத்தவர் என்னைப் பற்றி எப்படி வேண்டுமானாலும் நினைக்கலாம். அதைப் பற்றி என்றுமே நான் கவலைப்படுவதில்லை. என்னைப் பிறர் நல்லவன் என்பதால் நான் மகிழ்வதும் இல்லை. ஆனால், என்னைப் பெற்ற தாயே என்னைப் பற்றித் தவருகக் கருதும்படி சூழ்நிலை உருவாகும் போதுதான் என் மனம் வேதனைப்படுகின்றது."

"உண்மையில் நடந்தது என்னவென்று நீங்கள் கூறலாம்தானே?"

"கூறலாம். ஆனல், என்னைப் பற்றி நல்லபிப்பிராயம் இல்லாதவர்கள் மத்தியில் நான் கூறும் உண்மைகள் கூடப் பொய்யாகத்தான் போய்விடும். அதன் காரணமாக நான் எதுவுமே சொல்வதில்லை, ஆனல் இன்றுதான் உண்மைக்காகப் போராடிய ஒரு பெண் தெய்வத்தைக் கண்டேன்."

"மிஸ்டர் ரகு, நீங்கள் கூறுவதைக் கேட்கவே சங்கடமாகத்தானிருக்கிறது. யாரை நீங்கள் சந்தித்தீர்கள்?"

"பாரதி பாடிய ஒரு புதுமைப் பெண்ணை, படித்த பெண்ணை. படித்தவர்கள்—பட்டம் பெற்றவர்களெல்லாம் அறிவாளிகளல்ல ரீச்சர்."

"நீங்கள் பட்டம் பெறவில்லை என்பதற்காக அப்படிக் கூறுவதாய்த்தான் மற்றவர்கள் நினைப்பார்கள்."

"ஆனல், நீங்கள் அப்படி நினைக்கமாட்டீர்கள். ஏனென்ருல் உங்களிடம்..."

"சொல்லுங்கள் மிஸ்டர் ரகு."

''சொல்லத்தான் நினைக்கிறேன்; முடியவில்லை ரீச்சர். என் வாழ்க்கையில் நான் முதன் முறையாக ஒரு புதுமைப் பெண்ணைச் சந்தித்தேன். என் அசட்டு அம்மாவையே சிந்திக்கவைத்த அந்தப் பெண் சாதாரண பெண்ணாகஇருப்பாளென நான் நினைக்கவில்லை.''

''மிஸ்டர் ரகு, நீங்கள் நினைப்பது தவறு. அந்தப்பெண் கூட உங்களைப் பற்றித் தவறாகத்தான் நினைத்தாள். ஆனால், நேற்று மாலை ஒரு இரகசிய உரையாடலை அவள் கேட்க நேர்ந்ததால்தான் உங்களையும் உங்கள் நிலையையும் நம்ப முடிந்தது.''

''ரீச்சர், நீங்கள் என்ன கூறுகின்றீர்கள்?''

''மிஸ்டர் ரகு! உங்களைப் பற்றி நான் தெரிந்து கொண்டபோது நீங்கள் ஒரு உதவாக்கரை மனிதன் என்று தான் நினைத்தேன், ஆனால், பாரதி உங்கள் குணாதிசயங்களை வர்ணித்தபோது, நீங்கள் ஒரு அதிசயப் பிறவியாக இருக்க வேண்டுமெனத் தீர்மானித்தேன். அது உண்மை என்பதை நான் இப்போ முற்றாக உணர்ந்துகொண்டேன்'' என்று கூறி, கீதாவும் மோகினியும் கதைத்த விஷயத்தை, தான் தற்செயலாகக் கேட்க நேர்ந்ததாயும் கூறினாள்.

''எவ்வளவு கேவலமானவர்கள். நேற்று மாலை என்னைத் தேடி ஆபிசுக்கு வந்தாள் கீதா. யாரையோ பார்க்க வந்ததாய்க் கூறி, வீட்டுக்குத் தானும் வருவதாக என்னோடு வந்தாள். அதைப் பார்த்து நீங்களும் என்னைத் தவறாக நினைத்திருப்பீர்கள்.''

''உண்மைதான் மிஸ்டர் ரகு. ஆனால், நீங்கள் வாலிபனாய் வளர்ந்துவிட்டபோதும் குழந்தைமாதிரி நடந்து கொள்ளுகின்றீர்கள். அதனால்தான்......'' என்று அவள் முடிக்குமுன்பே பஸ் வந்துவிட்டது. இருவரும் பஸ்ஸில் ஏறினர். பின்னர் கதைப்பதற்குச் சந்தர்ப்பமே கிட்டவில்லை.

## அத்தியாயம் பன்னிரண்டு

அன்று மாலை பானு வீட்டுக்கு வந்தபோது,பாரதி வாசலில் அவளை எதிர்பார்த்து நின்றாள்.அவளைப் பார்த்ததும் பானுவின் உள்ளத்தில் பல்வேறு கேள்விகள் ஒருங்கே எழுந்தன.

''என்ன பாரதி,வாசலுக்கு வந்து நிற்கிறாய்?''

''உன்னைத்தான் எதிர்பார்த்து நிற்கிறேன்.''

''விசேடம் ஏதாவது உண்டா?''

''உண்டு. என்ன ரகுவும் நீயுமாகச் சோடிபோட்டுப் போனதாகக் கீதா சொன்னாள்.''

''என்னதான் சொல்லமாட்டாள்'' என்று நடந்ததைக் கூறியபொழுது பாரதியால் எதுவுமே பேசமுடியவில்லை.

''நீ இதுபற்றி அம்மாவிடம் கூறினாயா?'

''இல்லை. இந்த விடயம் அம்மாவுக்குத் தெரியாமல் இருப்பது நல்லது. ஏனென்றால் குடும்பப் பிரிவினையில் போய் முடிந்துவிடாமலிருக்க,நாம் இதனை வெளியிடாமலிருப்பதே நல்லம்.''

''பானு,நேற்றிரவு ரகு என்னையே ஏசினான். எனக்கு அப்போகூடப் புரியவில்லையே. நான் அவனை எவ்வளவு பொல்லாதவன் என்று நினைத்தேன்.''

''பாரதி, கெட்டவர்கள் என்று நாம் நினைப்பவர்கள் எல்லாம் கெட்டவர்களல்ல என்பதை இனியாவது உணர்ந்து திருந்தினால் அதுவே நல்லது.நீ வீணாய் அலட்டிக் கொள்ளாதே'' என்றாள்.

''ஏன் பானு, நான் ஒன்று கேட்கிறேன்.கோபிக்க மாட்டியே?''

''இல்லை.கேள் பாரதி.''

''நீ பேசுவதைப் பார்த்தால் ரகு அண்ணனை நீ...''

''சொல் பாரதி.நான் அவரை விரும்புகிறேனு என்று அறிய விரும்புகிறாய்.அப்படித்தானே?''

''ஆமாம்'' என்று தலையாட்டினுள் பாரதி.

''பாரதி'' என்று சிரித்தாள் பானு.

''கோபமா பானு?''

''பைத்தியம்.எனக்கென்ன கோபம்.இந்த பானு, எதிலும் இலகுவில் மயங்கிவிடமாட்டாள்.உன் அண்ணன் நல்லவனே கெட்டவனே? ஆனுல்,அது பற்றி நான் இன்னும் தீர்மானிக்கவில்லை.மிஸ்டர் ரகுராமனிடம் நான் மனதைப் பறிகொடுக்கவில்லை. ஆனுல்,அவர் பக்கம் உண்மை இருப்பதை என்னுல் மறைக்கமுடியவில்லை'' என்று அவள் கூறி முடிக்குமுன்பு வெளியே கார் வந்து நிற்கும் சப்தம் கேட்டது.

காரிலிருந்து இறங்கிய நாகரிக யுவதி ஒருத்தி, ''மிஸ்டர் ரகுராமன் இருக்கிருரா?'' என்ருள்.பானுவும் பாரதியும் ஒருவரை ஒருவர் பார்த்து விழித்தபடியே இல்லை என்பதற்குப் பதிலாகத் தலையை அசைத்தனர்.

காலத்தின் மேடையில் காட்சிகள் மாறிக்கொண்டிருப்பது போன்று தனி மனித வாழ்க்கையில் ஏற்படும் சுவையான சம்பவ மாற்றங்கள் வாழ்க்கையில் எத்தனையோ மேடு பள்ளங்களைத் தோற்றுவித்துவிடுகின்றன.பெற்ற தாயிடம்கூட மகள் பொய் சொல்லுவாளா என்று நாம் வாதிடலாம்.ஆனுல்,பருவத்தின் கோளாறு அப்படியொரு நிலையை அவர்களிடம் தோற்றுவித்துவிடும். அப்படித்தான் உயிருக்குயிரான சிநேகிதிகள்கூட தங்களுக்குள் சில விடயங்களை மறைத்துக்கொள்வார்கள். அதே மாதிரி பானு தன் மனதில் உள்ள ஒரு உணர்வுக்குத் திரை போட்டு

மறைத்தாளாயினும், அந்த உணர்வை மாற்றக்கூடியவளாக வந்து சேர்ந்தாள் பாமினி.

பாமினி கூறிய விடயங்களைக் கேட்டபோது ரகுராமனைப் பற்றி அவள் கொண்டிருந்த உயர்ந்த எண்ணங்கள் சிதறிச் சின்னுபின்னமாகிவிட்டன. அவனிடம் அவள்கொண்டிருந்த அனுதாபம்—அனுதாபம் என்றும் சொல்லமுடியாத ஒரு உணர்வுப் பற்று—அவளிடமிருந்து விடைபெற்று அதுவே கசப்பாக மாறிவிட்டது. அதற்குக் காரணம், பாமினி கூறியவை.

சுருக்கமாகச் சொல்லப் போனுல் ரகுராமனுல் ஏமாற்றப்பட்டவளே பாமினி என்பதை பானுமதி நம்பிவிட்டாள். அவர்கள் இருவரும் சேர்ந்து எடுத்த புகைப்படமே அவள் நம்பிக்கைக்குக் காரணமாக அமைந்துவிட்டது.

"ஏன் பானு, அவள் கூறியவை...'' என்று பாரதி கேட்டபோது, பானுமதி எதுவும் கூருமல் யன்னலினூடாக வெளி உலகைப் பார்த்தவாறு நின்றிருந்தாள்.

''ஏன் பானு, இருளினூடே என்ன தேடுகின்ருய்?'' என்ருள் மீண்டும்.

''இருளினூடே ஒரு உண்மையைத் தேடினேன். ஆனுல், என் நினைவே இருண்டுவிட்டது பாரதி.''

''எதைப் பற்றிச் சொல்லுகின்ருய்?''

"பாரதி, மிஸ்டர் ரகுவைப் பற்றி எண்ணிய நல்ல நினைவுகள் இப்படித் திடீரென இருளாகிவிடும் என நான் நினைக்கவில்லை'' என்ருள்.

''பானு, நீ ஏன்டி கவலைப்படுகின்ருய்? அவன் திருந்துவானென்று நான் நினைக்கவில்லை. விட்டுத் தள்ளடி பானு.''

"பாவம் அந்தப் பெண் பாமினி. எத்தனை மனக் கோட்டைகளைக் கட்டியிருப்பாள்? உன் அண்ணனை நீ

வெறும் தீ என்றுதான் கூறிஞய்.பார்க்கப் போனல் அவன் சாதாரணத் தீயில்லை, காட்டுத் தீ. ஆமாம், காட்டுத் தீ'' என்று அவள் கூறியபோது, கசப்பின் எல்லைக்கே அவள் சென்றுவிட்டிருந்தாள்.

கொழும்பிலுள்ள ஒரு ஹோட்டலில் ரகுராமன் தூங்கிக்கொண்டிருந்தான். ரயில் பிரயாணத்தினல் ஏற்பட்ட அலுப்பினல் வந்ததும் வராததுமாகப் படுத்துத் தூங்கிவிட்டான்.தனக்கு எதிரான ஒரு சூழ்நிலை தன் வீட்டிலேயே உருவாகிக்கொண்டிருக்கிறது என்பதை அறியாத அவன், பானுவைப் போல ஒரு பெண்ணை வேறு எங்குமே காண முடியாது என்ற நம்பிக்கையின் எல்லைக் கோட்டுடன் தூங்கிக்கொண்டு கிடந்தான்.

## அத்தியாயம் பதின்மூன்று

நினைப்பது ஒன்று நடப்பது ஒன்று என்று கூறுவார்கள். அப்படி நடந்து முடிந்துவிட்ட தன் திட்டத்தின் தோல்வி மனப்பான்மையைத் தன் கணவன் மீதே திசை திருப்பிவிட்டாள் மோகினி.

''நீங்கள் ஒரு அவசரக் குடுக்கை.சீறி விழுந்து காரியத்தைக் கெடுத்துவிட்டீர்களே. உங்கள் அம்மாவோடு இது பற்றிப் பேசினீர்களா?''

''மோகினி, நீ கூறுவது எதையும் வெளிப்படையாகக் கூறு மோகினி.''

''ரகுவுக்கு இவளைக் கட்டிவைத்தால் என்னவென்றுதான் கேட்கிறேன்.''

''ரகுவுக்கா?அவன் சம்மதிப்பாஞ?''

''ஏன்,அவனுக்குப் புளிக்குதோ?''

"மோகினி அவசரப்படாதே. எல்லாம் ஆறுதலாகப் பார்ப்போம்" என்றார் ராஜாராமன்.

"அக்கா, அக்கா" என்று அழைத்துக்கொண்டே வந்தாள் கீதா.

"என்னடி கீதா?"

"அந்த பானுமதியை ஒழித்துக்கட்டாத வரையில் ரகு வழிக்கு வரமாட்டான்."

"அதற்கு என்னடி செய்யப்போகின்றாய்?"

"எனக்கு ஒரு வழி இருக்கு அக்கா."

"பாவம் அந்தப் பெண். ரொம்ப ஏழை. அதன் வழியில் நீ குறுக்கிடாதே கீதா" என்றார் ராஜாராமன்.

"நீங்கள் அவளுக்குப் பரிவு காட்டுகிறீர்களா அத்தான்? அவள் ஏழைதான். கர்வம் பிடித்தவள். அவள் திமிரை அடக்கிச் சந்தி சிரிக்கவைத்தால் தானாகவே அடங்கிவிடுவாள்."

"கீதா, அப்படி...அப்படியெதுவும் செய்துவிடாதேயம்மா." ராஜாராமன் பதறினார்.

"நீங்கள் ஏன் அவளுக்கு வக்காலத்து வாங்கிறியள். இனி நீங்கள் அங்கே போகக்கூடாது. உங்கம்மாவை வேண்டுமானால் இங்கே அழைத்து நான் கூறிய விடயம் பற்றிக் கேட்டுப் பாருங்கள்."

அவள் கூறிய யாவற்றுக்கும் தலையாட்டியபடி பெட்டிப் பாம்புபோல் அடங்கிக்கொண்டார் ராஜாராமன்.

கொழும்பிலிருந்து திரும்பிய ரகுராமனுக்குப் பல வழிகளிலும் ஏமாற்றங்களே மிகுந்து விளங்கின. இரண்டு முறை பானுமதியுடன் கதைப்பதற்கு அவன் முயன்ற பொழுது, பானுமதி அவனை வேண்டுமென்றே அவமதிப்பது போல் நடந்துகொண்டாள். ரகுராமன் அவளது நடத்

தைக்குக் காரணம் என்னவாயிருக்கலாமெனப் பலவாறு யோசித்தும் விடை காணமுடியாது சலித்துவிட்டான். அன்று மாலையிலும், கல்லூரியால் வந்த பானுமதியைக் கதை கேட்டபொழுது அவள் நடந்துகொண்ட முறை அவன் மனதில் அப்பொழுதும் உறுத்திக்கொண்டிருந்தது.

"ரீச்சர், வண் மினிற்" என்று அழைத்தபடியே அவள் அருகில் சென்ருன்.

"ஜேஸ், வட் யூ வோண்ட்?" என்ருள்.

"உங்களோடு கொஞ்சம் கதைக்கவேண்டும்."

"மிஸ்டர் ரகுராமன், எனக்கு நிறைய வேலையிருக்கு" என்று கூறிவிட்டு அவன் பதிலுக்குக் காத்திராமலே சென்று விட்டாள்.

நினைக்கும் பொழுதெல்லாம் ரகுராமன் உள்ளத்தில் ஆத்திரமே மேலோங்கி நின்றது. அவளை நல்லவள் என்று அவன் நம்பியிருக்காது போனுல் அவன் அப்படி ஆத்திரப் படமாட்டான். அவள் வேண்டுமென்றே தன்னை அவமதிப்ப தாய்த்தான் முடிவு செய்தான்.

## அத்தியாயம் பதினன்கு

**அ**ன்று போயா தினம். பாமினி அங்கு வந்திருந்தாள். அவளோடு பாரதியும் பானுமதியும் சந்தோஷமாகக் கதைத்துக்கொண்டிருந்தனர். அச்சமயத்தில் ரகுராமனும் வந்து சேர்ந்தான்.

தங்கள் முன்னிலையில் ரகுவின் குட்டுக்கள் வெளிப்படப் போகின்றன; அதையே காரணமாக வைத்து ரகுவுக்கு நல்ல புத்தி புகட்டவேண்டுமென்று துடித்துக்கொண்டிருந்

தாள் பானுமதி.அதே வேளையில் ரகுவைக் கண்டதும் பர பரப்படைந்தவளாய்க் காணப்பட்டாள் பாமினி.

''ஹலோ மாலினி! ஏது இந்தப் பக்கம்?'' என்று கேட்டுக்கொண்டே வந்தான் ரகு.

''ஒன்றுமில்லை ரகு.என் சிநேகிதி ஒருத்தியைப் பார்க்க வந்தேன். அப்படியே பானுமதியையும் பார்த்துவிட்டுப் போகலாம்......'' என்று அவள் சமாளித்தாள்.

''ஓ!ரீச்சர் உன் சிநேகிதியா?''

''ஆமா. இல்லை ரகு. வந்து......'' என்று அவள் தடுமாறியபொழுது அவளுடைய நிலைமையைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது ரகுராமனுக்கு.அதே வேளையில் அவன் மனதில் மின்னலென ஒரு விடயம் தெளிவாகிவிட்டது.

''என்ன மாலினி, இன்றுதான் இங்கே முதல் விஜயமா?இல்லை,முன்பே வந்திருக்கின்றாயா?'' என்றான்.

''அண்ணா, இவங்க பெயர் மாலினியா?பாமினியா?'' என்று கேட்டாள் பாரதி.

''என்னென்று உங்களிடம் கூறினாள்?''

''பாமினி என்று.''

''மாலினி,நான் கேட்ட கேள்வியை மறக்கவில்லையே'' என்றான் அவள் பக்கம் திரும்பி நின்று.

''இதுதான் முதல்...இல்லை முன்பும் ஒருநாள்...''

''அப்படிச் சொல்லேன் மாலினி'' என்றவன், பானுமதியைப் பார்த்து ''மிஸ் பானுமதி, இவள்தான் உங்கள் மன மாற்றத்திற்குக் காரணமென்று நினைக்கின்றேன்'' என்றான்.

''மிஸ்டர்'' என்று பானுமதி ஆரம்பித்ததையும் கவனியாமல் மேலும் கூறினான் ரகு.

''மிஸ் பானுமதி, உங்களை நான் என்னவோ என்றுதான் நினைத்தேன்.நீங்கள் காற்றடிக்கும் பக்கம் சேர்ந்து

பழக்கப்பட்டவராக இருக்கின்றீர்கள். நம்பிக்கை என்ற ஒன்று அடிக்கடி மாற்றி உபயோகிக்கும் சட்டையல்ல. அது......அது...'' என்றவன், மாலினி பக்கம் திரும்பி, ''மாலினி, நீ அமைதியான குடும்பங்களிடையே புயலைத் தோற்றுவிக்கும் ஒரு வெடிகுண்டு, நச்சுக் காற்று. இனிமேல் இந்த வீட்டு வாசலில் உன்னைக் கண்டால் நீ போகவேண்டிய இடம் எதுவாயிருக்கும் என்பது உனக்கே தெரியும். நௌ யூ கெட் அவுட்'' என்றான்.

அப்படியே அவன் தன் அறைக்குச் சென்றுவிட்டான். அங்கே நடந்தது பானுவுக்குப் பெரும் அதிர்ச்சியாயிருந்தது. போலி எது, உண்மை எதுவென்று யாராலும் உணர முடியாதபடி நடந்துவிட்ட நிகழ்ச்சியால் அவள் அதிர்ந்து போனாள்.

''பாரதி, இவள் எவ்வளவு மோசக்காரி பார்த்தியா? அவள் கூறியதை நம்பி நாம்தான் ஏமாந்தோம்.''

''பானு, அவள் பெண்ணா அல்லது பேயா?'' என்று கேட்ட பாரதி, ''அண்ணனைப் பற்றி ஒன்றுமே எம்மால் புரிந்துகொள்ளமுடியாது. பார்த்தாயா?'' என்றாள்.

''உண்மைதான் பாரதி. நாம் நினைக்கும் எதுவும் மிஸ்டர் ரகுவைப் பொறுத்தளவில்...என்னவென்றே கூறமுடியவில்லை'' என்று கூறிவிட்டு எழுந்திருக்கப்போனாள். அதற்கிடையில் தொலைபேசி மணி ஒலித்தது. பாரதி சென்று போனை எடுத்தாள்.

''பானு, உன்னைத்தான் யாரோ கூப்பிடுகிறார்கள்.''

''என்னையா?''

''ஆமாம்.''

பானு ஓடிச் சென்று போனை வாங்கி, ''ஹலோ, நான்தான் பானு பேசுகிறேன்'' என்றாள். பின்பு தலையாட்டிக் கொண்டும் ''அப்படியா? ஆமாம்'' என்று கூறிக் கொண்டுமிருந்தவள், ''சரி பரிமளா, நாளைக் காலையில்

வாரேன். பத்து மணிக்குத்தானே நிச்சயம் வாரேன்'' என்று கூறி போனை வைத்துவிட்டு, மறுபுறமிருந்து கொடுத்த விலாசத்தைத் துண்டில் குறித்துக் கொண்டாள்.

அதே வேளையில் சிவராமன் ''அக்கா அக்கா'' என்று அழைத்தவாறே வீட்டுக்குள் ஓடிவந்தான்.

சிவராமன் ஒருநாளுமில்லாதவாறு பதைத்து ஓடிவந்ததும், பாரதி பயந்துவிட்டாள்.

''என்னடா சிவா? ஏன் ஓடிவந்தாய்?'' என்றாள்.

''அக்கா, ரகு அண்ணனைத் தேடி யாரோ வந்திருக்கிறார்கள்'' என்று வெளியே சுட்டிக் காட்டினான்.

இதற்கிடையில் ரகுவே வந்து விஷயத்தை அறிந்ததும் வெளியே ஓடினான். வெளியில் ஒரு பெரிய பென்ஸ் கார் நின்றிருந்தது.

''மிஸ்டர் ரகு; குட்ஈவினிங். கம் ஹியர்'' என்று ரோஸி அழைத்தாள்.

''ஹலோ! என்ன விசேடம்?''

''மிஸ்டர் ரகு, பொஸ் உங்களை அவசியம் சந்திக்க விரும்புகின்றார்.''

''உடையை மாற்றிக்கொண்டு வருகிறேன் ரோஸி.''

''பரவாயில்லை. இதுவே போதும். ஏறுங்கள் காரில். அவசரமும் கூடத்தான். கமோன்'' என்று கதவைத் திறந்துவிட்டாள்.

## அத்தியாயம் பதினைந்து

இருபத்தைந்து நிமிடங்களுக்குப் பின்பு பலாலியிலுள்ள ஒரு வளவினுள் கார் நுழைந்தது. அந்த வளவு பெரிய தோப்பாகக் காணப்பட்டது. தென்னை மரங்களும்,

மாமரங்களுமாக நிறைந்து காணப்பட்ட அந்த வளவின் மத்தியில், பழங்காலத்து டச்சுக்காரரின் கோட்டை போன்று ஒரு மாளிகை தென்பட்டது. கார் நின்றதும் ரகுவுடன் கூடவே ரோஸியும் இறங்கினுள். வாசலில் நின்ற பணியாள், 'சல்யூட்' அடித்து வணங்கிக் கதவைத் திறந்து விட்டான்.

வெளிப்பார்வைக்கு பழைய கட்டிடம் போலத் தோன்றினுலும், உள்ளே நவநாகரிகமாக விளங்கியது அந்தப் பங்களா. எங்கும் சிவப்பு நிறத்தில் தரை விரிப்புகள்; கடும் நீலநிறத்தில் கதவு, யன்னல் சேலைகள் தொங்கிக் கொண்டிருந்தன. ரோஸி ஒரு அறையின் முன் நின்று அழைப்பு மணியை அழுத்தினுள்.

''ஜேஸ், கம் இன்'' என்றது ஒரு கனத்த குரல்.

கதவைத் திறந்து கொண்டு இருவரும் உள்ளே சென்றனர். அன்று தான் ரகுராமன் முதன் முதலாக அந்த மனிதனைப் பார்க்கிருன்.

''குட் ஈவினிங் மிஸ்டர் ரகுராமன்'' என்ருர் அந்த மனிதன்.

''குட் ஈவினிங் பொஸ்''

''நல்லது. மூன்று மாதங்கள் எமது கம்பெனியில் வேலை செய்து எங்கள் நம்பிக்கைக்கு உரியவரான காரணத்தினுல், உம்மை நேரில் சந்திக்க விரும்பினேன். யூ ஆர் ஹான்ட்சம் அன்ட் இன்டலிஜன்.''

''தாங்கியூ பொஸ்.''

''மிஸ்டர் ரகு, அநேகமாக நான் எனது கம்பெனி ஊழியர்களைச் சந்திப்பதில்லை. மிகவும் நம்பிக்கையானவர்களை மட்டுமே இங்கு அழைத்துப் பேசுவேன். உம்மைப் பற்றி மனேஜரும், ரோஸியும் மிகவும் பாராட்டியுள்ளனர். கொழும்பில் தங்களுக்குக் கொடுக்கப்பட் வேலையை

விரைவாகவும் சிக்கல் ஏதுமின்றி நிறைவேற்றியதற்காக வும் பாராட்டுகிறேன்.''

''தாங்கியூ பொஸ்.''

''உமக்கு அடுத்த மாதம் முதல் ஐந்நூறு ரூபா சம்பளம் கொடுக்க உத்தரவிட்டுள்ளேன்.''

''உண்மையாகவா? நம்பமுடியவில்லையே!''

''மிஸ்டர் ரகு, என்னைப் பொறுத்தளவில் நம்பக் கூடிய மனுதனுக்கு ஐந்நூறு அல்ல ஐயாயிரம் கொடுக்கவும் தயங்கமாட்டேன்.''

''உண்மையில் நான் மிக மகிழ்ச்சியடைகிறேன்.'

''நல்லது மிஸ்டர் ரகு. நாளைக்கு நீர் ஆபிஸிற்குப் போகவேண்டாம். நான் தரும் பார்சலை ஒருவரிடம் சேர்த்துவிட்டு ர்சீது பெற்றுக் கொண்டு வரவேண்டும். பார்சல் சிறிது. ஆனுல், இதன் மதிப்பு லட்சத்திற்கும் மேலிருக்கும். நீர் தான் இனி இதற்குப் பொறுப்பாளி. மிகுதி விடயங்களையும் விலாசத்தையும் ரோஸியிடம் பெற்றுக் கொள்ளலாம்.''

''ஜெஸ் பொஸ்.''

''சரி நீர் போகலாம்.''

இருவரும் வெளியே வந்தனர். அந்தப் பார்சலில் என்ன இருக்குமென்று அறிய ஆவல்பட்டான் ரகுராமன். ஆனுல், ரோஸி அவனையும் கூட்டிக்கொண்டு இன்னொரு அறையில் நுழைந்தாள். அந்த அறை அவளுடைய காரியாலய அறைபோலும். தன்னைப் போலவே அறையையும் சுத்தமாக வைத்திருந்தாள் ரோஸி.

''என்ன ரகு, மிகவும் அதிர்ச்சியடைந்தவர் போல் காணப்படுகிறீர்களே'' என்றுள் ரோஸி.

''றியலி! என்வாழ்க்கையில் இப்படியொரு திடீர் சம்பவம் ஏற்படுமென்று நான் நினைக்கவில்லை ரோஸி. இதற்ககா உனக்குத்தான் நான் நன்றி கூறவேண்டும்.''

''தவறு ரகு. அப்துல்லா மிகவும் நல்லவர்! அவர் என்று ஒருவரிடம் நம்பிக்கை வைக்கிறாரோ அவன் எந்த இனத்தவனாயினும் அவனிடம் எந்த ஒரு பெரும் பொறுப்பையும் ஒப்படைப்பார். எங்கள் மனேஜர் கூட இரு நூறு ரூபா சம்பளத்தில் அமர்த்தப்பட்டே, இன்று 'ரு தௌசன்ட்' சம்பளம் பெறுகின்றார்.''

''என்ன இருந்தாலும் அப்துல்லா ஒரு பெரிய மனிதன். றியலி கீ இஸ் ஏ கிறேற் மான்.''

இவர்களுடைய சம்பாஷணையை அறையில் இருந்து கேட்டவாறே அப்துல்லா சிரித்துக் கொண்டிருந்தார்.

## அத்தியாயம் பதினொன்று

ரகுராமன் ஒரு மர்ம மனிதனைப் போலவே பானுமதிக்குத் தோற்றமளித்தான். ஒரு சமயம் அவனை விடக் கேவலமான மனிதன் இந்த உலகிலேயே கிடையாதுஎனும் படி நடந்து கொள்கிறான். மறுசமயம் மிக மிக உயர்ந்த மனிதனாகக் காட்சியளிக்கின்றான். சில வேளைகளில் ஏதும் அறியாத குழந்தை போலத் தோற்றமளிக்கின்றான். அவனைப் பற்றித் திட்டவட்டமான எந்தவொரு முடிவும் கொள்ளமுடியாத விசித்திரப் பிறவியாகவே விளங்கினான். பானுமதியின் சிந்தனையின் ஒவ்வொரு நகர்விலும் ரகு நின்று கொண்டிருந்தான்.

அவன் சிரிக்கும் போது அந்தச் சிரிப்பில் கள்ளமில்லை. கபடமில்லை. சூதுவாது ஏதும் அறியாத பச்சைப்பிள்ளை போலச் சிரிக்கிறான். அதில் தான் எத்தனை கவர்ச்சி! அவன் பேசுவது குறைவு. அப்படிப் பேசினாலும் அது குழந்தையின் மழலை போல் பொருள் விளங்காத ஆனால், ஆழ்ந்த

கருத்துள்ளவையாகத்தானிருக்கும். எதையும் அலட்சிய நோக்குடன் ஆனல், கூர்ந்து கவனிக்கும் அந்தவிழிகளைப் பார்க்கும் பொழுது மீண்டும் பார்க்கத் தோன்றும் ஒரு வித மாரீசக் கவர்ச்சி. அவனைப்பார்த்தால் யாருமே சலனமடையாது இருக்க முடியாது போலிருக்கே என்று வியந்தவளாக நின்று கொண்டிருந்த பானுவின் செவிகளில் ''உன்னைக் காணுத கண்ணும் கண்ணல்ல — உன்னை எண்ணுத நெஞ்சும் நெஞ்சல்ல'' என்ற சினிமாப் பாடல், தேனினுமினிய குரலில் வானெலியிலிருந்து மிதந்து கொண்டிருந்தது. பானுவின் இதயத்தையே ஈர்த்து இழுத்துவிட்டது அப்பாடல். அவளது இதய மலரை ரீங்காரமிடும் வண்டாக அப்பாடல்ஒலித்துக்கொண்டிருந்தது.

வெளியேசென்ற ரகுராமன் ஒன்பது மணிக்கு மேலாகியும் திரும்பி வரவில்லை. அவனை அதற்கு மேல் எதிர்பார்த்திருப்பதும் சரியல்ல என்று எண்ணியவளாகப் படுக்கைக்குச் சென்று விட்டாள். அவள் மனதில் வேறு நினைவுகள் எல்லாம் எங்கோ ஓடி ஒளித்துக்கொண்டன.

அந்தப் பெண் ரோஸியுடன் ரகு எங்கே போனன்? சினிமாவுக்குப் போயிருப்பானு? அவளிடம் ரகுஎங்கே மனதைப் பறிகொடுத்திருப்பானே? அவள் அப்படியொன்றும் பிரமாதமான அழகியில்லையே! சதைப் பிடிப்பான உடலும், குள்ள வாத்து மாதிரி குட்டைஉருவமும், செயற்கை அழகாலேயே தன்னை ஒரு அழகியெனப் பாவனை செய்து கொள்ளும் அவளிடம் ரகு தன்னை இழந்திருப்பானு? அப்படி இழந்தால்தான் எனக்கென்ன? என் மனம் ஏன் இப்படி வீணுக அவரைப்பற்றியே எண்ணி வலம் வருகின்றது? என்று எண்ணியவளாகப் புரண்டு படுத்தாள். அந்தவேளையில் வெளியே கார் வந்து நிற்கும் சத்தம் கேட்டது. திடீரென எழுந்து யன்னல் அருகே சென்று பார்த்தாள்.

கையில் ஒரு சிறு பார்சலுடன் ரகு சென்றுகொண்டிருந்தான். அவனை இறக்கிவிட்டுச் சென்ற காரில் ரோஸி

இருப்பது நன்கு தெரிந்தது. அந்த உடையுடன் அவன் சினிமாவுக்குச் சென்றிருக்க முடியாது. அப்படியானால் அவன் எங்கே சென்றிருப்பான்? எங்கே போனால்தான் எனக்கென்ன? என்று மனதைச் சமாதானம்செய்தாலும், தன் மனம் ஏன் அப்படி அலட்டிக்கொள்கின்றது என்று எண்ணியபடி மீண்டும் கட்டிலில் வந்து விழுந்தாள் பானுமதி.

நீல வானில் தங்கத் தகடு மிதப்பதுபோல வெண்ணிலவுப் பெண்ணரசி பவனி வந்துகொண்டிருந்தாள். பனியில் குளித்தவை போன்று கடற்கரைத் தென்னைகள் எல்லாம் பளபளத்து நின்றன. நிலவைப் பிடித்து விளையாட விரும்புபவை போன்று கடல் அலைகள் எழும்பிக் குதித்து சலித்துச் சிதறிக்கொண்டு கரையை அளைந்தன.

ஒரு கல்லில் கெண்டைக்கால் வரை தண்ணீரில் தாளமிட அமர்ந்திருந்தாள் பானுமதி. அவளுடைய கையில் ஒரு கூடை நிறைய மல்லிகையும், சம்பங்கியும் மணம் கமழ்ந்துகொண்டிருந்தது. அவள் ஏதோ சிந்தனையிலாழ்ந்து இருந்தாள். அவளையறியாமல் அவளுக்குப் பின்புறமாக யாரோ வந்து அவள் விழிகளைப் பொத்துகின்றனர். ''யாரது?'' என்று திரும்புகிறாள். அவளுடைய கையிலிருந்த கூடை கவிழ்ந்து விடுகின்றது. துடித்து எழுந்த பானுவின் கரங்களைப் பற்றியவாறே ரகு சிரித்துக்கொண்டு நின்றான்.

''நீங்களா ரகு?'' என்று நாணிச் சிரிக்கிறாள்.

''நான்தான். அடடே மலர்கள் சிந்துப்பட்டுவிட்டனவே. அவை ஆண்டவனுக்கு அர்ப்பணமாகவேண்டிய மலர்களல்லவா?''

''எனக்குக் கடவுள் நீங்கள்தான்'' என்று அவள் கூறிக்கொண்டு அவன் மார்பின் மீது சாய்கிறாள். அவள் உள்ளத்துள் பெண்மையின் மென்மையுணர்வுகள் கிளர்ந்து

எழுந்து மோதுகின்றன. தன்னையே தான் மறக்க வைக்கும் அந்த உணர்வுக் கிறக்கத்தில் அவள் விழிகளை மூடிக்கிடக்கின்றாள். சில விநாடிகளின் பின்பு விழிகளைத் திறந்து பார்த்தபோது அவளை அணைத்தபடி யாரோ ஒரு அந்நியன் நிற்கிறான். தணலிடைப்பட்ட புழுபோலத் துடித்துக் கதறிய பானுமதி, ''ரகு, ரகு'' என்று கத்துகிறாள். அதே வேளையில் தூரத்தே எங்கோ ஆலயமணி ஒலிக்கும் ஓசை கேட்கின்றது. விழிகளைத் திறந்த பானு, தான் கண்டது கனவு என உணருகிறாள். அவள் உடல் வியர்த்து நடுங்கிக்கொண்டிருக்கிறது. ''என்ன பயங்கரம்? கடவுளே!'' என்று கூறிக்கொண்டே எழுந்தாள்.

## அத்தியாயம் பதினேழு

காலை பத்து மணிக்கு, முதல் நாள் மாலை தன் சிநேகிதி கொடுத்த விலாசத்துக்குச் சென்றாள் பானுமதி. கல்லூரியில் இரண்டு மணித்தியால லீவு பெற்றுத்தான் அங்கே சென்றிருந்தாள்.

அந்த இடத்தை ஒரு சிறு வெளி என்றுதான் குறிப்பிடவேண்டும். பல அறைகளைக் கொண்ட ஒரு சிறு பங்களா அங்கே இருந்தது.

பரிமளாவைத் தேடிவந்த அவளை வரவேற்றவர் ஒரு நடுத்தர வயதுடைய மனிதர். ஓர் அறையில் பரிமளாவை எதிர்பார்த்துப் பானுமதி காத்திருந்தபோது, அந்த அறைக்குள் அவளை வரவேற்ற மனிதர் நுழைந்து கதவைத் தாழிட்டார். பானுவுக்கு தான் ஏதோ சூழ்ச்சியில் விழுந்துவிட்டோம் என்ற உணர்வு ஏற்படு முன்னரே, அந்த மனிதன் பயங்கரமாகச் சிரித்தபடி அவளை நோக்கி நகர்ந்துகொண்டிருந்தான்.

எதிர்பார்த்து வரும் இன்பமோ துன்பமோ மனித இதயத்தை அதிகம் பாதிப்பதில்லை. ஆனால், எதிர்பாராது வரும் இன்பமும் சரி, துன்பமும் சரி மனிதனை நிலை தடுமாற வைத்துவிடும். அப்படித்தான் இருந்தது பானுமதியின் நிலையும். அந்த வேளையில் அந்த அறையில் தன்னைக் காப்பாற்ற மனிதர்களால் முடியாது என்றே தீர்மானித்து விட்டாள். ஆனாலும் அவள் வழிபட்ட தெய்வம், அவளை அப்படி ஒரு அவலச் சூழ்நிலையில் காப்பாற்றாமல் போய் விடுமோ என்ற ஏக்கமும் அவள் மனதை அரித்தது. கணப் பொழுதுதான். தன்னால் இயன்ற வரையில் அவனுடன் போராடுவது என்று முடிவுசெய்துகொண்டாள்.

''நீங்கள் யார்? என்னை ஏன் இப்படிப் பயமுறுத்துகிறீர்கள்? நான் ஒரு ஏழை. பரிமளா எங்கே?''

''பரிமளாவா அவளை யாருக்கடி தெரியும்? எனக்கு வேண்டியது நீதான்.''

''நான் ஒரு பாவமும் செய்தறியேனே.''

''நீ ஒரு பெண்ணாய்ப் பிறந்தது. அதுவும் ஒரு ஏழை வீட்டுப் பெண்ணாய் அழகோடு பிறந்தது. ஆணவமும், திமிரும் பிடித்தலைவதுதான் பாவம்'' என்றான் அந்த வெறி கொண்ட மனித மிருகம்.

அவன் கண்களில் மோகவெறி தாண்டவமாடியது. கருணையே இல்லாத கண்கள். அவன் பிணந் தின்னும் கழுகு போல் நின்றிருந்தான்.

''ஐயா என்னை உங்கள் பிள்ளைபோல் நினைத்து விட்டு விடுங்கள். நான் பணக்காரியல்ல. என் சொத்து, சுதந்திரம் அத்தனையும் என் மானந்தான். என்னைக் கெடுத்து விடாதீர்கள்'' என்று மன்றாடினாள்.

''நீ ஏழைதானே? உனக்குத் தேவையான பணம் தருகிறேன். என் விருந்துக்கு உரிய உன்னை இழக்கமட்டும் என்

ஞல் முடியாது'' என்று கூறி அவள் கரங்களைப் பிடிக்கப் பாய்ந்தான்.

அவள் திடீரென நகர்ந்து நடுவே உள்ள சதுர மேசை யின் ஒரு ஓரத்தில் நின்றுகொண்டாள். முடிந்த மட்டும் அந்த மேசையைச் சுற்றி ஓட முடிவு செய்தாள்.

''என்னை ஏமாற்ற முடியாது பானு!''

''ஐயோ! என்னைத் தொந்தரவு செய்தால் பொலிஸில் முறையிடுவேன்.''

''பொலிசா? அடி பைத்தியமே! உன்னை நான் அழைத் தேனு? யாரோ அழைத்து நீ வந்தாய். என் அறையைத் தேடி நீயாக வந்தாய். விருப்பமில்லாமலா வந்தாய் என்று நான் கேட்பேன்.''

''சதி... சூழ்ச்சி...'' என்று கதறிஞள் பானு.

''எப்படி வேண்டுமாஞலும் கதறு, கூக்குரலிடு. யாருமே இங்கு வரமாட்டார்கள். இங்கிருந்தவர்களைக்கூட அனுப்பிவிட்டேன்.''

''கடவுளே! இந்த வெறியனின் துள்ளலைப் பார்த்துக் கொண்டா இருக்கிருய்?'' என்று கதறிஞள் பானுமதி.

''கடவுள் உனக்கு உதவமாட்டார். நீ கதறித் துடித் தாலும் உன்னை நான் விடப்போவதில்லை'' என்று அவன் கூறிமுடிக்கும்போது, வெளிக் கதவில் யாரோ தட்டும் சத் தம் கேட்டது. அவன் பரபரப்படைந்தான். பின்னர் அவளைத் திரும்பிப் பார்த்து ''நீ ஏதும் முரண் செய்தாய் என்ருல் உன் மானத்தையே அவர்கள் முன்னிலையில் பறக் கடித்து விடுவேன்'' என்று கூறிவிட்டுக் கதவைத் திறந் தான்.

## அத்தியாயம் பதினெட்டு

"குட்மோனிங் மிஸ்டர் நாகலிங்கம். நான் 'அப்துல்லா அன் கோ'விலிருந்து வருகிறேன்" என்று கூறிக் கொண்டு நுழைந்தான் ரகுராமன்.

"ஓ...! நம்ம கம்பனி ஆளா உள்ளே வாரும். இங்கே ஒருவிருந்துக்குத் தயார் செய்துகொண்டிருக்கிறேன்"என்று கூறிவிட்டு உள்ளே சென்றவனைப் பின்தொடர்ந்தான் ரகுராமன்.

அவனைப் பார்த்ததும் பானுமதியின் உள்ளத்தைப் பிடித்திருந்த அச்சம் விலகிவிட்டதாயினும், அவனும் இவனுக்கு உடந்தையாய் இருப்பானே என்ற அச்சமும் தலைதூக்கியது. ஆனால் ரகு அவளைத் திரும்பிப் பார்க்காமலேயே ஒரு நாற்காலியில் அமர்ந்தான்.

"மிஸ்டர் நாகலிங்கம் இந்தக் கவரில் சகல விபரமும் இருக்கிறது. பார்த்துவிட்டு ரசீதில் கையொப்பமிட்டுத் தரவும்" என்றான்.

"உங்கள் பெயர் ரகுராமனா?"

"ஆமாம்."

"கம்பனியில் சேர்ந்து...'

"மூன்று மாதங்கள்தானாகின்றது."

"அப்துல்லாவுக்கு மிகவும் வேண்டியவர் போலும்?"

"மிஸ்டர் நாகலிங்கம். பார்சல் செக்பண்ண வேண்டாமோ?"

"வேண்டியதில்லை" என்று கூறிவிட்டு, ரசீது எழுத ஆரம்பித்தார்,

ரகுராமன் பானுமதியைப் பார்த்தபடி "இந்தப் பெண் உங்கள் செக்கிட்டரியா?" என்று கேட்டான்.

"இல்லையில்லை. இவள் ஒரு விடயமாக வந்திருக்கின்ருள்."

"இங்கே அடிக்கடி வருவார்களா?"

"என் வாடிக்கையாளர்களில் இவளும் ஒருத்திதான். மிஸ்டர் ரகு வேண்டுமானுல் உங்களுக்கும்..."

"நோ, நோ. அப்படி எனக்குப் பழக்கமில்லை மிஸ்டர் நாகலிங்கம்" என்று அவன் கூறியபொழுது பானுமதிக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை.

"ரசீது எழுதி முடிந்ததா?"

"ஜேஸ், ஜேஸ் இதோ" என்று அவனிடம் ரசீதைக் கொடுத்ததும் அவன் எழுந்து நின்ருன். அதே வேளையில் பானுமதி ஓடிவந்து அவனைக்கட்டிப்பிடித்துக்கொண்டாள்.

"மிஸ்டர் நாகலிங்கம்! என்ன இது?" என்ருன் ரகு.

"அவள் ஒரு அரைப் பைத்தியம். பணத்திற்காக என்னவோ எல்லாம் செய்வாள்" என்ருன் நாகலிங்கம்.

"ஓ அப்படியா?" என்று தன் தலையை வருடினுன் ரகு. கதறினுள் பானுமதி.

"ரகு உங்களைக் கண்டதும் எனக்கு நேரவிருந்த விபத்திலிருந்து காப்பாற்ற ஆண்டவனே வந்துவிட்டதாக எண்ணி மகிழ்ந்திருந்தேன். ரகு! என்னைக் காப்பாற்றுங்கள் ரகு."

"மிஸ்டர் நாகலிங்கம்! வட் இஸ் திஸ்?" என்ருன்.

"மிஸ்டர் ரகு! இது ஒரு பைத்தியம் என்றேனே. இவள் கூறுவதை நம்புகின்றீர்களா?" என்ருன் நாகலிங்கம்.

"எப்படி நம்புவது? இந்தப் பெண்களே சுத்த மோசம்! இப்படித்தான் மிஸ்டர் நாகலிங்கம். என் வீட்

டிலுள்ள ஒரு பெண்...'' என்று ஆரம்பித்துக் கீதாவின் கதையைக் கூறிமுடித்துவிட்டு, ''அப்படித்தான் இவளும் இருப்பாளென்று நினைக்கிறேன். இல்லையா மிஸ்டர் நாக லிங்கம்?'' என்றான் ரகுராமன்.

''யூ ஆர் கரெக்ட் மிஸ்டர் ரகு. பணத்துக்காக வந்து காலைப்பிடித்துக் கெஞ்சுவது, ஆட்களைக் கண்டதும் பத்தினி வேடம்'' என்று முறுகினான் நாகலிங்கம்.

''மிஸ்டர் நாகலிங்கம்! இவள் போக விரும்பினால் போகலாம்தானே? என்னையேன்... உன்னை அவர் பலவந்தம் செய்கிறார் என்றுதானே கூறினாய்?''

''ரகு என்னை நீங்கள் நம்பவில்லையா?''

''மிஸ், நம்பிக்கை என்பது சந்தர்ப்ப சூழலைப் பொறுத்து உருவாவதுதானே. இந்த இடத்தில் மிஸ்டர் நாகலிங்கம் கூறுவதுதான் உண்மை. அவர் வலியவர், பணக்காரரர். என்ன மிஸ்டர் நாகலிங்கம்?''

''ஜேஸ் மிஸ்டர் ரகு!''

''அதுசரி மிஸ்டர் நாகலிங்கம். என்னை ஏமாற்றிய அந்தப் பெண்ணின் பெயர் உங்களுக்குத் தெரியாதே?''

''சொன்னால் தெரிந்துகொள்கிறேன்.''

''அவள் பெயர் கீதா!''

''கீதாவா? எந்தக் கீதா?'' ஆச்சரியப்பட்டார் நாக லிங்கம்.

''கீதா லட்சுமணன், உங்களுக்குத் தெரியும்போல் இருக்கே! மிஸ்டர் நாகலிங்கம்... இந்தப் பெண்ணை வெளியே போகவிடமாட்டீர்களா?''

''அவள் வந்து எனக்கு ஒருவரால் பரிசாக ஒப்படைக் கப்பட்டவள்'' என்றார் நாகலிங்கம்.

'அப்படியானால் நீங்கள் இதுவரை கூறியது யாவும் பொய் இல்லையா?''

''டேய் ரகு! நீ வந்தவேலை முடிந்துவிட்டது. போ வெளியே! இது என் சொந்த விடயம்'' என்று கர்ஜித்தான் நாகலிங்கம்.

''ஊரார் வீட்டுப் பெண்ணை ஏமாற்றி உன் வீட்டில் கொண்டுவந்து வைத்து மிரட்டுவது, பலாத்காரம் செய்ய முற்படுவது உன் சொந்த விடயமா?'' அவனுடைய பேச்சில் இதுவரையிலிருந்த கேலிகள் மறைந்து சற்று சூடேறுவதை உணர்ந்தாள் பானு...

''டேய் தம்பி நீ சிறுபிள்ளை. விளையாடாதே!''

''மிஸ்டர் நாகலிங்கம்! என் கம்பனி விடயம் முடிந்துவிட்டது இல்லையா?''

''ஆமாம்! நீ போ. இல்லை அப்துல்லாவிடம் கூறி உன் சீட்டைக் கிழித்துவிடுவேன்.''

''என் சீட்டுக்கிழியுமுன் உன் சீட்டுக் கிழிக்கப்பட்டுவிடும் நாகலிங்கம். நீ யாரோ ஒரு மூன்றும் மனிதர் முன்னிலையில் எமது பிஸ்னஸ் விடயம்பற்றிக் கதைத்தவைகள் அப்துல்லாவுக்குத் தெரிந்தால்...? அதுமட்டுமில்லை நாகலிங்கம், இந்தப் பெண் நேரே பொலிசுக்குப் போவாள். பொலிசுக்குப் போவதை அப்துல்லா விரும்பமாட்டார் என்று நினைக்கிறேன்.''

''மிரட்டுகிறுயா தம்பி? நான் நாகபாம்பு. உன் பாச்சா பலிக்காது. நீ கூறுவதற்கு எல்லாம் சாட்சிகள் வேண்டாமா?'' என்று ஏளனமாகச் சிரித்தார் நாகலிங்கம்!

''அட நச்சுப் பாம்பே!'' என்று அதிர்ச்சி அடைந்தவன் போல் நடித்தான் ரகு.

நாகலிங்கம் பலமாகச் சிரித்தார். பானுவின் உடலும் உள்ளமும் சோர்ந்து நடுங்கியது.

''தம்பி ரகு! நீ உன் வழி போவதுதான் நல்லது. அப்துல்லா தன் காரியத்தைத் தவிர வேறு வேலையில் தனது

ஊழியர்கள் தலையிடுவதை விரும்பமாட்டார். அது உனக்குத் தெரியுமில்லையா?''

''நாகலிங்கம் நீ நச்சுப் பாம்பு. நான் யார் தெரியுமா? உன்னைப் போன்ற நச்சுப் பிராணிகளையே சுட்டுப் பொசுக்கும் தீ, காட்டுத் தீ. இதோ! இதுவரை நீ பேசிய விடயங்கள் இந்த ஒலிப் பதிவு நாடாவில் பதிவாகியிருக்கும்'' என்று பக்கட்டிலிருந்து எடுத்துக் காட்டினான். அது ஒரு நவீன ஒலிப்பதிவுக் கருவி.

''ரகு! நீ... நீ...''

''உன்னைப்போல ஆயிரமாயிரம் எத்தர்களை எனக்குத் தெரியும். நீ முதலில் அப்துல்லா முன் நிறுத்தப்படுவாய். உன் பங்கு வியாபாரம் குளோஸ்! பின்னர் பொலிசில்... புரிகின்றதா?'' என்று சிரித்தான் ரகு.

''தம்பி! என்னை மன்னித்துவிடு. அந்த வேலைமட்டும் செய்யாதே! நீ இவளைக் கூட்டிப்போ. இனி நான் இதில் எல்லாம் தலையிட மாட்டேன்'' என்று மன்றாடினான்.

''ஆல் ரைட்! பானு நீ கதவைத் திற'' என்றான்.

''தம்பி! அந்த நாடாவைத் தருகின்றாயா?''

''இதையா? இதற்குப் பெறுமதியாக நீ என்ன தருவாய் மிஸ்டர் நாகலிங்கம்? இந்தப் பெண்ணின் மானமே இதில்தான் அடங்கியுள்ளது!''

''தம்பி ரகு!''

''சரி! இதற்கு மான நட்டமாக ரூபாய் பத்தாயிரம் அந்தப் பெண்ணிடம் கொடுத்துவிடுகிறாயா?''

''ரூபா பத்தாயிரமா?''

''ஆமாம்! இதே பணத்தை உன்னை ஏவிவிட்டவளிடமே கறக்கலாம்.''

''உனக்கு அதெல்லாம் தெரியுமா?''

''தெரியுமாவா? அவள்தானே இதெல்லாம் கூறினாள்.''

''சண்டாளி கீதா! உன்னை நான் சும்மா விடப்போவதில்லை'' என்று கூறிவிட்டு, மேசை டிராயரைத் திறந்து ரூபா பத்தாயிரம் எடுத்து மேசை மீது வைத்தார்.

''சரி மிஸ்டர் இதில் கையொப்பமிடுங்கள்''என்று கூறிவிட்டு ஒரு துண்டுக் கடிதத்தை நீட்டினான்.

அந்தத் துண்டுக் கடிதத்தைப் படித்துப் பார்த்ததும் திகைத்தவராய் நிமிர்ந்து அவனைப் பார்த்தார்.

''உங்களுக்கு விருப்பமென்றால் மட்டுமே தான் ஸ்டாம்பு ஒட்டி சைன் பண்ணுங்கள். இல்லையெனில் பணத்தை எடுங்கள்'' என்று கூறிக்கொண்டு ரகு எழுந்தான்.

அதே வேளையில் கதவைத் திறந்துகொண்டு வெளியே சென்ற பானு, திரும்ப உள்ளே ஓடிவந்து ''ரகு ரகு'' என்று வெளியே சுட்டிக் காட்டினாள். அவள் உள்ளம் வேகமாக அடித்துக் கொண்டது.

வெளியே பார்த்த ரகுராமன் திடீரென எழுந்து கதவைப் பூட்டிவிட்டு நாகலிங்கம் பக்கமாகத் திரும்பி,

''என்ன மிஸ்டர் நாகலிங்கம்! நான் கேட்டபடி நடக்கப் போகிறீர்களா? அல்லது நான் போகவா?'' என்று தான் கொடுத்த பேப்பரை எடுக்கக் கையை நீட்டினான். வேண்டாமென்று அவனைத் தடுத்து நிறுத்திய நாகலிங்கம், பேப்பரில் கையெழுத்திட்டுவிட்டு, மேசை டிராயரைத் திறந்து பத்தாயிரம் ரூபாய் நோட்டுக் கட்டொன்றை எடுத்து நீட்டினார். நோட்டுக்களில் சிலவற்றை உருவிப் பார்த்த ரகுராமன், ''தாங்யூ மிஸ்டர் நாகலிங்கம்''

என்று கூறிவிட்டு பாக்கெட்டிலிருந்த ஒலிப்பதிவுக் கருவியை எடுத்து மேசைமீது வைத்தான். இதற்கிடையில் பலமுறை கதவில் தட்டும் சத்தம் கேட்டது.

ரகு எழுந்து கதவைத்திறந்துவிட்டான். உள்ளே நுழைந்த சீதா மிரட்சியுடன் மூவரையும் மாறி மாறிப் பார்த்தாள்.

''மிஸ்டர் நாகலிங்கம்! இந்தப் பணம் பானுமதியைப் பங்கப்படுத்த நினைத்த உமக்குத் தண்டனைப் பணம். அப் பணத்தை உன்னை ஏவியவர்களிடமே அறவிட்டுக்கொள். ஒலிப்பதிவுக் கருவியில் எதுவுமே இல்லை. அது வெறும் விளையாட்டுக் கருவி'' என்று கூறிவிட்டு பானுவின் கையைப் பிடித்திழுத்துக்கொண்டு வெளியேறினான்.

## அத்தியாயம் பத்தொன்பது

அன்பினால் பணிய வைக்க முடியாத ஒன்றைப் பலாத்காரத்தினால் பணியவைக்கலாம் என்பார்கள் ஒரு சாரார். ஆனால், அன்பு என்ற ஒரு மாய அஸ்திரத்தின் மூலம் எதையும் பணிய வைக்கலாம் என்று சிலர் கூறுவார்கள். எது எப்படியிருப்பினும், வீரம் மட்டும் தனித்துச் சாதிக்க முடியாததை விவேகமும் சேர்ந்தால் சாதித்து விட முடியும் என்று நம்புகிறவன் ரகுராமன். அவனுடைய விவேகத்தை நினைத்து வியந்துகொண்டிருந்தாள் பானுமதி.

அந்தப் பயங்கர விபத்து நடந்து ஒரு நாளாகிவிட்ட போதும், அப்போது நடந்த மாதிரித்தான் இருந்தது பானுவுக்கு, அவள் இதுவரை காலமும் தெய்வம் என்ற

ஓர் அருவ சக்தியைத்தான் வழிபட்டு வந்தாள். ஆனுல், அவளுக்கு ஏற்பட்ட அந்த விபத்தின் பின் அந்த விபத்திலிருந்து காப்பாற்றிய தெய்வமான ரகுராமனையும் சேர்த்து வழிபட ஆரம்பித்தாள்.

அவள் முதல் நாள் இரவு கண்ட பயங்கரக் கனவில் இன்பத்துக்குப் பின் துன்பம் ஏற்பட்டிருந்தது. நடந்ததோ மாறுபட்ட நிகழ்ச்சி. அவள் இதயம் அடித்துக் கொள்ளும் ஒலி அவளுக்குக் கேட்டது. அதே வேளையில் பாரதி அங்கே வந்தாள்.

''என்ன பானு! கனவு காண்கிருயா?'' என்ருள் பாரதி.

''பாரதி! மிஸ்டர் ரகு இன்னும் வரவில்லையா?''

''அவன் வருவான் போவான். ஏன் பானு?''

''நான் அவரோடு சில விடயங்கள் கதைக்க வேண்டும்.''

''பானு! நீ அண்ணனை வெறுத்தாய்; நான்தான் அவனை நீ வெறுக்கும்படியான செய்திகளைக் கூறினேன். நீ இனி யார் சொன்னுலும் அவனைப்பற்றிக் கெட்ட எண்ணமே கொள்ளமாட்டாய் இல்லையா?''

''பாரதி! யாரை நினைத்து நான் பயந்தேனே, அவரே என் பெண்மையைக் காப்பாற்றிய தெய்வமாகிவிட்டார். பாரதி 'ஜேம்ஸ் பொண்ட்' கதை படித்திருக்கிருயா?''

''ஆமாம்; அயன் ப்ளெமிஸ் எழுதிய நாவல்கள் அண்ணனிடம் நிறைய இருக்கே; படித்திருக்கிறேன்!''

''அந்த ஜேம்ஸ் பொண்ட் கூட ரகுவிடம் பிச்சை வாங்க வேண்டுமடி பாரதி. ரகு சாதாரண மனிதனில்லை. ஓர் அபூர்வப் பிறவி. அதுமட்டுமா பாரதி? எனக்கு 'ரென் தௌசன்ட்' மான நஷ்டமாக வாங்கி என் பெயரில் 'டிப்பாசிட்' செய்திருக்கிருர்'' என்ருள்.

அதே வேளையில் நாகலிங்கம் அப்துல்லாவின் அந்த ரங்கக் காரியதரிசியான ரோஸியிடம் ரகுராமனைப்பற்றி புகார் கூறிக்கொண்டிருந்தார்.

''நீங்கள் கூறுவதை என்னுல் நம்பமுடியாது மிஸ்டர் நாகலிங்கம். மிஸ்டர் ரகுராமன் நாணயமானவர். நம்பக்கூடிய ஒருவர். அவர் ஒரு காரியம் செய்கிருரென்ருல் அதிலே ஏதோ ஒரு நல்ல விடயம் இருந்திருக்கும்'' என்ருள் ரோஸி.

''ரோஸி, இந்த விடயம் அப்துல்லாவுக்குப் போக வேண்டுமென நான் விரும்பவில்லை. ஆனுல் அந்த ஆசாமியை இனிமேல் என்னிடம் அனுப்ப வேண்டாமென்று தான் கூறுகின்றேன்'' என்ருர்.

''அதைத் தீர்மானிக்கவேண்டியவர் 'பொஸ்' தான்'' என்று கூறி போனை வைத்துவிட்டாள் ரோஸி.

கீதாவின் மனதில், ஆயிரம் சர்ப்பங்கள் ஒன்று சேர்ந்து தாக்கினுல் எப்படியிருக்குமோ அப்படியிருந்தது நாகலிங்கத்தின் செய்கை. அவள் ரகுராமனை மடக்குவதற்காக பானுமதியைப் பழிவாங்க நினைத்தாள். ஆனுல், அத்திட்டம் அவளையே, பழிவாங்கியதன்றி பத்தாயிரம் ரூபாய் நட்டத்திலும் கொண்டு சென்று விட்டது. மோகினியும், கீதாவும் சேர்ந்து அந்த விடயத்தை ராஜாராமனுக்குத் தெரியாமல் செய்துவிட்டனர்.

வாழ்க்கை என்னும் நாடகத்தில் ஏதாவது ஒரு சிறிய அல்லது பாரதூரமான சம்பவம் ஒரு திருப்பு முனையாக அமைந்து விடுவதுண்டு. அப்படித்தான் பானுமதிக்கும் ஏற்படவிருந்த அந்தப் பயங்கரம் ஒரு திருப்பு முனையாகவே அமைந்துவிட்டது. அந்தத் திருப்பு முனையின் மைய ஊசியாக நின்றவன் ரகுராமனே. அவனைப்பற்றி நினைக்கும் பொழுது அவள் உள்ளத்தில் எந்தவிதமான முடிவுக்கும் வர முடியவில்லை. அப்படித்தானே அவனும் அன்று கூறி

ஞன் என்பதை எண்ணியபொழுது, அந்த நிகழ்ச்சி அவள் மனதில் நிழற் படம்போல் விரிய ஆரம்பித்தது.

நாகலிங்கத்தின் வீட்டிலிருந்து புறப்பட்டு வெளியே வந்ததும் அவளுடைய கையை விட்டுவிட்டு, ''மன்னித்துக் கொள் மிஸ் பானுமதி. 'ஆபத்துக்குப் பாவமில்லை' என் பார்கள். உன் கையை நான் பிடித்துவிட்டேன். சந்தர்ப் பத்தை எதிர்பார்த்து இப்படி நான் செய்துவிட்டதாக நீங்கள் நினைக்கக்கூடும்'' என்றான் கேலியாக.

''நீங்கள் நினைப்பதுபோல் இல்லை ரகு. நானே உங் களைக் கட்டிப்...'' என்று தலையைக் குனிந்தவள், பின்பு நிமிர்ந்து அவனைப் பார்த்து, ''நான் ஒரு முடிவான தீர்மா னத்துக்கு வந்திருக்கிறேன்'' என்றாள்.

''முடிவான தீர்மானங்கள் எதுவும், கேவலம் மனித வாழ்வைப் பொறுத்தவரையில் பெரும்பாலும் கிடை யாது. சூழ்நிலைக்குத் தக்கபடிதான் தீர்மானங்கள் உருவா கும், மாறும். ஆகவே என்னைப் பொறுத்தவரை சந்தர்ப்ப சூழ்நிலைகளால் ஏற்படும் எந்தவொரு விடயத்திலும் முடிவு கொள்வதில்லை. நீங்கள் கல்லூரிக்குப் போகின்றீர்களா?''

''இல்லை ரகு. எனக்கு மனம் சரியில்லை.'' அவள் கூறு வதைக் கேட்டதும், ரகு சிரித்தான். தன்னை அவள் பெயர் கூறி அழைப்பதையும், அவள் முடிவுக்கு வந்துவிட்ட தீர் மானம் என்னவாகுமென்பதையும் அவன் ஊகித்துக் கொண்டிருந்தான். ''மிஸ் பானுமதி! அப்படியாயின் நாங் கள் பாங்கிற்குச் சென்று இதை 'டிபாசிட்' செய்துவிட்டு வரலாம்'' என்றான்.

''நான் அவசியம் வரவேண்டுமா?''

''ஏன் என்னுடன் வர...?''

''ரகு! அப்படியில்லை ரகு. எனக்கு என்னவோபோல இருக்கு. நான் மிகவும் திகிலடைந்திருக்கிறேன். மற்றும் படி என்னைப்பற்றித் தவருக எதுவும் நினைக்காதீர்கள்.''

''ஆல்ரைட்'' என்று கூறியவன், 'டாக்ஸி' ஒன்றைக் கைகாட்டி அழைத்தான். இருவரும் அதில் ஏறிக் கொண்டனர்.

''நேரே ஹோட்டல் 'டீலக்ஸ்'க்கு விடப்பா'' என்றான் ரகு. பானுமதி எதுவும் பேசவில்லை. அவன் ஹோட்டலுக் கல்ல எங்கே அழைத்தாலும் அவன் எண்ணப்படி நடப்பதற்கு அவள் சித்தமாயிருந்தாள். அவன் உரிய சமயத்தில் அங்கே வந்திருக்காது போனால் அங்கே தன்னிலை...எண்ணிப் பார்க்கவே அவள் உடல் நடுங்கியது.

ஆவி பறக்கும் ஓவல் நிரம்பிய ஒரு கோப்பையை அவளிடம் எடுத்து நீட்டினான் ரகு. நன்றி நிரம்பிய பார்வையுடன் ஓவலை வாங்கிப் பருகினாள் பானுமதி.

''நன்றாகப் பயந்துவிட்டீர்கள் மிஸ் பானு.''

''ரகு! இப்படியொரு சதியை கீதாதான் தயார் செய்தாள் என்று எப்படி நீங்கள் தெரிந்துகொண்டீர்கள்?''என்றாள்.

''அது ஒன்றும் பெரியவிடயமில்லை. அந்தச் சமயம் என்னை அங்கே அனுப்பிய எங்கள் கம்பெனி முதலாளியைத்தான் நீங்கள் கும்பிடவேண்டும்,''

''ஐ ஆம் வெரி சொறி ரகு உங்களுக்கு நான் இதுவரை நன்றிகூடக் கூறவில்லையே...'' என்றாள். அவள் விழிகள் நீர்பனித்து நின்றன.

''பார்க்கப்போனால் நீங்கள் நன்றிகூறவேண்டிய அவசியமேயில்லை மிஸ், ஏனென்றால் எங்கள் வீட்டிலிருக்கும் உங்களுக்கு ஆபத்தென்றால் அது என்னைப் பாதிக்கும். ஆகவே, நான் செய்தது ஒன்று கடமை; மற்றது என் பெயருக்கு களங்கமில்லாமல் காப்பாற்றிக்கொண்டது.''

''ரகு! இந்தப் பணத்தை நீங்கள் வாங்கியிருப்பது சரியில்லை.''

'உங்களுக்கு அதுபற்றிக் கூற உரிமையில்லை. நான் வாங்கினேன். உங்கள் பெயரில்தான் 'டிப்பாசிட்'

செய்யப்போகிறேன். உங்கள் திருமணத்துக்கு என் அன்பளிப்பு என்று ஏற்றுக்கொள்ளுங்களேன்'' என்ருன்.

அவன் கூறும்பொழுது அவன் முகத்தில் தோன்றி நின்ற பிரகாசத்தையும், முறுவலையும் பார்த்தபொழுது தன்னையே தான் இழந்த நிலையில் ''ரகு'' என்ருள்.

''ஜேஸ், சொல்லுங்கள் மிஸ் பானு.''

''நீங்கள் ரேப் எடுத்தது எப்படி?''

''அது வெறும் டூப். நான் ஆரம்பத்திலேயே அங்கே வந்துவிட்டேன். என்ன நடக்கிறது பார்ப்போம் என்று தான் நின்றிருந்தேன். நிலைமை மோசமடையுமுன்பு கதவைத் தட்டினேன். அவ்வளவுதான்.''

''இந்தப் பாவி உங்களைப்பற்றி எவ்வளவு கேவலமாக நினைத்திருப்பாள். கதைத்திருப்பாள். நீங்கள் இவளுக்கு உங்கள் உயிரைக்கூடப் பொருட்படுத்தாது...''என்று கலங்கிஞள்.

''மிஸ், நான் பலனை எதிர்பார்த்து உதவிசெய்வதில்லை. செய்யவும் மாட்டேன். நீங்கள் என்னை எப்படி வேண்டுமானுலும் நினைக்கலாம். நினைத்திருக்கலாம். அதற்காக உங்களை நான் தவருக நினைப்பேனென்று நீங்கள் நினைப்பது தவறு. அப்படி நினைத்தால் உங்களுக்கும் எனக்கும் என்ன வேறுபாடு?'' என்று அவன் கூறிவிட்டுச் சிரித்தான்.

''உங்களைப்போலவே உங்கள் பேச்சும் அழகாகத் தான் இருக்கிறது'' என்ருள்.

''என் பேச்சுமட்டுமில்லை மிஸ் பானு. என் உள்ளமும் அப்படித்தான். அழுக்குமனம் உடையோர்க்கு நான் மாறுபட்டுத் தெரிந்தாலும் உண்மை வேறுதான். சரி புறப்படுங்கள். இதோ இந்த ரசீதையும் நீங்களே வைத்திருங்கள். அவன் மீண்டும் வாலாட்டினுல் இன்னும் பத்தாயிரம் ரூபா உங்களுக்கு வரும்'' என்று அவளிடம் நீட்டினுன். அதை வாங்கியபொழுது அவன் விரல்களில் அவள் விரல்கள் தொட்டு உறவாடின. அவன் அதை லட்சியப்படுத்தா

தவனுகத் திரும்பி, பக்கட்டில் என்னவோ ஒன்றை எடுத்து, "மிஸ் பானு, இதைப் பார்த்தீர்களா?" என்முன். புன் சிரிப்புத் தவழும் இதழ்களை நாவினுல் தடவிக்கொண்டே அவனையும், அவன் கையிலிருக்கும் பொருளையும் அதிசயத் துடன் பார்த்துக்கொண்டு நின்முள் பானுமதி.

"என்ன ரகு இதுவும் ரேப்றெகாடரா?"

"ஆமாம். நாகலிங்கம் முதன்முதல் உங்களிடம் பேசிய தில் இருந்து கீதா அறைக்குள் வந்தவரையில் நடைபெற்ற பேச்சுக்கள் இதில் ஒலிப்பதிவு செய்யப்பட்டுள்ளன" என் முன் புன்சிரிப்புடன்.

"அப்படியானுல் பத்தாயிரம் ரூபாவுக்கு விற்றீர்களே ரகு?"

"அது ஒரு போலி. போலிக்கு இருக்கும் மதிப்பு அசலுக்கு இருப்பதில்லையே" என்முன். அவன் விழிகளில் வெற்றியின் பெருமிதம் நன்கு தெரிந்தது.

"ஏன் ரகு இவற்றையெல்லாம் எதற்காகக் கொண்டு வந்தீர்கள்?" என்முள் பானு.

"நல்ல கேள்விதான். இது தொழில் ரகசியம். ஆனுலும் உங்களுக்குச் சொல்லலாம். நான் ஏற்றிருக்கும் பொறுப்பு பல லட்சம் ரூபா பெறுமதியான பொருட்களைக் கொண்டு சென்று கையளிப்பது. சிலசமயம் பெரும் புள்ளிகள் மோசடி செய்துவிட்டு' இடையில் நிற்கும் அப்பாவிகளைச் சிறைக்குள் அனுப்பிவிடுவார்கள். அவர்களுக்கு உயிரை விடப் பணம்தான் பெரியது. ஆகவே இப்படியான ஒன்று இருந்தால் சாட்சிகள் தேவையில்லையல்லவா?" என்று கூறி விட்டு அவளையும் அழைத்துக்கொண்டு வங்கிக்குச் சென்று திரும்பினுன். அதன்பின்பு அவள் ரகுவுடன் கதைக்க சந் தர்ப்பமே இருக்கவில்லை.

அப்பொழுதுதான் அவன் கொடுத்த ரசீதின் நினைவு அவளுக்கு வந்தது. உடனே எழுந்துபோய் அந்த ரசீதை எடுத்துப்படித்துப் பார்த்தாள். அவனுடைய முன்யோசனை

யான திட்டங்களுக்கும், செயல்களுக்கும், பெரும் விவேக முள்ள ஒருவனுகவே பானுவின் மனதுக்குத் தோற்ற மளித்தான். பானுமதி, அவனைப்பற்றிய கற்பனையிலேயே ஒன்றிவிட்டிருந்தாள்.

## அத்தியாயம் இருபது

மாலைப் பொழுதின் எழிற் காட்சி, இயற்கையன்னை மந்தகாசமாய் புன்னகைபூத்து நிற்பது போன்றிருந்தது. வெளி விருந்தையில் சாய்வு நாற்காலி யொன்றில் படுத்தபடி, ஏதோ வெளிநாட்டு சஞ்சிகை யொன்றில் மூழ்கிக்கிடந்தான் ரகுராமன். அந்தச் சஞ்சிகை யின் உட்புறத்தில் ஏதோ ஓர் உயர்தர வாசனைத் தைல விளம்பரத்துக்காக அழகிய ரோஜாப்பூவின் படம் ஒன்று போடப்பட்டிருந்ததைப் பார்த்துவிட்டு, தோட்டத்தில் மலர்ந்து குலுங்கும் ரோஜாப் பூக்களையும் பார்த்தான்.

அழகாக மலர்ந்து, மணம் வீசிக்கொண்டிருந்த ஒரு ரோஜாவின்மீது, ரீங்காரமிட்டவண்ணம் சுற்றிக்கொண் டிருந்தது ஒரு வண்டு. சஞ்சிகை படிப்பதை நிறுத்திவிட்டு அந்தக் காட்சியில் அவன் மனம் ஈடுபட்டது. சுற்றிப் பறந்த வண்டு சும்மா போகவில்லை. மொட்ட விழ்ந்துகொண்டிருந்த இதழ்களில் தன் உணர்வுக் கொம்புகளை நீட்டி, கட்புலனுக்குப் புரியாத ஏதோ வினுே தங்களைச் செய்துகொண்டிருந்தது. அடிக்கடி ஒவ்வொரு இதழிலும் மாறி மாறி இருந்து எழுந்து பறந்தது, மலர் களில் தேனை மட்டும் உண்டுசெல்ல வண்டுவரவில்லை. அந்த மலர்களை மேலும் மலர்விக்கவும் செய்கின்றது வண்டு என்பதை உணர்ந்துகொண்டான் ரகுராமன். இப்படித் தான் பெண்களும்... ஏனென்முல்... பெண்களை மலர்

களுக்கு ஒப்பிட்டுக் கூறியதன் தன்மை என்னவாயிருக்கும் என்ற சிந்தனையில் ஈடுபட்டிருந்தான் ரகு.

என்ன! எந்தக் கோட்டையைப்பிடிக்க யோசனை நடக்கிறது.'' என்ற தேனினுமினிய குரலைக்கேட்டு நிமிர்ந்து பார்த்தான் ரகுராமன்.

அழகே உருவாக நின்றிருந்தாள் பானுமதி. வேண்டுமென்றே தன் இயற்கையழகுக்கு மெருகூட்டியிருக்கிருள் என்பதை உணர்ந்து கொண்டான் ரகுராமன்.

''என்ன நான் கேட்கிறேன், பேசாமலிருக்கிறீர்களே?'' என்ருள் பானுமதி.

''கேட்டதற்கெல்லாம் பதில் சொன்னுல் அதற்குச் சில சமயம் மதிப்பில்லாமல் போய்விடலாம் ரீச்சர்.''

''நான் ரீச்சர் என்பதினுல் கேட்கவில்லை. பானு கேட்கிறேன்.''

''ஜேஸ், சொறி மிஸ் பானுமதி. நான் எந்தக் கோட்டையையும் பிடிக்க யோசனையிலாழ்ந்திருக்கவில்லை. உங்களைப் பார்த்தால் தான் ஏதோ பெரிய கோட்டையைத் தாக்கச் செல்லும் கோலத்தில் புறப்பட்டிருக்கிறீர்கள்'' என்ருன் புன்முறுவல் பூத்தவனுய்.

''நான் அப்படி ஒன்றும்...'' என்றவள் நாணி நிலம் நோக்கி நின்ருள்.

''மிஸ் பானுமதி! அதோ பாருங்கள். அந்த ரோஜாவைப் பாருங்கள்'' என்ருன்.

அவளும் பார்த்தாள். அப்பொழுது தான் மொட்டவிழ்ந்து நின்ற மலரில் வண்டுகள் செய்யும் லீலாவிநோதத்தை மெய்மறந்து பார்த்துக் கொண்டே நின்ருள்.

''என்ன அப்படியே சொக்கிப் போய்விட்டீர்களா?'' என்ருன் கேலியாக ரகுராமன்.

"அப்படியில்லை; மலரைப் பெண்ணுக்கும், வண்டை ஆணுக்கும் ஒப்பிட்டுப் பார்த்த அந்த அறிஞர்களைப்பற்றி நினைத்தேன்."

"அதாவது ஆண், மலர் விட்டு மலர் தாவும் வண்டு· அப்படித் தானே?"

"ஆமாம்! ஆனல், அந்த வண்டு மட்டும் அந்த ரோஜா வையே சுற்றிக் கொண்டிருக்கிறது. இல்லையா?"

"தவறு! மிஸ் பானு. நீங்கள் நினைப்பது தவறு. கவி ஞர்கள், கற்பனைவாதிகளின் அதிகப்பிரசங்கித்தனம் தான் வண்டுகள்மீது குற்றம்சுமத்துவது. பாவம்! அந்த அப்பாவி வண்டினங்கள் தங்கள் மீது இப்படியொரு அவமானம் சுமத்தப்பட்டிருக்கின்றது என்று அறிந்து கொள்ளும் சக்தி இல்லாததால் ஆனந்தமாகத் திரிகின்றன. இல்லையெனில் தம்மீது குற்றஞ்சுமத்தியவர்களைக் கொலை செய்து விட்டுத் தான் மறுகாரியம் பார்க்கும்" என்ருன்.

"ஏன் ரகு? உங்களை அப்படி நான் நினைக்கிறேன் என்று தானே இந்தப்பிரசங்கம்?"

"கிடையாது! என்னை நீங்கள் எப்படி வேண்டுமாஞ லும் நினைக்கலாம் மிஸ் பானுமதி. நான் அது பற்றிக் கவலைப்பட்டதில்லை. கவலைப்படப்போவதுமில்லை. ஆனல், நீங்கள் அன்று அம்மாவிடம் கூறியது ஞாபகமிருக்கா?"

"ஆமாம்."

"அது போல இந்த வண்டினத்தின் மீது சுமத்தப்படும் பழிக்கும் அவை பொறுப்பல்ல என்பது அறிவியல். அதா வது விஞ்ஞான ஆராய்ச்சியாளர்கள் கண்டுள்ள உண்மை."

"ரகு! நீங்கள்..."

"நான் விஞ்ஞானம் படித்தவன் என்று தான் நீங்கள் நினைக்கிறீர்கள்! அது வேறு பிரச்சினை. தாவரவியல் ஆராய்ச்சியாளர்கள் கூறும்உண்மையைத் தான் நான்கூறு

கின்றேன். மலர்கள் அழகான வர்ணங்களைக் கொண்டு பூப்பதும் நறுந்தேனைச் சொரிவதும் ஏன் தெரியுமா? வண்டுகளைத் தம் பக்கம் இழுப்பதற்காகத் தான்.''

''இதனால் மலருக்கு என்ன பலன்?''

''தேனுண்ணுவதற்காக மலருக்கு மலர் வண்டுகள் தாவும் அதேவேளையில், மலர்களின் இனப் பெருக்கத்திற்கும் அவை துணைக்காரணிகளாகுகின்றன. அந்த உதவிக்கு நன்றியாக வண்டுகளுக்குத் தேனை அளிக்கின்றன மலர்கள், புரிகின்றதா?''

''ரகு! நீங்கள் எதையும் ஆராய்ச்சிக்கண்ணோடு தான் நோக்குகிறீர்கள்.''

''மேலெழுந்தவாரியாகப் பார்க்குமிடத்தில் தான் பிரச்சினைகள் தோன்றுகின்றன. அதே வேளையில் சிலமலர்கள் பார்க்க அழகில்லையென்றாலும் நறுமணம் மிக்கதாகவும், சில அழகுள்ளவையாக ஆனால் மணமில்லாததாகவும் இருக்கின்றன. அவை தமது கவர்ச்சிகளைக் காட்டியே...''

''போதும் ரகு போதும்! நீங்கள் வேண்டுமென்றே என்னை...'' என்று கூறும்பொழுது அவள் விழிகளில் நீர் மல்கிநின்றது. பனியில் நனைந்து துடிக்கும் மலர் இதழ்கள் போன்று அவள் கண் இமைகள் துடித்தன.

''மிஸ் பானுமதி! நான் வேண்டுமென்று எதுவும் கூறவில்லை. ஒரு விடயத்தை எடுத்துக் கொண்டால் அதிலேயே மூழ்கிவிடுகின்றேன். மன்னித்து விடுங்கள். ஆமாம். நான் உங்கள் மனம் நோக ஏதும் கூறியிருந்தால் மன்னித்து விடுங்கள்.''

''ரகு! என்னிடம் எதற்காக இந்த மன்னிப்பும் மரியாதைகளும்?''

''என்னைப் பொறுத்த மட்டில் என்னால் திடீரெனஅன்பு காட்டவோ, திடீரென வெறுக்கவோ முடியாது. அன்பின்

நெருக்கம் மரியாதைகளைக் குறைத்து விடலாம். ஆனால், விரைவில் நெருங்கவும் விரைவில் விலகவும் எனக்குத் தெரியாததினால் மரியாதை காட்டுவதில் ஓர் உறுதியான உத்தியில் நின்றுகொண்டிருக்கிறேன்.'.

''எனக்கு மன்னிப்பே கிடையாதா?''

''ஏன்? நீங்கள் ஒரு தவறும் செய்ததில்லையே. நான் எதற்காக மன்னிக்கவேண்டும்?''

''நான் உங்களை முன்பு தவறாக நினைத்தேன். தவறாகக் கதைத்தேன். தவறாக...''

''மிஸ் பானுமதி! நடந்தது என்னவென்பதைப் பற்றி நினைப்பது மூடத்தனம். எந்த ஒரு மனிதனைப் பற்றியும் எடைபோடுவது அவனுடைய கடந்தகால வாழ்வை வைத்தல்ல. அப்படி நினைத்துப்பார்த்தால் பெரிய மகான்களும், ஞானிகளும் கூட சமூகத்துக்கு உதவாத மனிதர்களாகிவிடுவார்கள். ஒருவன் எப்படி வாழ்ந்தான், வளர்ந்தான் என்பதை மறந்துவிட்டு அவன் வாழ்கிறான், செல்கிறான் என்பதைப் பொறுத்தே அவன் நல்லவனா, கெட்டவனா என்று எடைபோடவேண்டும். நான் சொல்வது உங்களுக்குப் புரிகின்றதா?''

''புரிகின்றது ரகு! ஒரு சிறு வேண்டுகோள்.''

''சொல்லுங்கள்!''

''உங்கள் மைத்துனர்; அதாவது பாரதியின் கணவர் வருகின்றாராமே?''

''ஆமாம். வருகிற புதன்கிழமை.''

''அதற்கு முன் பாரதியும் நானும் சினிமா ஒன்று பார்க்கலாமென்று நினைக்கிறேன்..'

''அதற்கும் எனக்கும் என்ன சம்பந்தம்?''

''நீங்களும் எங்கள் கூட வரவேண்டுமென்றுதான் கேட்டேன்.''

"ஓ கே. தாங்யூ. கரும்பு தின்னக் கூலியா? செலவு உங்கள் பொறுப்பா? என் பொறுப்பா?"

"நான் தானே உங்களைக் கேட்டேன். ஆகவே என் பொறுப்பு. நீங்கள் அழைத்தால் உங்கள்..."

"நான் அழைத்தால்... நான் அழைத்தால்... நீங்கள் வருவீர்களா?" என்ருன் ஆச்சரியத்துடன்.

"நிச்சயமாக வருவேன் ரகு!"

"அப்படியாளுல் நான் அழைக்கப்போவதில்லை" என்று கூறிவிட்டு, "நான் உடைமாற்றிக்கொண்டு வருகிறேன்" என்று ரகு உள்ளே சென்ருன்.

ரகுராமன் உடை மாற்றிக்கொண்டு உள்ளே வருவதற்கும் வெளி வாசலில் கார் ஒன்று வந்து நிற்பதற்கும் சரியான பொருத்தமாகவே இருந்தது. காரைக் கண்டதும் ரகு அங்கே சென்ருன். ரோஸியுடன் வேருெரு அழகான பெண்ணும் காரிலிருந்து இறங்கினுள்.

"ஹலோ ரோஸி! இது... யார்?" என்ருன்.

"ரகு! இவள் தான் நான் சொன்னேனே எட்லின்.என்னுடைய 'சிஸ்டர் இன் லோ' எங்களுடனேயே வேலை செய்யப்போகிருள்."

"வெரி கிளாட்" என்று கூறுமுன் "ஹலோ" என்று அவன் கரம் பற்றிக் குலுக்கினுள் எட்லின்.

"ரகு! நீங்கள் ரெடியாய் புறப்பட்டு நிற்கின்றீர்களே? எங்களுடன் வந்தால் என்ன?" என்ருள் அந்தப் பெண்.

"ஒகே" என்றவன் அவளைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே "யூ ஆர் வெரி பியூட்டிபுல்" என்ருன்.

"தாங்கியூ" என்று அவளும் சிரித்தாள்.

தூரத்தில் நின்ற பானு இத்தனையையும் பார்த்துக் கொண்டு தான் நின்ருள். ஆனுல், அவன் அவளைத் திரும்

பிக்கூடப் பார்க்காமல் அவர்களோடு காரிலேறி மறைந்து விட்டான். பானுமதியின் இதயத்தை யாரோ கசக்கிப்பிழிவது போலிருக்கவே அவள் அழுதபடி ஓடிச்சென்று கட்டிலில் வீழ்ந்து குமுறிக் குமுறி அழுதாள்.

## அத்தியாயம் இருபத்தொன்று

நாம் நினைத்தும் பார்க்காத ஒன்று தான் திடீரென எம்முன் வந்து நிற்கின்றது. பெரும்பாலும் நினைப்பது நினைவுடனேயே நின்றுவிடுகின்றது. ஆனால், கைக்கெட்டியது வாய்க்கெட்டாமல் போனது போல முடிந்துவிட்ட அந்த நிகழ்ச்சியினால் மனம் தடுமாறிப் போய்விட்டாள் பானுமதி. அழுதழுது அவளுடைய அழகிய முகங்கூட வீங்கிப் போய்விட்டது. அவள் நிலையைப் பார்த்த பாரதி என்ன செய்வதென்றே புரியாமல் விழித்துக்கொண்டு நின்றாள்.

''ஏன்பானு? அவன் போனால் போகிறான். நீ வாவேன் பானு'' என்றாள்.

''பாரதி...! என்னை மன்னித்துவிடு பாரதி. நாளைக்குப் போவோம். உன் அண்ணா செய்த வேலையால் என் மனம் மிகவும் பாதிக்கப்பட்டு விட்டது. மற்றவர்களுடைய மனதைப் புரிந்து கொள்ளாது மற்றவர்களின் இதயத்தைக் கசக்கிப் பிழிவதில் ஏன்தான் இத்தனை விருப்பமோ?'' என்றாள்.

''பானு...! அவன் தான் ஒரு புதிரானவன் என்றால் அவனை நீ வேறு...?''

''நான் வேறு என்ன பாரதி! உண்மையை உன்னிடம் இனியும் ஒளித்துப் பயனில்லை. பாரதி நான் அவரை விரும்புகிறேன்'' என்ருள்.

பாரதி சிலையாகிவிட்டாள். அவளால் எதுவும் பேச முடியவில்லை. என்ன தான் உரிமை கொண்டாடினுலும், பழகினுலும் ரகுவை அவள் காதலிக்கிருள் என்ருல் அது ஒரு பெரிய அதிசயம் தான். பாரதி சிறிது சிறிதாக ஆரம் பத்தில் சந்தேகப்பட்டவளாயினும், அது வேடிக்கையா கவேயன்றி உண்மையாகவல்ல. ஆனுல், அவளே வாய் விட்டுக் கூறியபொழுது... அம்மா இதைக் கேட்டால் எவ் வளவு மகிழ்ச்சியடைவார்கள் என்று எண்ணிய பாரதி வீட் டுக்குப் போக திரும்பினுள்.

''பாரதி! ஏய் பாரதி! நான் கூறியது உனக்குப் பிடிக்கவில்லையா?''

''பானு! பானு!'' என்று ஓடிச்சென்று அவளை அணைத் துக்கொண்டாள்.

''பானு, நீ எனக்கு அண்ணியாக வர நான் கொடுத்து வைத்திருக்கவேண்டுமடி பானு.''

''அது சரி பாரதி. என் விருப்பம் நிறைவேறுமா?''

''நிறைவேறிவிட்டதென்றே வைத்துக்கொள். அம்மா கூட அன்று கேட்டார்கள்.''

''என்னடி கேட்டார்கள்?''

''அந்தப் பெண் பானு நல்ல புத்திசாலி. ரகுவை அவ ளுக்குக் கட்டிவைத்தால் அவன் திருந்திவிடுவான் என்ருள். நான் தான் அப்படி அவளைப் பற்றி நினைப்பதே தவறு அம்மா என்று கூறிவிட்டேன். நீ சரியான ஆளடி பானு.''

''பாரதி! என் பெண்மையின் புனிதத்தைக் காத்த தெய்வம் தான் ரகுராமன். அவர் நல்லவரோ. கெட்ட வரோ அன்று அந்த ஆபத்திலிருந்து காப்பாற்றிக் கை

யைப் பற்றி அழைத்து வந்த போதே நான் அவரோடு ஐக்கியமாகி விட்டேன்.''

''ம்'' என்று கூறிவிட்டு அந்த இடத்தைவிட்டே ஓடி விட்டாள் பாரதி.

ஆனால், பானுமதியின் மனம் ரகுவின்பின் சென்றிருந்தது. அவன் அந்தப் பெண்ணின் கையைப் பிடித்துகுலுக்கி விட்டுச் சிரித்துக் கொண்டு நின்ற காட்சி அவள் மனதை உறுத்தியது.

இரவு பூராவும் பானுமதியால் தூங்க முடியாதுபோய் விட்டது. எப்படியும் மறுநாள் ரகுராமனிடம் நேரிடையாகக் கேட்டு ஒரு முடிவுக்கு வந்துவிடவேண்டும் என்று தீர்மானித்திருந்தாள். அதிகாலையிலேயே எழுந்து குளித்து விட்டு, மலர்களைப்பறித்துக் கொண்டு சென்று அவற்றை மாலையாக்கி சுவாமிப் படத்துக்குப் போட்டு வணங்கிக் கொண்டு நின்றாள் பானுமதி.

''மிஸ் பானுமதி...'' என்ற குரல் அவள் மனதுள்கேட்பது போல் ஒலிக்கவே, ஆச்சரியப்பட்டவளாய் விழிகளைத் திறந்து பார்த்து விட்டு வெளியே ஓடிவந்தாள். அவள் விழிகளை அவளாலேயே நம்பமுடியவில்லை. அவள் வீட்டின் படிக்கட்டில் ரகுராமன் நின்றிருந்தான்.

''உள்ளே வாருங்கள் ரகு'' என்றாள் பானுமதி. அவள் மனதில் ஆனந்தம் பொங்கி வழிந்துகொண்டிருந்தது. காலையில் குளித்துவிட்டு நின்றதால், அவளுடைய செழுமையான முகம் பனியில் நனைந்து விரிந்து நிற்கும் ரோஜா இதழ்களை நினைவூட்டின. ரகுராமன் அவளைப் பார்க்காமல் எங்கேயோ பார்த்தபடி, ''என்னை மன்னித்துவிடுங்கள் மிஸ் பானு. நேற்று மாலை நான் செய்தது மன்னிக்க முடியாத தவறுதான். ஆனால், சில வேளைகளில், சில விடயங்களில் மனதுக்குப் பிடித்தமில்லாதவற்றைக்கூட பிடித்தமானது போலவும், மிக விரும்புவது போலவும் செய்ய

வேண்டி ஏற்பட்டுவிடுகின்றது. ஆனால் உங்களிடம் சொல் லாமல்போனது மன்னிக்க முடியாததுதான்'' என்றான்.

''ரகு! உள்ளே வாருங்கள். இன்று வெள்ளிக்கிழமை. என் வீட்டுப்படி ஏறிவிட்டுக் கீழே இறங்கித் திரும்பி விடாது உள்ளே வாருங்கள்'' என்றாள் பானுமதி.

அவளுடைய குரலில் காணப்பட்ட பரிவும், அன்பும் அவன் பிடிவாதத்தைத் தளர்த்தினாலும், உள்ளே செல்ல அஞ்சினான்.

''மிஸ் பானுமதி! உள்ளே வரும்படி நீங்கள் அழைக் கின்றீர்கள். நான் உள்ளே வருவதை நீங்கள் இப்பொழுது விரும்பலாம். ஆனால்' என் தாய் விரும்பமாட்டார்கள். என்னை இருதலைக்கொள்ளி எறும்பாக்கிவிட்டீர்களே!'' என் றான் சிரித்தபடி.

''அம்மா எதுவும் சொல்லமாட்டார்கள் ரகு. நீங்கள் உள்ளே வாருங்கள் ரகு. என்னை ஏமாற்றிவிடாதீர்கள்.''

''நான் யாரையும் ஏமாற்றமாட்டேன் மிஸ் பானு மதி. சிலர் தம்மைத் தாமே ஏமாற்றிவிட்டு, மற்றவர்கள் மீது பழியைப் போட்டுவிடுகின்றார்கள். நான் அப்படிப் பட்டவனில்லை.''

''ரகு! உங்களைக் கரங்கூப்பி வேண்டுகிறேன். என் அழைப்பைத் தட்டிவிடாதீர்கள்'' என்று கூறும்பொழுது அவள் விழியோரங்களில் நீர்த்திவலைகள் உதிர்ந்துகொண் டிருந்தன.

''வெரி சொறி மிஸ் பானு! நீங்கள் அழுவதை நிறுத்தாவிட்டால் நான் ஓடிப்போய்விடுவேன்.''

''நான் அழவில்லை. வாருங்கள்.''

''சரி'' என்று கூறி உள்ளே சென்றான் ரகுராமன். வீட் டின் உட்புறத்தைப் பார்த்துக்கொண்டே அவள் பின் சென்றவன், ''உங்களைப் போலவே இந்தச் சிறிய வீட்

டையும் அழகாகத்தான் வைத்துக்கொண்டிருக்கிறீர்கள்'' என்றான்.

''நீங்கள் நல்லாய்ப் புளுகுகின்றீர்கள்!''

''நானா? நான் புளுகனா?''

''ஆமாம்'' என்று கூறிவிட்டுச் சிரித்தவள், ''உங்களை விடவா நான் அழகு?'' என்றாள்.

''அப்படியானால் நீயும் புளுகிதான்'' என்று கூறிச் சிரித்தான் ரகுராமன்.

ரகுராமன் இப்படிக் கதைத்துக்கொண்டு நிற்கும் பொழுது, அவன் சற்றும் எதிர்பாராதவிதமாக, அவன் பாதங்களில் கைநிறைந்த மலர்களைப் போட்டு வணங்கிய படியே அவற்றைப் பற்றிக்கொண்டாள் பானுமதி.

''என்ன இது விளையாட்டு?'' என்றான் ரகுராமன் திகைத்தபடியே.

''விளையாட்டு இல்லை ரகு. என்னை நீங்கள் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்பதற்காகவே இப்படி...'' என்றாள்.

''பா'' என்று அழைத்தபடி அவள் தோள்களைப் பற்றித் தூக்கினான் ரகுராமன். அவள் விழிகளில் நீர் முத்துக்கள் அரும்பி நின்றன. அவற்றைத் துடைத்து விட்டுக் கொண்டே, ''நீ என்னை நம்புகிறாயா பானு?'' என்றான் ரகுராமன்.

''நம்பித்தானே என்னை ஒப்படைக்க முடிவு செய் தேன்'' என்றாள்.

''பானு'' என்றவன் மேலே எதுவும் பேசமுடியாது திணறினான்.

''ரகு! முதன் முறை நான் உங்களைச் சந்தித்தபோதே உங்கள் காலடியில் மலர்களைப் போட்டுவிட்டேன். என்னை நான் அறியாமல் அன்றே என்னை உங்களிடம் ஒப்படைத்து

விட்டேன். அன்று நீங்கள் கூறியது ஞாபகமிருக்கா?'' என்றாள்.

ஏதோ ஒரு சொப்பன புரியிலிருந்து அவள் கேட்பது போலிருந்தது அவனுக்கு. அவள் தோள்களைப் பற்றி யிருந்த கரங்களை எடுத்தவாறே, ஞாபகமில்லையே பானு'' என்றான்.

''ஆண்டவனுக்கு அர்ப்பணமாகவேண்டிய மலர்கள்... என்று கூறினீர்கள். இந்தப் பெண்ணே இன்று உங்களுக்கு அர்ப்பணமாகிவிட்டாள்'' என்றாள்.

''பானு! இந்த நிலையில்... மாற்றம்... எதுவும்'' என்று அவன் தயங்கித் தயங்கிக் கேட்டபொழுது, ''எது வுமே இனி இருக்காது அண்ணு'' என்று கூறிக்கொண்டே அங்கு வந்தாள் பாரதி. அவளைத் தொடர்ந்து அன்ன பூரணி அம்மாளும் வீட்டினுள் நுழைந்தாள். அவர்களைக் கண்டதும் ரகு திகைத்தவனாய் எழுந்து நின்றான்.

அன்னபூரணி அம்மாளைக் கண்டதும் ஓடோடியும் சென்று அவள் பாதங்களில் விழுந்து, ''அம்மா! என்னை மன்னித்துவிடுங்கள்'' என்றாள் பானுமதி.

''எதற்கடியம்மா உன்னை மன்னிக்கிறது? உன்னைப் பார்த்தபொழுது, உன்னோடு பழகியபொழுது, நீ என் மருமகளாக வந்தால்... என்று எண்ணியதுண்டு. என் ஆசையை ஆண்டவனாகப் பார்த்து நிறைவேற்ற நினைத்து விட்டான்'' என்று அவளை ஆசீர்வதித்து ஆறுதல் கூறினாள் அன்னபூரணி அம்மாள்.

பத்து மாதம் சுமந்து பெற்று, ஈ, எறும்பு கடித்தால் கூட தன் கண்ணில் வேல் பாய்ந்ததுபோல் துடித்துப் பதறி, அல்லும் பகலும் பாலூட்டிச் சீராட்டி வளர்த்த பிள்ளை, ஊருக்கு, உலகத்துக்குப் பொல்லாதவன் என்று கேட்டபொழுது பற்றி எரிந்த பெற்ற வயிறு, இப்

பொழுது ஆனந்த மேலீட்டினால் குளிர்ந்து நிறைந்துவிட்டது போலிருந்தது அன்னபூரணி அம்மாளுக்கு. தன் மகனைப் பார்த்து முறுவலித்தபடியே, ''ஏண்டா ரகு! உனக்கும் இவளைக் கட்டிக்கொள்வதில் சம்மதம்தானே?'' என்றாள்.

''அம்மா! உனக்கு விருப்பமென்றால் நான் தடை சொல்லப் போவதில்லை. ஆனால்...'' என்று கூறிவிட்டுத் தலையைக் குனிந்துகொண்டான். அவன் என்ன கூறப் போகிறான் என அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்தனர்.

''பானு! எல்லார் முன்னிலையிலும் நான் இதைக் கூற வேண்டியிருப்பதற்காக என்னை மன்னித்துவிடு. ஆனால் இதைக் கூறவும் வேண்டும். ஏனெனில் என்னை மேலும் நீங்கள் தவறாக எடை போடாதிருக்கவேண்டும்.''

''என்னடா! பெரிய அத்திவாரமாகப் போடுகின்றாய்?'' என்றாள் அன்னபூரணி.

''நான் பானுவையே கல்யாணம் செய்கிறேன். ஆனால் இன்னும் ஆறு மாதமோ, ஒரு வருடமோ பானு பொறுத்துக்கொள்ளவேண்டும்.''

''ஏன்டா ரகு...?''

''காரணம் இருப்பதால்தான் கூறுகின்றேன். பானு! நீ என்னை நம்பிய அளவுக்கு என் வார்த்தையையும் நம்புவாய் என நினைக்கின்றேன்'' என்றான்.

''உங்கள் விருப்பப்படியே செய்யுங்கள். எனக்கும் அவசரமில்லை'' என்றாள் பானுமதி.

''அம்மா! அவர்கள் விருப்பத்துக்குக் குறுக்கே நீங்கள் நிற்பது நல்லதல்ல. வாருங்கள் போவோம்'' என்று தாயை அழைத்தாள் பாரதி.

''என்னவோ பானு, உனக்கு விருப்பம் போலச் செய்து கொள்'' என்று கூறிவிட்டுப் புறப்பட ஆயத்தமானாள் அன்னபூரணி அம்மாள்.

''அம்மா!இன்று நல்ல வேளையில் இந்த முடிவுக்கு வந்திருக்கிறோம்.என் கையால் கோப்பி போட்டுக்கொண்டு வருகிறேன்'' என்றாள்.

''ஓ...அப்படியா? கொண்டுவா, கொண்டுவா'' என்று கூறினாள் அன்னபூரணி அம்மாள். அளவுக்கு மீறிய ஓர் உணர்வினால் அவள் உள்ளத்தில் வயதுக்கு மீறிய ஓர் உற்சாகம் கரைபுரண்டு ஓடிக்கொண்டிருந்தது.

ரகுவும் தாயுடன் வெளியே சென்றுவிட்டான். பானுவைச் சுற்றிவந்த ரகுராமனுடைய தம்பி சிவராமனும், தங்கை மாலதியும் ''அண்ணி, அண்ணி'' என்று உறவு முறை கொண்டாடி அவளைக் கேலி செய்து சலிப்படைய வைத்துவிட்டார்கள்.

## அத்தியாயம் இருபத்தியிரண்டு

அந்த வீட்டுக்குள் நுழைந்தபொழுது அப்படி ஒரு நிலை தனக்கு ஏற்படுமென்று அவள் நினைத்திருக்கவில்லை. ஆனால், ரகு தன் கணவனாக வந்தால்...... என்று அவள் அந்தராத்மா விரும்பியது. மனதில் தோன்றும் விருப்பங்கள் எதுவும் நிறைவேறிவிடுவதில்லை. ஆசை யாருக்குத்தான் இல்லை? ஆனால்,அந்த ஆசை, முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டது போல் முடிந்துவிடக்கூடாது. பானுமதியைப் பொறுத்தளவில் அவள் மனதில் விருப்பமென்று ஒன்றை விரைவில் தோற்ற விடுவதில்லை.ஆனால், விரும்பிவிட்டால் அதை அடையாமலும் விடமாட்டாள். அப்படித்தான் ரகுவையும் அவள் தன்னுடையவனாக்கிக் கொண்டாள்.

வாழ்வின் இனிய பகுதிகளை மட்டுமே எண்ணித் திருப்தி அடைபவர்கள் இருக்கின்றார்கள். ஆனால், பானு

அப்படிப்பட்டவள் அல்ல என்பதற்கு சாட்சியாகி அவள் விழிகள் நீரைச் சொரிய ஆரம்பித்தன.

தன்னம்பிக்கை எவனுக்கு இல்லையோ, அவனுக்குப் பிறரிடத்திலும் நம்பிக்கை இருப்பதில்லை. தன்னில், தன் திறமையில் நம்பிக்கை இருப்பவனுக்குப் பிறரிடத்திலும் நம்பிக்கையிருக்கும்.இது ஒரு நுட்பமான மனத் தத்துவம். இத் தத்துவத்தின் கோட்பாட்டைக் கடைப்பிடிப்பவன் ரகுராமன்.ஆனுல்,பானுமதி அப்படிப்பட்டவளில்லை. அவளிடம் நம்பிக்கை அடிக்கடி நசிந்துபோய்விடுகின்றது. அதற்குக் காரணம் அவள் பெண்ணுயிருப்பதுதானே?

சில வருடங்களுக்கு முன்னர், அவளுக்காக வாழ்ந்த ஒரு அண்ணன் இறந்தபோது அவள் மனதிலிருந்த நம்பிக்கைகளும் நாசமாகிவிட்டன. அன்றிலிருந்து அவள் எதையும் இலகுவில் நம்பிவிடுவதில்லை.அப்படி நம்பினுலும் அதில் அவளுக்கு என்னவோ சந்தேகங்கள் தோன்றிவிடும். அப்படித்தான் அப்பொழுதும் அவள் மனதில் தோன்றிய சில நம்பிக்கையீனங்கள் அவள் விழிகளில் கண்ணீரைப் பெருக வைத்துவிட்டன.

ரகுராமன் அவளுக்கே உரியவனுகிவிட்டான். அவனிடம் உரிமையோடு பேசுவதற்கு அவளுக்குத் துணிவு பிறந்துவிட்டது. தான் விரும்பாத ஒன்றை அவன் செய்தால் அதைத் தடுக்கவோ,கேட்கவோ,புத்தி கூறவோ இனி அவள் தயங்கப்போவதில்லை. அந்த நிம்மதியுடன் அவள் தன் கடமைகளில் ஈடுபட்டாள்.

அன்னபூரணி அம்மாளின் மனதில் அளவுக்கு மீறிய ஆனந்தம் பொங்கி வழிந்தது. பணம், பொருள் பற்றி அவள் கவலைப்படவில்லை. அழகும் அறிவும் அதற்கேற்ற குணமும் கொண்ட மருமகள் கிடைக்கப்போகிறுள் என்ற மனநிறைவில் அடுப்பில் பொங்கி வழியும் பாலைக்கூடக் கவனியாது இருந்துவிட்டாள்.

"அம்மா! பால் பொங்கி வழியுது. நீங்கள் என்ன நினைத்துக்கொண்டிருக்கிறீர்கள்?'' என்றாள் அங்கே வந்த பாரதி.

''பாரதி! நான் என்னடி நினைவிலிருக்கிறன். எல்லாம் அந்தப் பெண் பானுவைப் பற்றித்தான். ஏன் பாரதி, அவளை இனிமேல் இங்கேயே வந்து சாப்பிடச் சொன்னால் என்ன?'' என்றாள்.

''அம்மா, அதைத் தானம்மா நானும் உங்களிடம் சொல்லலாம் என்றிருந்தேன். அண்ணா சம்மதிப்பானோ?''

''அவனை என்னடி கேட்கிறது, நான் போய் அவளை இப்பவே கூட்டி வருகின்றேன்'' என்று கூறிவிட்டு எழுந்து சென்றாள்.

அன்னபூரணி அம்மாள் பானுமதியை அழைத்துக் கொண்டு வீட்டுக்குள் நுழைந்தபொழுது, தம்புராவின் சுருதியோடு பாரதியின் குரலும் சேர்ந்து ஓர் ஆரவாரத்துடன் ஒலித்துக்கொண்டிருந்தது. மைசூர் வாசுதேவாச்சாரியின் ''தேவாதி தேவா ஸ்ரீ வாசுதேவா'' என்ற கீர்த்தனையை அவள் பாடிக்கொண்டிருந்தாள்.

''வா பானு. பூசை அறையில் பாரதிதான் பாடிக் கொண்டிருக்கிறாள்'' என்று கூறி அவளைப் பூசை அறைப் பக்கமாக அழைத்துச் சென்றாள்.

பாரதி பாடிக்கொண்டிருப்பதை மெய்மறந்து ரசித்துக்கொண்டு நின்றாள் பானுமதி. பாடி முடிந்ததும், ''ஏன் பாரதி, இது என்ன ராகம்?'' என்றாள்.

''சுநாத விநோதினி'' என்றாள் பாரதி.

''அதுதானே கேட்டேன். வேறு ராகமாயிருந்தால் நான் கூறியிருப்பேன்.''

''உனக்கும் சங்கீதத்தில் ஈடுபாடு உண்டா?'' என்றாள் அன்னபூரணி.

''முன்பு படித்திருக்கிறேன். வாசிற்றிக்குப் போன பின்பு நிறுத்திவிட்டேன்'' என்றாள் பானுமதி.

''பானு! இன்று வெள்ளிக்கிழமை. நீயும் ஒரு பாட்டுப் பாடேன்'' என்றாள் பாரதி.

''நானா?''

''ஏன் பானு! நீ படித்திருக்கிறாய். சங்கீதம் மறந்து போய்விட்டது என்று கூறவும் முடியாது. வா பானு.''

''பாரதி எனக்கு...''

''பரவாயில்லை பானு. அடிக்கடி திருப்பாவை, தேவாரம் பாடுவாயே. அதில் ஒன்றைப் பாடேன்'' என்று வற்புறுத்தினாள் பாரதி.

''அதற்கென்னம்மா, உனக்குத் தெரிந்தவற்றில் ஒன்றைப் பாடேன். நாமும் கேட்போம்'' என்றாள் அன்னபூரணி.

பானு அரை மனதுடன் பூசை அறையில் அமர்ந்தாள். அவளுக்கு அருகில் அன்னபூரணியும் உட்கார்ந்தாள். தம்புராவின் நாத ஒலி அந்தப் பூசை அறையில் ஒருவித அமைதியையும், அதே வேளையில் ஊதுவர்த்தியின் நறுமணம் ஒருவித புத்துணர்வையும் அவள் உள்ளத்தில் தோற்றுவித்தது. பக்தி மணம் கமழும் அந்த அறையில் தன்னை மறந்த நிலையில் பானு இருந்தபோது, பல்கலைக்கழகத்தில் படித்த நாச்சியார் திருமொழியில், ஆண்டாள் கண்ணன்மீது பாடிய பாடல்கள் ஒன்றன்பின் ஒன்றாக அவள் நினைவில் உதித்தன. ஒன்று, இரண்டு என்று தன்னையே மறந்து பாடிக்கொண்டிருந்தாள். அவளுடைய தேனினுமினிய குரல் கேட்டு ரகுராமன் அங்கு வந்துவிட்டான். அவன் அங்கே வந்ததை அறியாத பானுமதி, ''மத்தளம் கொட்ட வரிசங்கும் நின்றூத...'' என்ற பாடலைப் பாடிக்கொண்டிருந்தாள். அந்தப் பாடலைக் கேட்டு ரசித்துக்கொண்டு நின்ற ரகுராமன், ''கைத்தலம் பற்றக் கனாக் கண்டேன் தோழி நான்'' என்று அவள் பாடி முடித்தபோது, தன்னை மறந்தவனாக ''பானு'' என்றான்.

ஆயர்பாடிக் கண்ணனே வந்து அவளை அழைத்தது போன்றிருந்தது அந்தக் குரல். அவள் தன்னுணர்வடைந்து துள்ளி எழுந்து நாணத்தால் முகம் சிவக்க நிலம் நோக்கி நின்றாள்.

"அம்மா! ஆண்டாளே எங்கள் வீட்டுப் பூசை அறைக்குள் வந்துவிட்டாளோ என்று பார்க்கத்தான் ஓடிவந்தேன். ஆனால்..." என்று கூறி அவன் சிரித்தான்.

"ஏன்டா ரகு! பாடிக்கொண்டிருந்த பெண்ணைக் கூப்பிட்டுப் பரிகாசம் செய்கின்றாயா?" என்று கேட்டாள் அன்னபூரணி.

"பானுவுக்கும் பாடவருமா என்றுதான்..."

"அட தடிராமா! இப்படித்தான் அவளையும் கேலி செய்து படிக்காமல் செய்தாய். இன்று இந்தப் பெண்ணையும்..." என்று அன்னபூரணி அம்மாள் ஏசியபொழுது ரகு எதுவும் பேசாமல் திரும்பிவிட்டான்.

"இந்த அறைப் பக்கமே அவன் வருவதில்லை. இன்று வேணும் என்று வந்திருக்கிறான். இவனுடைய குழந்தைப் பிள்ளை விளையாட்டு இன்னும்தான் தீர்ந்தபாடில்லை" என்று முணுமுணுத்தவாறே விபூதியை எடுத்து நெற்றியில் தடவிக்கொண்டு சமையலறைப் பக்கம் சென்றாள் அன்னபூரணி அம்மாள்.

"ஏன் பானு, உன்னுடைய பாட்டைக் கேட்டு அண்ணாவே ஓடிவந்திட்டான் பார்த்தியா?" என்றாள் பாரதி.

"பாரதி, அவர் அம்மா ஏசியதால் கோபித்திருப்பாரோ?"

"அண்ணனா? அவனுக்குக் கோபமே வராது. அப்படி வந்தால் அது... ஆனால், உன்னிடம் கோபிக்கமாட்டான்."

"கேலி செய்கிறாயா பாரதி?"

"பானு! அவன் அறையில்தானிருப்பான். போய்ப் பாரேன்."

''நான் தனியே போகமாட்டேன்.''

''நானும் வரவா?''

''வாவேன் பாரதி.''

''பானு!ஏனடி இவ்வளவு பயந்தாங்கொள்ளியா நீ? போ பானு'' என்று கூறிவிட்டு அவளும் சென்றுவிட்டாள்.

ரகுராமனுடைய அறையை பானுமதி நெருங்கிவிட்டாளாயினும் உள்ளே போகும் துணிவு அவளுக்கு இருக்கவில்லை.வாசலில் நின்று எட்டிப் பார்த்தாள். ரகுராமன் அலுமாரியில் எதையோ தேடிக்கொண்டிருந்ததால் அவன் பானுவைப் பார்க்கவில்லை. 'ஹ்கும்' என்று தொண்டையைக் கனைத்தாள் பானுமதி.திரும்பிப் பார்த்த ரகுராமன் சிரித்துக்கொண்டே ''கச்சேரி முடிந்ததா?'' என்றான்.

''கோபமா ரகு?''

''எனக்கென்ன கோபம்? நான் சும்மாதான் கேட்டேன்,உள்ளே வரப் பயமா? ஓ...ஐ ஆம் சொறி பானு. நீ இதுவரை இங்கே வந்ததில்லையல்லவா?இனியும் நீ விரும்பினால் வரலாம். விரும்பாவிட்டால் விடலாம். உன்னை வற்புறுத்தமாட்டேன்'' என்று கூறிவிட்டு அலுமாரியிலிருந்து ஒரு சிறிய அட்டைப் பெட்டியை எடுத்து மேசைமீது வைத்தான்.

''நீங்கள் மிகவும் அழகாக ஆனால்,தந்திரமாகப் பேசுகின்றீர்கள். நீங்கள் ஏதாவது சொல்வீர்களோ என்று பயந்துதான் வெளியே நின்றேன். வேறு ஒன்றும் இல்லை'' என்று கூறிக்கொண்டே அறைக்குள் வந்தவள், அந்த அறையிலிருந்தவற்றையெல்லாம் பார்த்துப் பிரமித்து நின்றாள்.

''என்ன பானு!அப்படியே நின்றுவிட்டாய்?''

''இவ்வளவு புத்தகங்களும் உங்களுடையவைதானா?'' என்று புத்தகங்கள் அடுக்கிவைத்த அலுமாரியைச் சுட்டிக் காட்டினாள்.

''இவ்வளவும் கடைக்காரனுடையது.பணம் கொடுத்து வாங்கி வைத்திருக்கிறேன்'' என்றான்.

''உங்கள் அம்மா சொன்னதுபோல் நீங்கள் ஒரு விளையாட்டுப்பிள்ளைமாதிரித்தான் பேசுகிறீர்கள்'' என்றாள்.

''அப்படியானால் இனிமேல் தாத்தாமாதிரிப் பேசவா'' என்றான்.

அவனுடைய வேடிக்கையான பேச்சையே நாள் முழுவதும் கேட்கலாம் போலிருந்தது பானுவுக்கு. ''இந்தக்கதவு பூட்டியிருக்கே'' என்று புத்தக அலுமாரியின் கதவை இழுத்துவிட்டுக் கூறினாள்.

''கண்ணாடிக் கதவு போட்டிருக்கே. ஏன் தெரியுமா?''

''எனக்கென்ன தெரியும்.''

''சும்மா பார்ப்பவர்கள் தொடாமல் பார்ப்பதற்காக. நீ படிக்கப் போறியா பானு?''

''இந்த அறையிலேயே இருந்துவிடலாம் போலிருக்கு. ஏன் ரகு,மர்ம நாவல்கள்கூடப் படிக்கின்றீர்களா?''

''ஆமாம்.ஆனால்,சிலருடைய புத்தகங்கள்தான் எனக்குப் பிடிக்கும்'' என்று கூறிவிட்டு சாவியை எடுத்து அவளிடம் நீட்டினான்.

''இது ஏன்?''

''நீ விரும்பியபோது வந்து, விரும்பிய புத்தகத்தை எடுத்துக்கொள்'' என்றான்.

''இது என்ன ரகு?'' என்று மேசைமீது அவன் வைத்த அட்டைப் பெட்டியைக் காட்டினாள்.

''இதுவா?இது ஒரு 'றிஸ்ட்வாட்ச்'. பார்த்தியா எவ்வளவு அழகாயிருக்கு?'' என்று பெட்டியைத் திறந்து வெளியே எடுத்துக் காட்டினான். அதைப் பார்த்ததும் பானுவே வியப்படைந்தாள்.

''இதன் விலை நிறைய இருக்குமே ரகு?''

''விலையா? ஆமாம். இதை ஒரு ஆளுக்குப் பரிசளிக்கப் போகிறேன்.''

பானுவின் மனதில் அவன் அதைத் தனக்கே தரப் போகிறான் என்ற நினைவே எழுந்து நின்றது. ஆனால், ரகு அதை மறந்து வேறு என்னவோ எல்லாம் கூறினான். பானுவின் கையிலிருந்த அந்தக் கைக்கடிகாரத்தை வாங்கிப் பெட்டியில் வைத்து மூடி தன் சட்டைப் பாக்கெட்டில் வைத்துக்கொண்டு, ''ஏன் பானு, இன்று ஸ்கூல் இல்லையா?'' என்றான்.

''இல்லையே.''

''நல்லது. நான் வெளியே போகவேண்டியிருக்கிறது. மாலை நாலு மணிக்கு முன்பே வந்துவிடுகின்றேன். இன்று நிச்சயமாக நாம் சினிமாவுக்குப் போகலாம்'' என்று கூறி விட்டுப் புறப்பட்டான்.

''பஸ்ஸிலா போகின்றீர்கள்?'' என்று கேட்டாள் பானு.

''ஆமாம்'' என்றவன் பின்பு, ''பானு, நான் பஸ்ஸில் போவதாகவா கூறினேன். இன்று ஆபீசுக்குப் போக வில்லை. மிஸ் ரோஸி வருவதாகக் கூறியிருக்கின்றாள். அவள் கார் கொண்டுவருவாள்'' என்று கூறிக்கொண்டே சென்றான் ரகுராமன்.

ஆத்திரமும் ஏமாற்றமும் நிறைந்த மனத்துடன் அவன் செல்வதையே வெறிக்கப் பார்த்துக்கொண்டு நின்றாள் பானுமதி.

## அத்தியாயம் இருபத்திமூன்று

ஒரு மனிதன் தன் இலட்சியத்தை அடைகின்றான் என்பதைக் கொண்டல்லாமல், அதை அடைய அவன் எவ்வாறு பாடுபடுகின்றான் என்பதைக் கொண்டே அவனை மதிப்பிடவேண்டும். ரகுராமனின் நிலையை வைத்துக் கொண்டு பானுமதி பலவாறு சிந்தித்தாள். அவன் தன் காதலை வெளிப்படுத்துவதற்குப் பரிசுகளும் அன்பு வார்த்தைகளும் அள்ளி அள்ளிச் சொரிவான் என எதிர்பார்த்தாள். ஆனால், அவனோ அவள் காதலையடைய வெறுப்புணர்வுகளையும், அவள் விரும்பாத செயல்களையும், அலட்சிய மனப்பான்மையையுமே காணிக்கையாக்கி வைத்திருந்தான். பானுவின் உள்ளத்தில் எழுந்த சோகமும் ஏமாற்றமும் ஒரே ஒரு நிமிடத்தில் அவிந்துபோய்விட்டன. அதற்குக் காரணம் அந்த அறையில் தொங்கிக்கொண்டிருந்த ரகுராமனுடைய நிழற்படம்தான்.

புன்னகை மலர்ந்த முகத்தோடு, அவன் அவளையே பார்த்துக்கொண்டிருப்பதுபோன்ற ஓர் உணர்வு ஏற்பட்டது பானுமதிக்கு. அவனுடைய அந்தச் சிரிப்பில் கள்ளம் கபடு எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. எதையும் ஒளிவு மறைவின்றி நேருக்குநேரே செய்கின்றான், பேசுகின்றான். 'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' என்பார்களே, அதுபோல அவன் முகத்தில் தெரிந்த கபடமற்ற தன்மையைப் பார்த்ததும், அவள் மனதில் தோன்றிய நிலையற்ற உணர்வுகள் மறைந்துவிட்டன.

''பானு, உன் கர்வம், நான் என்னும் அகந்தை, ஆண்களை அலட்சியம் செய்யும் நெஞ்சழுத்தம் இத்தனையும் ரகுராமனிடம் தோற்றுவிட்டனவே! அவனிடம் நீ கோபப்படுவது அறிவீனம். அவன் உன்னை விரும்பலாம். அதற்காக அவன் தன் கொள்கைகளை உதறிவிட முடியுமா?'' என்று அவள் அந்தராத்மா அவளைக் கேட்டபொழுது, பானு சிரித்துவிட்டாள். அதே வேளையில் 'மன உறுதியற்ற கோபமும், ஆதரவாளர்களற்ற அறிஞனும், நம்பிக்கையற்ற காதலும் மனைவியை இழந்தவனுக்குச் சமம்' என்று ஓர் ரஷ்ய கவிஞன் கூறியது அவளுக்கு நினைவு வந்தது.

''ரகு! நான் உங்களிடம் அளவுக்கு மிஞ்சிய வேகத்துடன் அன்பு செலுத்துகிறேன். ஆகவேதான் என் அன்பை அலட்சியம் செய்துவிடுவீர்களோ என்று அஞ்சுகிறேன்'' என்று அவன் படத்தைப் பார்த்துக் கூறியவாறே அறையைவிட்டு வெளியேறினாள்.

அன்று மாலை மூன்று மணியளவில் ரகு திரும்பிவிட்டான். அவனுடைய அறையிலேயே ஒரு புத்தகத்தைப் படித்துக்கொண்டிருந்த பானு, அவனைக் கண்டதும் எழுந்து நின்றாள்.

''பானு! நீ இங்கேயே தங்கிவிட்டாய் போலிருக்கே?'' என்றான்.

''ஏன் தங்கக்கூடாதா?''

''யார் அப்படிக் கூறியது? ஆனால்...''

''சொல்லுங்கள் ரகு.''

''என்னைப் பொறுத்தளவில் நான் எதையுமே நிறைய எதிர்பார்ப்பவன். ஆனால், நான் எதிர்பார்ப்பதில் கொஞ்சம் கிடைத்தால்கூட திருப்தியடைந்துகொள்வேன். சிலர் கொஞ்சம் எதிர்பார்த்து நிறையக் கிடைத்தாலும் திருப்தி

யடையமாட்டார்கள். இது என் வாக்கியமானாலும் இதன் கருத்து மேலைநாட்டறிஞன் ஒருவனுடையது'' என்றான்.

''எதற்காக இதைக் கூறுகின்றீர்கள்?''

''பானு! நான் ஏன் இப்படிக் கூறுகிறேன் என்றால்...''

''ஏன் நிறுத்திவிட்டீர்கள்; சொல்லுங்கள்?''

''நீ தவறாக நினைக்கமாட்டாயே?''

''இல்லை ரகு! நீங்கள் எதையும் 'ஓப்பினா'கக் கூறுவது எனக்கு மகிழ்ச்சியைத்தான் தருமேயன்றிக் கோபம் வராது.''

''றியலி.''

''ஸ்சுயர்...தயங்காது கூறுங்கள்'' என்றாள்.

''பானு! இப்படி இரேன். ஏன் நின்றுகொண்டு......? எனக்கு இந்தப் போலி மரியாதையெல்லாம் பிடிக்காது'' என்று அவளை இருக்கும்படி கூறிவிட்டு, தானும் ஒரு கதிரையில் அமர்ந்தான். அவனையே விழுங்கிவிடுவதைப்போலப் பார்த்துக்கொண்டிருந்தாள் பானு.

''பானு! உண்மையை நான் கூறுகின்றேன். நீ என்னை விரும்புவாய் என்று நான் எதிர்பார்த்தவன் இல்லை. என்னை நீ விரும்பும்படி நான் நடந்துகொண்டதுமில்லை. ஆனால், நீ ஏனோ என்னை விரும்பினாய்...நிறைய எதிர்பார்த்துக் கொஞ்சம் கிடைத்தாலும் திருப்தியடையும் என் மனதுக்கு எதிர்பாராமலேயே உன் அன்புப்புதையல் கிடைத்தபோது என்னால்...? பானு! நீ இதேமாதிரி நானும் உன்னிடம் அன்பு காட்டவேண்டும் என்று எதிர்பார்ப்பாய். என்னால் திடீரென அன்பு வைக்கவோ, திடீரென வெறுக்கவோ அடிக்கடி மனதில் நிலையற்ற நினைவுகளைப் பரப்பி வேதனைப்படவோ முடியாது. அப்படியான பழக்கமும் என்னிடம் கிடையாது. நான் உன்னை ஏற்றுக்கொண்ட பின்புகூட நீ என்னை விரும்புகின்றாய் என்று உணர்ந்துகொண்ட பின்புகூட நடந்துகொள்ளும் சில முறைகள்

உனக்கு மனவேதனையைத் தரும். வெறுப்பையும், ஏன் ஏமாற்றத்தையுமே தரலாம், இல்லையா பானு?'' என்று அவன் இடையில் கேட்டபொழுது பானு அதிர்ந்துவிட்டாள். தன் மனதிலுள்ளதை அப்படியே பிரதிபலிப்பது போல் அவன் கூறும் ஒவ்வொரு வாக்கியமும் அவள் உடலைப் புல்லரிக்கச் செய்தன. அவளால் எதுவுமே கூறமுடியவில்லை.

''என்ன பானு? பேசாமடந்தையாகி விட்டாயா? உன் மனக் கருத்தை நான் வெளிப்படையாகக் கூறுகிறேன் என்று அதிசயப்படுகின்றாயா?'' என்று அவளுடைய கரத்தைப் பற்றினான்.

''ரகு! ரகு! என்னை மன்னித்துவிடுங்கள் ரகு! நீங்கள் மனோதத்துவ டாக்டர் கூறுவதுபோலக் கூறுகின்றீர்களே. எனக்கு எப்படிப் பதில் கூறுவதென்றே தெரியவில்லை'' என்று கூறிவிட்டு, அவன் கரத்தைப் பற்றி தன் இரு கரங்களுக்கிடையிலும் வைத்துக்கொண்டாள் பானு.

''பானு! நீ எதிர்பார்ப்பதுபோல் என்னால் சில வேளைகளில் நடந்துகொள்ளமுடியாது போய்விடலாம். அதற்காக என்மீது உனக்கு ஆத்திரமும் வரலாம். ஆனால் நான் அப்படி உன்னிடம் நடந்துகொள்ளமாட்டேன்.''

''ரகு! நான் உங்களைத் தவறாகப் புரிந்துகொண்டேன். நான் ஒரு அறிவிலி'' என்றாள்.

''உன்னை நான் புரிந்துகொண்ட அளவுக்கு என்னை நீ புரிந்துகொண்டால் என்னைப்பற்றி எப்பவும் எந்தத் தவறான முடிவுக்கும் நீ வரமுடியாது. ஆனால், நீ ஒரு பெண்... அதுவும் சாதாரணப் பெண். உன்னிடம் பரந்த மனப்பான்மையையோ, உயர்ந்த எண்ணங்களையோ எதிர்பார்த்தால்...''

''ஏன் நிறுத்திவிட்டீர்கள்? சொல்லுங்கள்.''

''நீ கோபிக்காதிருந்தால் கூறுகின்றேன்.''

"நான் கோபிக்கமாட்டேன்."

"சில சமயம் நான் ஏமாந்துபோகலாம்."

"ரகு!" என்று துள்ளி எழுந்தாள் பானுமதி. அவளுடைய முகத்தில் பரவி நின்ற உணர்ச்சிக் கலவைகள் எத்தகையவை என்று அவனால் உணர்ந்துகொள்ள முடிந்தாலும், அவளிடம் அதைக் கூறமுடியவில்லை. சிரித்துக்கொண்டே அவளுடைய கரங்களைப் பற்றிக்கொண்டான். அவள் விழிகளில் நீர் முத்துக்கள் போர்வையிட்டு உருண்டோடின. காதளவோடிய அந்த அழகு விழிகளில் கலவர உணர்வும், பீதியும் தேங்கி நின்றதை உணர்ந்தான் ரகு.

"கோபமா பானு?" என்றான் கனிவோடு.

"நீங்கள் என்னை நம்பவில்லையா ரகு?" என்று உறுதியற்ற, துவண்ட குரலில் கேட்டாள்.

"பைத்தியக்காரி. உன்னை நம்புவதால், உன்னிடம் என் உள்ளத்தைத் தந்துவிட்டதால்தான் அவ்வளவு உரிமையோடும், உறுதியோடும் கூறினேன். ஏனெனில் நீ அடிக்கடி உன் மனதில் வேதனைகளைத் தோற்றுவித்து உன்னையும் வருத்தி, உன்மீது அன்பு வைத்த என்னையும் வருத்தக்கூடாது என்பதற்காகத்தான்" என்று கூறிவிட்டு அவளுடைய அழகு விழிகளில் துளிர்த்து நின்ற நீர் முத்துக்களைத் துடைத்துவிட்டான்.

"ரகு" என்று அவன் மார்பில் சாய்ந்தாள் பானு.

"பானு! உன் நிலையைப் பார்த்தால் எனக்குச் சிரிப்புத்தான் வருகின்றது. நீ இவ்வளவு பெரிய பருவக் குமரியாக வளர்ந்துவிட்டபோதும் குழந்தை மாதிரி இப்படி...." என்று கூறி அவளை நிமிர்த்தினான்.

"ரகு, நீங்கள் பொல்லாதவர்" என்று சிணுங்கினாள் பானுமதி. அவள் அவன் மார்பில் சாய்ந்தபொழுதுகூட எதுவித சலனமுமின்றி அவளை அணைத்துக்கொள்ளாமல்

தூக்கி நிறுத்தியதை அவள் உணர்ந்து அப்படிக் கூறினுள் என்பதை ரகுராமன் உணராமலில்லை.

"நான் பொல்லாதவனில்லை என்று கூறினுல் நீ நம்பப் போகின்முயா?"

"ரகு! நான் உங்களுக்குரியவள் என்முன பின்பும் நீங்கள் வேண்டுமென்றே என்னைப் பரீட்சிக்கின்றீர்கள்."

"இல்லைப் பானு, இல்லை. நீ நினைப்பது தவறு பானு" என்று கூறிவிட்டு, அவளுடைய அழகிய முகத்தை தன் இரு கைகளிலும் ஏந்தி, நீலமணிப் பரல்களென ஒலிக்கும் அந்த அழகு விழிகளை நோக்கினுன். அந்த விழிகளினூடே அவள் இதயத்தில் தேக்கிவைத்திருக்கும் இன்ப நினைவுகளையெல்லாம் ஆராய்பவன்போன்று பார்த்தான். அழகிலே ஓர் அழகுக் கவர்ச்சி காட்டும் அவள் கன்னக் கதுப்புக்களில் அவன் விரல் பட்டுவிட்டதாலோ என்னவோ, அவள் பொன் மேனி எங்கும் மின் அதிர்ச்சிக்கு உள்ளானது போன்ற ஓர் உணர்வுக்கு உள்ளாளுள். அந்த உணர்வின் துடிப்பில் அவள் இதயம் வேகமாகத் துடிக்கும் ஒலி அவளுக்குக் கேட்டது. அந்த இதயத் துடிப்பினுல் தன் மனதில் கட்டிவைத்திருக்கும் இன்பக் கோட்டைகளின் கபாடங்கள் திறந்துவிடுமோ என அஞ்சி நடுங்கினுள். அவளுடைய அழகு விழிகள் தாமாகவே இன்ப சுகானந்தக் கிறக்கத்தில் ஆழ்ந்துகொண்டிருந்த வேளையில், 'பானு' என்முன்.

"ம்" என்முளே தவிர வார்த்தைகள் வெளிவரவில்லை.

உணர்வுகளின் விழிப்பில் மொழியின் ஒலி வடிவம் வக்கிரமடைந்து விடுகின்றதோ என்னவோ? யார் அறிவார் இந்த மாயாவிஞேத லீலைகளை? "கண்ணெடு கண்ணினை நோக்கின் வாய்ச் சொற்களால் பயனில்லை" என வள்ளுவன் கூறியதன் உண்மை இதுதானே?

"ஏன் பானு பேசமாட்டாயா?"

''ஹ்கும்'' என்று கூறினாளே தவிர, அவளால் எதுவும் பேசமுடியவில்லை.

புதிதாக உருவாக்கப் பட்ட ஒரு வீணை வாத்தியம் போன்று அவள் காட்சியளித்தாளாயினும், அவள் உடம்பின் உள்ளே மறைந்துநிற்கும் நரம்புகளினூடே பெண்மையின் உணர்வு அலைகள் குமுறிப் புரண்டன. அதற்கு உடனடிக் காரணம் அப்படியொரு நிலை அவளுக்கு அதற்கு முன் ஏற்படாததுதான். தூசி படிந்துகிடந்த வீணை வாத்தியத்தை தூசி தட்டி, நரம்புகளைச் சுண்டி சுருதி சேர்த்து மீட்டுவதற்கு ஆயத்தமாக வைத்திருப்பது போன்ற ஒரு நிலையில் அவன் மீது துவண்டு சாய்ந்தாள் பானுமதி. அவளை மார்போடு அள்ளி அணைத்தவாறே எதுவிதமான சலனமுமின்றிப் புன்னகை மலர நின்றிருந்தான் அந்தப் பூவிழியின் கண்ணனை ரகுராமன்.

''பானு! ஏய் பானு! என்ன இது திடீரென்று!'' என அழைத்தவாறு அவள் கன்னத்தில் செல்லமாகத் தட்டினான் ரகுராமன்.

''ரகு'' என்று துடித்து எழுந்தவள் நாணத்தினால் மேனி நடுங்க நிலம் நோக்கி நின்றாள்.

## அத்தியாயம் இருபத்து நான்கு

படுக்கையில் புரண்டுகொண்டிருந்தான் ரகுராமன். அவன் மனம் அந்த ஒரு நாளிலேயே அவளிடம் ஒன்றாகக் கலந்துவிட்டது. 'பானு அழகான பெண் மட்டுமல்ல, அவளுடைய அபூர்வமான உணர்வுகளும் அழகுள்ளவைதான். தொட்டால் துவண்டுவிடும் கொடி

போன்ற மென்மை. செழுமையான உடல், கடித்துத் தின்னவேண்டும் போல் தோன்றும் பல்வரிசை. தேன்பசை ஏறிய முள் முருக்கம் பூவிதழ் போன்ற அழகு இதழ்களில் புன்னகை மலர, அவள் பார்க்கும் அந்தப் பார்வையும்... ரகுராமனின் உடலின் ஒவ்வொரு அணுவிலும் அவள் நிறைந்திருந்தாள். கற்பனையில் அனுபவிக்கும் இன்பம் மனம்போனபடி போகும் காட்டாற்று வெள்ளம் போன்றது தானே... அவன் சிந்தனைகளும் காட்டாற்று வெள்ளம் போன்று அணையின்றிப் புரண்டுகொண்டிருந்தன.

அந்த வேளையில் தான் தொலைபேசி மணி ஒலித்தது. அதுபற்றி எது வித சிந்தனையுமின்றிக் கிடந்தான் ரகு. "அண்ணு! போன் உங்களுக்குத்தான்" என்று பாரதி அழைத்த போதுதான் எழுந்து ஓடிவந்தான்.

"ஹலோ! ரகு ஸ்பீக்கிங்'? என்றவன் பின்பு எதுவுமே கூறுமல் "ஜேஸ், ஜேஸ்" என்று கூறிக்கொண்டே வந்தவன், சந்தோஷமான செய்திதான். எட்லின் தானே? அவள் எனக்காக எதுவும் செய்வாள்" என்று கூறிப் போனை வைத்துவிட்டுத் திரும்பினுன். அவனையே பார்த்த படி நின்றிருந்தாள் அன்னபூரணி அம்மாள்.

"அம்மா! நீங்களின்னும் தூங்கவில்லையா?" என்ருன் ரகு.

"நான் தூங்குவன்; விடுவன். ஆனுல் நீ இனியாவது அந்தக் கழுதைகளோடு மேயிறதைக் கைவிடடா ரகு. அந்தப் பெண்ணைப் பாரடா! மகாலட்சுமி மாதிரி இருக்கிருள். அவளைப் பார்த்த கண்ணுலை வேறு பெண்ணைப் பார்க்க மனம்தான் வருமாடா ரகு! அது யாருடா பேசினது" என்ருள்.

"அம்மா! வந்து... ஒரு..."

"சொல்லடா. எந்தத் தேவடியாள் உன்னை இந்த நேரத்திலை..."

''அம்மா! அது பெண்ணில்லையம்மா. வேணுமானுல் அவளையே கேளுங்கள்'' என்று பாரதியை சாட்சிக்கு அழைத்தான்.

அந்த விவகாரம் அத்துடன் முடிந்துவிடவில்லை. பானு வைப்பற்றி அன்னபூரணி அம்மாள் கதைகதையாகக் கூறி ஞள். அது மட்டுமல்ல, பாரதியின் கணவன் அடுத்த வாரம் வந்ததும் உடனேயே திருமணத்தை முடித்துவிட வேண்டும் என்றும் கூறிஞள்.

அதே வேளையில் பானுமதி கனவுலகில் மிதந்துகொண் டிருந்தாள். கனவு என்றல் தூக்கத்தில் காணும் கனவல்ல. தூக்கத்துக்கும்—தூக்கமின்மைக்கும், விழிப்புக்கும்—விழிப் பின்மைக்கும் இடையே ஏற்படும் ஒரு விதமான நிலை. அன்றுமாலையில் ரகுராமன்கொடுத்தஅழகிய சங்கிலி அவள் கழுத்தைத் தழுவியிருந்தது. அவனே அவள் கழுத்தை வளைத் துப்பிடித்துக்கொண்டிருப்பது போன்ற ஓர்சுகானந்த கிறக் கத்தில் ஆழ்ந்திருந்தாள். அந்தச் சங்கிலியில் கோர்த் திருந்த கண்ணன்படம் பொறித்த பதக்கம் அவள் நெஞ் சோடு நெஞ்சாய் இதயத்தைத் தொட்டுக்கொண்டிருந்தது. இதை விட அவள் கனவு மயக்கத்திற்குக் காரணம் எதுவும் தேவையில்லையல்லவா?

அந்த வாரம் எப்படி நகர்ந்தது என்பதே பானுவுக்கு நினைவில்லை. அவள் எண்ணம் முழுவதும் ரகுவிடமே தஞ்ச மடைந்துவிட்டது. அவனுடைய உணர்வுகளோடு அவள் ஒன்றிப்போய்விட்டாள்.

பாரதியின் கணவன் மகேசன் இங்கிலாந்திலிருந்து திரும்பிய ஒரு கிழமைக்குள் திருமணமும் வெகு விமரிசை யாக நடந்தேறியது. அவர்கள் திருமணத்திற்கு அதி கம் நண்பர்களை அழைக்கவில்லையாயினும், உறவினர்கள் பலர் வந்திருந்தனர். அந்தச் சந்தடியில் ரகுராமனுக்கு வேலையும் ஒய்வின்றியிருந்துகொண்டிருந்தது. பானுவோடு தனித்திருப்பதற்கு அவனுக்கு நேரம் கிடைக்கவில்லை. திரு

மணம் முடிந்து நான்கு நாளான போதும் சந்தடி குறைய வில்லை.

அன்று மாலையில் பாரதியின் கணவன் மகேசனோடு வெளிநாட்டு விடயங்களைப் பற்றிக் கதைத்துக்கொண்டிருந்தான் ரகுராமன். அதே வேளையில், தம்பி சிவராமன் ஓடி வந்து, ''யாரோ உங்களைப் போனில் அழைக்கின்றார்கள்'' என்றான். யாராயிருக்கலாம் என்று சிந்தித்தவண்ணமே தொலைபேசியிருக்கும் இடத்துக்குச் சென்றான் ரகுராமன்.

அவன் போவதைப் பார்த்துக்கொண்டு நின்ற பானு அவனுக்குப் பின்னே சென்றாள். மகேசன் வந்த நாள் முதலாய் இதுவரைக்கும் பானுவால் ரகுவுடன் நெருங்கிப் பழக முடியாது போய்விட்டது. அவனோடு மகிழ்ச்சியாகக் கழிந்த ஒவ்வொரு நிமிடத்தையும் நினைவு கூர்ந்தே அவள் இன்பமடைந்தாள். அவன் கூட்டத்தைவிட்டு தனித்துச் செல்வதைப்பார்த்தே அங்கு வந்தாள். ஆனால் அவன் தொலைபேசியில் யாருடனோ உற்சாகமாக உரையாடுவது கேட்டது.

''ஏன் ரோஸி! எட்லின் ஏதாவது கூறினாளா?''

''.........' வெளியே எதுவும் கேட்கவில்லை.

''நீ வராவிட்டால் என்ன? பரவாயில்லை ரோஸி. அப்துல்லா ஒரு இடமும் போக அனுமதிப்பதில்லையென்று எட்லினே கூறினாள்'' என்றான்.

''.........''

''அப்படி ஒன்றுமில்லையா? நல்லது.''

''.........''

''என் கல்யாணமா? நடக்கும்போது நீயில்லாமலா? எட்லின் உன் ஆள்தானே ரோஸி?''

''.........''

''உண்மையாகத்தான். நான் எட்லினை விரும்புகின்றேன். அவளைத் திருமணம் செய்வதால் வீட்டை விட்டே வெளியேற நேர்ந்தாலும் பரவாயில்லை.''

''.........''

''உண்மைதான், எட்லினே அதிசயப்படுவாள்.''

''.........''

''சரி ரோஸி, போனை வைக்கிறேன்'' என்று கூறிப் போனை வைத்துவிட்டுத் திரும்பியபோது, அவன் மனதில் உற்சாகம் கரைபுரண்டோடியது. அவன் முகத்தில் எதையோ வென்றுவிட்ட பெருமிதம் காணப்பட்டது. ஆனால், அவனுக்குப் பின்னால் நின்று அவன் கூறிய விடயங்களனைத்தையும் பானு கேட்டுக்கொண்டு நின்றதைப்பற்றித் தெரியாதவனாக, மனதில் பல்வேறு கற்பனைகளுடன் சென்றான் ரகு.

நாம் ஒன்றை நினைக்கத் தெய்வம் ஒன்றைச் செய்துவிடுவதாக மனித இனம் கடவுளின் மேல் போடும் ஒருபழி இப்படிப்பட்ட சம்பவங்களினால்தான் தோற்றுவிக்கப்படுகின்றது போலும். பிறரை ஏமாற்ற நாம் எடுக்கும் முயற்சிகள் கடைசியில் எம்மையே காலைவாரிவிட்டுவிடுகின்றன. கஷ்டம் நேரிடும்போதுதானே மனிதன் கடவுளை நினைக்கின்றான். அன்று இரவு பூராவும் பானு அவன் கண்ணில் தென்படவேயில்லை.

மறுநாட் காலை கம்பெனிக்குப் புறப்படுவதற்கு முன்னர் அவனுக்கு அப்துல்லாவிடமிருந்து அழைப்பு வந்தது. அந்தஅழைப்பைஏற்றுஅப்துல்லாவின்பங்களாவுக்குச்சென்றான். அப்துல்லாவின் பங்களாவில் ரோஸியே அவனை வரவேற்று அழைத்துச் சென்றாள்.

''குட் மோனிங் மிஸ்டர் ரகுராமன்.'' அப்துல்லாவின் கனத்த குரல் ஒலித்தது.

''குட் மோனிங் பொஸ்.''

''டேக் யுவர் சீற்.''

''தாங்கியூ' என்று கூறியவாறு உட்காந்து கொண்டான் ரகுராமன்.

''மிஸ்டர் ரகு உங்களை நம்பி ஒரு பெரும் பொறுப்பை ஒப்படைக்கப்போகிறேன். ஆனால் இந்த வேலைகளுக்கெல்லாம் மனேஜரே நேரில் செல்வது வழக்கம்: அவருக்கு உடல்நலம் இல்லாத காரணத்தால் தங்களை அனுப்ப முடிவுசெய்தேன்.'' என்று கூறிவிட்டு அவனையே நோக்கிய அப்துல்லா, அவன் மனக் கருத்தை அறிய முயல்பவர் போன்று மௌனமாயிருந்தார்.

''என்ன மிஸ்டர் ரகு! எதுவும் பதில் கூருமல் இருக்கின்றீர்கள்?'' என்ருள் ரோஸி.

''நீங்களிடும் பணியைச் செய்வது என் கடமை. மறுப்புக்கூற முடியாத நிலை எனது நிலை'' என்று கூறிச் சிரித்தான் ரகுராமன்.

''யூ ஆர் கரெக்ட் மிஸ்டர் ரகு. இப்படிப்பட்ட வேலைகளுக்கு மனத்தயக்கம் உள்ளவர்கள் உதவார்கள். மிகப் பெரிய பொறுப்பு என்றதும் சிலர் பயந்துவிடுகின்றனர்'' என்று அப்துல்லா கூறிவிட்டு, இரு நிழற் படங்களை அவனிடம் நீட்டினர். அவைகளை எடுத்துப் பார்த்துவிட்டுத் திருப்பிக் கொடுத்தான்.

''இவர்கள் பிரான்சுக்காரர்கள். எமது நிறுவனத்துடன் தொடர்புடையவர்கள். இவர்களை நீங்கள் 'சைனீஸ் ஹோட்டலில்' கொழும்பில் சந்திக்கவேண்டும். நாங்கள் தரும் பொருட்களை அவர்களிடம் கொடுத்துவிட்டு, அவர்கள் தருவதைப் பெற்றுக்கொண்டு வரவேண்டும். அவர்கள் தரும் பொருட்கள் கிட்டத்தட்ட ஐம்பது இலட்சம் பெறுமதியானவையாகும்.''

''நான் பொறுப்புணர்ச்சியுடன் நடந்துகொள்ளவேண்டும். அப்படித்தானே?'' என்ருன் ரகு.

''கரெக்ட் மிஸ்டர் ரகு. இந்த விடயத்தில் நீங்கள் மிகவும் எச்சரிக்கையுடன் நடந்துகொள்ள வேண்டும் ஏற்கனவே இப்படியொரு முயற்சியில் எமக்குப் பெரும் நட்டம் ஏற்பட்டது. அந்த ஒரு ஹோட்டல்தான் மிகவும் பாதுகாப்பானது. அந்த ஹோட்டலிலும் சிலசமயம் பொலீஸ் வேட்டை நடைபெறுவதுண்டு. அப்படி ஏதும் நடைபெற்ருல், நீங்கள் எப்படியாவது தப்பித்துக்கொண்டுவிடவேண்டும் நாம் கொடுக்கும் சிறு பார்சலை உங்கள் கோட் பாக்கெட்டிலேயே வைத்துக்கொள்ள வேண்டும். மிகுதியை ரோஸியே கூறி அனுப்புவாள்'' என்று அப்துல்லா கூறிக் கொண்டிருக்கையில், அந்த அறையில் கதவுநிலைக்கு மேலே பொருத்தப்பட்டிருந்த சிவப்பு விளக்கு எரிய ஆரம்பித்தது. அதைத் தொடர்ந்து, ''சார், பொலிஸ் எங்கள் கம்பெனி உதவி மனேஜரிடம் விசாரணை நடத்திக்கொண்டிருக்கின்றது'' என்று ஒரு பெண் குரல் கூறியது. அந்தக் குரல் அப்துல்லாவின் மேசைமீது இருக்கும் நவீன ஒலிபெருக்கியில் இருந்து கேட்கின்றது என்பதை உணர்ந்துகொண்டான் ரகுராமன்.

''மிஸ்டர் ரகு! நீங்கள் போகலாம். இரவு ரோஸி உங்களைச் சந்திப்பாள்'' என்று கூறிவிட்டு எழுந்த அப்துல்லாவின் முகத்தில் பீதி படர்ந்திருப்பதை உணர்ந்தான் ரகுராமன்.

சந்தர்ப்பங்கள் சில சமயங்களில் மனிதனுடைய சுயரூபத்தைக்காட்டிக்கொடுத்துவிடுகின்றன. கெட்டவன்நல்லவன்போல வேடம்போட்டு நடிக்கலாம். பலரை ஏமாற்றலாம். ஆனுல், சில வேளைகளில் சந்தர்ப்பம் எப்படியோ அவனைக் காட்டிக்கொடுத்துவிடுகின்றது. அப்படித்தான் அப்துல்லாவின் முகத்தில் ஏற்பட்ட பீதியினுல் அவர் எதற்காகவோ அச்சமடைந்திருக்க வேண்டுமென்பதை உணர்ந்துகொண்டான் ரகு.

அப்துல்லா சென்றுவிட்டார்,

''ஏன் ரோஸி? உதவி மனேஜர் ஏதாவது சிக்கலில் மாட்டிக்கொண்டுவிட்டாரா?'' என்று கேட்டான் ரகு.

''ரகு அவன் ஒரு கோழை. சில சமயங்களில் ஏதாவது பித்தலாட்டங்களில் கலந்துகொள்கிறுன். அதனுல் கம் பெனிக்கே கெட்டபெயர் ஏற்பட்டுவிடுகின்றது'' என்று கூறிவிட்டு எழுந்து தன் அறைக்குச் சென்றுள். அவளைப் பின் தொடர்ந்தான் ரகுராமன்.

''ரோஸி! நான் மேற்கொள்ளும் வேலை சட்டவிரோத மானதாக இருக்கலாம் என யோசிக்கிறேன். அப்படித் தானே?''

''சட்டம் என்ன சட்டம்? எமது கம்பெனி விதிமுறை களின்படி நடக்காதவர்களைக்கூட சட்டவிரோதமாக நடந் தார்களென நாம் குற்றஞ்சாட்டுவோம். அரசாங்கம் சட்டரீதியாக மறுக்கும் சில விடயங்களில், நாம் அதை மீறவேண்டி வரும். நீ பயப்படுகின்ருயா ரகு?''

''நோ, நோ, எனக்கென்ன பயம்? ஆபத்து நிறைந்த காரியங்களில் இறங்குவது எனக்கு ஒரு 'இன்ட்றஸ்ட் கேம்!, என்ருன்.

''ரகு! இரவு ஏழுமணிக்கு என்னை எதிர்பாருங்கள்'' என்று விடைகொடுத்தாள் ரோஸி.

''ரோஸி!''

''ஜேஸ்''

''எட்லின் இப்போ எங்கே இருப்பாள்?''

''எட்லினு? அவள் உங்களைத் தேடிப் போனுலும் போயிருப்பாள். நீ கூறியதைக்கேட்டு அவள் அசந்தே போய்விட்டாள்.''

''உண்மையாகவா?''

''உண்மையிலேயே அவள் ஆச்சரியப்பட்டுப்போனுள். அவளுக்கு ஒரு சந்தேகமிருக்கு!''

''சந்தேகமா? என்னிலா?''

''ஆமாம்,''

''என்ன சந்தேகம்?''

''நீ மிஸ் பானுமதியை அன்று காப்பாற்றினுயே, அது பற்றி...''

''ஓ... அதுவா? அந்த விடயம் தெரியுமா? அவள் ஒரு கர்வி: அகம்பாவம் கொண்டவள். தன்னைவிட அழகி, பண்புள்ளவள் கிடையாது என்ற தலைக்கனம் உடையவள். அன்று அவளை ஆபத்திலிருந்து காப்பாற்றியதனுல் என்னையே பெரியமனிதன் என்று எண்ணிக்கொண்டு சுற்றுகிருள், அவளைக் காதலிப்பதுபோல் நான் நடிக்கின்றேன். ரோஸி! என் குணம்தான் நீ அறிந்ததாயிற்றே. அப்புறம் சந்தேகம் ஏன்? என்ருன்.

''எட்லின் ஒரு சந்தேகப் பிராணி. அவள் எதையும் இலகுவில் நம்பமாட்டாள்.''

''சரி, நான் பார்த்துக்கொள்கிறேன்'' என்று கூறிவிட்டு எழுந்து சென்றவன் திடீரெனத் திரும்பி வந்து, ''ரோஸி'' என்ருன்.

''என்ன ரகு! நீ என்னையும் 'லவ்' பண்ணுகிருயா?'' என்று கூறிச் சிரித்தாள்.

''உன்னையா? நோ, நோ. நிச்சயமாக நான் உன்னிடம் மோதிக் கொள்ளத் தயாராயில்லை. அந்த இரண்டு போட்டோக்களையும் இன்னெரு முறை பார்க்கலாமா?'' என்ருன்.

''ஓ... அந்தப் போட்டோக்களா?''

''ஆமாம்.''

''நீயே கொண்டுபோகலாம். ஆனுல்... எதற்கும் இரவு சந்திக்கும்பொழுது கூறுகின்றேன்'' என்ருள்.

## அத்தியாயம் இருபத்தைந்து

அன்று மாலை மூன்று மணியளவில் தன்னுடைய வீட்டில் ஓர் கதிரையில் அமர்ந்திருந்த பானுமதி மின்விசிறியின் சுவிட்சைத் தட்டிவிட்டாள். காற்றுக் குறைவாக இருந்தாலும்,வெயில் காரணமாக ஏற்பட்டிருந்த புழுக்க நிலையே மின்விசிறியின் உதவியை அவள் நாடக் காரணமாயிருந்தது. வெளிப் புழுக்கத்தை செயற்கைக் காற்றின் உதவியுடன் நிறுத்திக்கொண்டுவிட்டாலும் அவள் மனப் புழுக்கத்துக்கு மருந்து தேடினாள்.எதிலும் கிடைக்கவில்லை. முதல் நாளிரவு ரகுராமன் தொலைபேசியில் கூறிய செய்தியைக் கேட்ட நேரம் தொடக்கம் அவ்ள் மனம் ஒரு நிலையில்லாமல் தத்தளித்துக்கொண்டிருந்தது. பாரதியும் முன்பு போல் அடிக்கடி வருவதில்லை. அவளுக்குத்தான் கணவன் ஒருவன் துணையாகிவிட்டானே.அதனால் தனிமை அவளுக்குக் கொடுமையானதாகவே இருந்தது. மனிதனுக்குத் தனிமை மரணத்தை விடக் கொடுமையானது என்று ஒரு கவிஞன் கூறிய வாக்கியமும் அவளுக்கு நினைவுக்கு வந்தது.பாவம்,அவளால் என்னதான் செய்யமுடியும்?

வீட்டிற்கு வந்த ரகுராமன் பானுவைத் தேடினான். எங்குமே அவளைக் காணவில்லை. அவன் தன் தங்கை மாலதியை அழைத்து விசாரித்தான். அதற்கு அவள், ''ரீச்சரா?அவங்கள் தலைவலி என்று சொல்லிக்கொண்டு படுத்திருக்கிறாங்கண்ணா'' என்றாள்.

பானுவுக்குத் தலைவலி என்றதும் அவனுக்குத் தன் இதயமே வலிப்பது போன்றிருந்தது.உடனேயே அவள் இருக்கும் இடம் நோக்கிப் பறந்தான் ரகுராமன்.

அங்கே மின்விசிறிக்கு அருகே ஒரு கதிரையில் கண்ணை மூடியபடி தலையைக் கதிரையின்மேல்சட்டத்தில் சாய்த்துக் கொண்டிருந்தாள் பானுமதி. சப்தம் செய்யாமல் அவளுக்குப் பின்புறம் சென்று, நெற்றியில் கையை வைத்துக் கொண்டே ''பானு'' என்றான்.

விழிகளைத் திறந்த பானு, தனது முகத்துக்கு நேரே குனிந்து நோக்கும் அவன் அழகு முகத்தில் புன்முறுவல் பூத்து நிற்பதைப் பார்த்து ஒருகணம் தன்னையே மறந்தாளாயினும், ''இப்பதான் என் நினைவு வந்ததாக்கும்'' என்றாள்.

''பானு! உனக்குத் தலைவலி என்று பாரதி கூறினாள். நான் பதறிப் போனேன்'' என்றான்.

''நான் தலைவலியால் அவதிப்படவில்லை; மனதில் தான் வலி.''

''ஏன் அப்படி? நான் ஏதும் தவறு செய்தேனா?''

அவனுடைய கேள்வி அவளைப் பேசாமடந்தையாக்கி விட்டது. கூசாமல் பொய் கூறுகிறானே என்று துடித்தது அவள் மனம். ஆனாலும் அவள் எதுவும் பேசாமலிருந்தாள்.

''பானு! உன் வீடுதேடி வந்த என்னை இரு என்றுகூடக் கூறாமல் நிற்கவைத்துக் குற்றம் சுமத்துகின்றாயே?'' என்றான்.

''நான் குற்றம் சுமத்தவில்லையே ரகு! எனக்குத் தெரியாமல் குற்றம் செய்துவிட்டு அதன் காரணமாக வருந்துகிறீர்களோ?''

''குற்றத்தைப் பற்றி மட்டுமே கூறுகின்றாயன்றி நான் கேட்டது...''

''ரகு! இது உங்கள் வீடு. நான் உங்களுடையவள். அந்த நினைப்பிருந்தால்......நீங்கள் இப்படி உபசாரங்கள் நான் செய்யவேண்டுமென்று எதிர்பார்க்கின்றீர்களா?''

''பானு! நீ கூறுவதும் உண்மைதான். இருப்பினும் கேட்டேன். அது சரி பானு'' என்று கூறிக்கொண்டே திரும்பி யன்னல்வரை சென்றவன் சில நிமிடங்கள் மௌனமாக நின்றிருந்தான். அவளும் எழுந்து அவனருகே சென்று நின்றாள்.

''ரகு!என்னுடன் கோபமா?'' என்றாள்.

''பானு, உன்னுடன் எனக்கென்ன கோபம்? ஆனால், உன்னிடம் அன்பு வைத்துவிட்டதால் என்னை நானே கோபித்துக்கொள்ள வேண்டியவனாக இருக்கின்றேன். பானு, உனக்கு முன்னரே கூறியிருக்கிறேன். நான் செய்யும் சில செயல்கள், என் நடத்தை உனக்கு விருப்பமில்லாதவையாகவும், நீ வெறுத்து ஒதுக்கக்கூடியனவாகவும் இருக்கலாம் என்று. ஆனால்...'' என்று கூறிவிட்டு அவன் சென்று ஒரு கதிரையில் அமர்ந்தான்.

அவளும் அவனருகே வேறோர் கதிரையில் அமர்ந்தவாறு அவனுடைய முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தாள். அவனுடைய முகத்தில் சிந்தனை உணர்வுகளால் ஏற்பட்ட குழப்ப நிலையையும் அவள் உணர்ந்துகொண்டாள். சிரித்துப் பழகிய அவனுடைய முகத்தில் அமைதியின்மை குடிகொண்டிருந்தது. அவன் மனதில் எதையோ வைத்துக்கொண்டு கூறமுடியாமல் தவிக்கின்றான் என்பதையும் பானு புரிந்துகொண்டாள்.

''பானு! நான் யாரிடமும் என் அன்பை இதுவரை பகிர்ந்துகொண்டது கிடையாது. நான் இவ்வளவு நாட்களும் கவலையில்லாத மனிதனாகத்தான் திரிந்தேன். ஆனால், உன்னிடம் அன்பு வைத்த நாள் முதலாக என்னை நீ துன்புறுத்தி வருகின்றாய் பானு.''

''இல்லை ரகு. நீங்கள் கூறுவது தவறு. நான் உங்களிடம் சந்தேகப்பட்டேனென்றால் அதற்குக் காரணம் நான் உங்களிடம் கொண்டுள்ள அளவிடற்கரிய அன்புதான்.

'அன்புடையவர்களையே அதிகமாகச் சந்தேகிக்கின்றோம்' என்று ஒரு அறிஞர் கூறியிருக்கின்றார்.''

''அவன் யாரோ எழுதிவைத்தான் என்பதற்காக நீ என்மேல் சந்தேகப்படலாமா?''

''ரகு!நீங்கள் எதைச் செய்தாலும் நான் துன்பப்பட மாட்டேன்.ஆனுல்,நீங்களே உங்கள் வாயால் இன்னொருத்தியை ஏற்கப்போவதாகக் கூறியபின்பு என்னுல் எப்படிச் சந்தோஷமாக இருக்கமுடியும்?''என்று கேட்கும்பொழுதே அவளுடைய அழகு விழிகளில் நீர் முத்துக்கள் நிரம்பிச் சிதறி கன்னங்களின் வழியே மணி மணியாக உருண்டோடின.அவள் விழிகளில் நீர் வழிவதைப் பார்த்ததும் அவன் மனமும் தளர ஆரம்பித்துவிட்டது.

''பானு!நீ அழக்கூடாது பானு.நீ சிரித்துக்கொண்டே எப்பொழுதும் இருக்கவேண்டுமென விரும்புபவன் நான்.''

''உங்களையே நான் இழந்துவிட்ட பின்பும் சிரித்துக் கொண்டே இருக்கணுமா?'' குழந்தைபோல விம்மிவிம்மி அழுதாள்.

''பானு! நான் நேற்றுப் பின்னேரம் ரோஸிக்குப் போன் செய்ததைக் கேட்டாயா?''

''ம்,ம்'' என்று மேலும் விம்மினுள்.

''பைத்தியம், பைத்தியம். அது ஒரு தந்திரம்.அதை நீ நம்பிவிட்டாயா?பானு!உன்னை நான் என்றுமே இழந்து வாழமுடியாது பானு.நீ என்னை நம்பு! என் உள்ளத்திலும் சரி,வாழ்விலும் சரி நீயே என்றும் இருப்பாய்.''

''இப்படி எத்தனை பேர்களிடம் சொல்லியிருப்பீர்களோ?''

''பானு!உன்னிடம் மட்டுந்தான் கூறுகின்றேன். என் தொழில் விடயமாகத்தான் நான் அவளிடம் அப்படிக் கூற நேரிட்டது.உனக்குத் தெரியுமா பானு?உன்னை நான் காப்பாற்றியதற்காக, நீயே என்னை விரும்பி ஏற்றுக்

கொண்டாய் என்பதற்காக நான் இப்படியெல்லாம் நடந்துகொள்ளவில்லை. நான் போகும் பாதை அப்படி யானது. அதற்காக சில சமயம் அப்படியும் நடக்கவேண்டி யிருக்கின்றது."

"என்ன இருந்தாலும் அவளை அப்படி ஏமாற்றலாமா ரகு?"

"ஏமாற்றவேண்டிய இடத்தில் ஏமாற்றத்தான் வேண்டும்."

"ஏன் ரகு?"

"ஏன்? எதற்கு? என்று என்னிடம் நீ கேட்டால் உன்னிடமே நான் பொய் சொல்ல நேரிடும். பொய் கூறுவதினால் நன்மை உண்டாகலாம் என்றால் கூறுவதில் தப்பில்லை. ஆனால்—நீ என்னைப் பொய் கூறத் தூண்டமாட்டாய் என நினைக்கின்றேன். சத்தியமாக என்மீது ஆணையிட்டுக் கூறுகின்றேன், நீ என்னுடையவள்! நீ என்னை வெறுத்தாலும் நான் உன்னை வெறுக்கமாட்டேன்."

"ரகு!" என்று தன் மலர்க் கரத்தால் அவன் வாயைப் பொத்தித் தடுத்தாள். அப்பொழுது அவளுடைய விரல் அவன் இதழ்களிடையே அகப்பட்டுக்கொண்டுவிட்டது.

"பானு! இந்த அழகிய விரலைக் கடித்திருப்பேன். ஆனால், நீ..." என்று அவள் கரத்தைத் தன் கரத்தில் பிடித்தவாறு கூறினான்.

அவன் வாயில் அவள் விரல்கள் பட்டதினால் ஏற்பட்ட ஸ்பரிசம் அவள் உடலெல்லாம் தீயாகப் பரவிக்கொண்டு விட்டது. அப்படி அவனிடம் என்ன மாய சக்திதான் இருக்கோ? அவனுடன் பேசும் ஒவ்வொரு நிமிடமும் அவள் தன்னையே இழந்து தோல்விக்குள்ளாகி விடுகின்றாள். அவனாகத் தொட்டு ஏற்படும் இன்பத்தைக் காட்டிலும் அவளாக அவனைத் தீண்டும்பொழுது...! பேசாத பதுமை போலிருந்தாள் அந்தப் பேசும் பொற்சித்திரம்.

அடுத்து அவன் கூறிய வார்த்தைகளைக் கேட்ட பானு, ''ரகு'' என்று எழுந்தவளாய்த் தன் கரங்களால் அவன் கழுத்தை வளைத்துக் கட்டிக்கொண்டாள்.

## அத்தியாயம் இருபத்தாறு

பானுவின் நிலையில் பார்த்தால் பெண் என்பவள் ஒரு புதிர்.விடுவிக்கமுடியாத புதிர். சில விநாடிகளுக்கு முன்பு அவனை அலட்சியம் செய்தவள்,அவன் காலையில் கொழும்பு புக்குச் செல்வதாகக் கூறியதும் திடுக்கிட்டவளாய் அவன் கழுத்தைத் தன் கரங்களால் வளைத்துக்கொண்டே, ''உண்மைதானா ரகு?'' என்றாள் குழந்தைபோல.

''உண்மைதான் பானு!வியாபார விடயமாக,மிகவும் முக்கிய விடயமாக என்னை அனுப்புவதாக அப்துல்லாவே கூறினார்.''

''ரகு;எத்தனை நாளாக நான்...''

''சொல்லேன் பானு'' என்று அவன் அவள் கரங்களை விடுவித்துக்கொண்டு எழுந்து நின்றான்.

ஆனால்,அவள் அவனை விடமுடியாத உணர்வுகளுக்கு ஆளாகிவிட்டாள்.இலகுவில் பொங்கி அடங்கிவிடும் உணர்வுகளா பெண்மை உணர்வுகள்?எழுவதற்கும்—அடங்குவதற்கும் ஆமை வேகமே அதற்கு உண்டென்பது பெண் உணர்வு பற்றிய மர்மம். 'ஆசை வெட்கம் அறியாது' என்பார்களே.அந்த ஆசை உதிர்ந்துபோகுமுன் வெட்கத்தினை மறந்துபோய்விடுகின்றது போலும். தான் விரும்பிய,தன்னுடையவன் என்று நினைக்கும் அவனிடம் வெட்கமாவது தயக்கமாவது? ''ரகு'' என்று அவன் முதுகுப் புறமாகச் சாய்ந்துகொண்டு சிணுங்கினாள் பானு.

''பானு!யாராவது பார்த்தாலும்'' என்றான்.

''பார்த்தால் என்ன?''

''அவ்வளவு துணிச்சலா உனக்கு?''

''ரகு!உண்மையில் நான் ஒரு மானங்கெட்டவள்தான், இல்லையா?'' என்றாள்.

''ஏன் அப்படிச் சொல்லுறே?''

''ஏனா?எவ்வளவு வீருப்புப் பேசிய நான் இப்படி உங்கள் அன்பை வேண்டி...எனக்கே வெட்கமாயிருக்கு ரகு.''

''பானு!வாவேன் வெளியே போகலாம்.''

''ஏன் பயமா?''

''பானு'' என்று அவள் கன்னத்தோடு கன்னம் சேர்த்துக்கொண்டு நின்றான்.

அதே நேரத்தில் ''அண்ணா, அண்ணா'' என்று பாரதியின் குரல் வாசற் கதவருகில் கேட்கவே ரகு விலகி நின்றுவிட்டான்.

''அண்ணா,உங்களுக்கு போன் வந்திருக்காம். அத்தான் கூட்டிவரச் சொன்னார்'' என்றாள் பாரதி.

''சரி வாறேன் பாரதி.நீ ரீச்சரைக் கூட்டிக்கொண்டு வா. நான் போகிறேன்'' என்று கூறிவிட்டு ஓடிச் சென்றான்.

ரகு சென்றுவிட்டானாயினும் விடுபடமுடியாத உணர்வுகளுடன் பானு திகைத்து நின்றாள். அவள் நிலையே அவளுக்குப் புரியாத ஓர் புதிராக இருந்தது.

அவள் இன்ப வலையில் சிக்கி மதியிழக்காத நிலையில் கிடந்தாளாயினும், அவனைப் பற்றி நினைக்காமலிருக்க அவளால் முடியவில்லை. அவனிடம் அப்படி என்னதான் வசீகரம்? அவன் பேச்சும், சிரிப்பும், அழகும் எந்த ஒரு

உறுதியான மனத்தின் தளராத நிலையைத் தளர்த்தி விடுமா? நிச்சயமாகத் தளர்த்திவிடும் என்பது அவளுக்குத் தெரிந்திருந்தது.

ரகுராமனைப் பற்றி ஊரும் உலகமும், ஏன் அவனைப் பெற்ற அன்னை, உடன் பிறந்த அனைவருமே தூற்றிய பொழுது தானும் அவனை வெறுத்ததும், அந்த வெறுப்பே ஓர் விருப்பாக மாறி அவன்மீது தீராத காதலை வளர்த்து விட்டதையும் எண்ணித் தனக்குள்ளேயே சிரித்தாள் பானுமதி. அவனை முன்பு ஒரு மனிதன் என்றுகூடக் கருதாத நான், இப்பொழுது அவனை ஒரு தெய்வமாக வணங்க ஆரம்பித்திருப்பதையும் எண்ணும்போது அவன் உண்மையிலேயே ஓர் அபூர்வ சக்தி படைத்த பிறப்பாகவே இருக்க வேண்டும் என எண்ணினாள்.

அவனைப் பெண்களெல்லாம் விட்டில்கள் போலச் சுற்றி விளையாடுவது ஏன்? அவர்களோடு தானும் ஓர் விட்டிலாக மாறிவிடலாமே என்று எண்ணும்பொழுது, அவனை நினைக்கவே அஞ்சி தீயென ஒதுக்கிய தன் பேதமையை எண்ணி வெட்கப்பட்டாள். பார்க்கப் போனால் உண்மையிலேயே அவன் ஒரு தீ போலத்தான் இருந்தான். அவனைத் தீண்டியபொழுது தீயைத் தீண்டியதுபோன்று அவள் உடலெல்லாம் சொல்லமுடியாத ஓர்...அவளுடைய நினைவுக்கும்—ஏன் கற்பனைக்குமே எட்டாத ஓர் சிந்தனைக் கோட்டில் அவள் மிதந்துகொண்டிருந்தாள்.

அதே வேளையில் அவளுடைய வீட்டுக் கதவை யாரோ தட்டும் சப்தம் கேட்கவே எழுந்து சென்று கதவைத் திறந்தாள். அவளை எரித்துவிடுபவள் போலப் பார்த்துக் கொண்டு நின்றாள் மோகினி.

''வாருங்கள்'' என்று வரவேற்றாள் பானு.

''நீ என்னை வரவேற்கக்கூடிய அளவுக்குத் துணிச்சல் பெற்றுவிட்டாயா? நான் நினைத்தமாதிரி நீ அவனை சொக்குப் பொடி போட்டு வைச்சிட்டியேடி'' என்றாள் மோகினி.

"அக்கா! நீங்கள்..."

"அக்கா என்று என்னை நீ அழைக்க உனக்கு என்னடி யோக்கியதை இருக்கு?" என்று அவள்மீது சீறிவிழுந்தாள்.

"ஆல் ரைட் மிஸ்ஸிஸ் ராஜாராமன். எதற்கும் மரியாதை கொடுத்துத்தான் எனக்குப் பழக்கமே தவிர, உங்களைப் போல பேசிப் பழக்கமில்லாதவள். நீங்கள் பேசுவதைப் போல பேச எனக்கும் அதிக நேரமாகாது. நான் இந்தவீட்டிற்கு குடிவந்திருப்பது உங்கள் விருப்புவெறுப்புகளுக்காக அல்ல என்பதை முதலிலேயே நீங்கள் தெரிந்து கொண்டும், பின்பு என்னைக் கண்டபடி பேசுவதை இனி அனுமதிக்கமுடியாது" என்று அவள் கூறிக்கொண்டிருக்கும்பொழுது அன்னபூரணி அம்மாள் உள்ளே நுழைந்தாள்.

மோகினியிடம் தர்க்கவாதம் ஆரம்பித்த உடனேயே வாசலில் வந்த அன்னபூரணி அம்மாளை அவள் பார்த்து விட்டாள். என்ன இருந்தாலும் அவளுடைய மூத்த மருமகளைத் தான் கண்டித்துப் பேசுவது சரியல்ல என்ற ஒரு பயம் அவள் இதயத்தில் தோன்றியதும் வாயடைத்துப் போனாள். ஆனால், அன்னபூரணியோ தங்கத்தில் இருக்கும் வேறுபாடுகளைக் கண்டறிவதாயின் பத்தரை மாற்றுத் தங்கத்துடன் கலப்புத் தங்கத்தையும் நேரில் வைத்துப் பார்த்துத்தானே அறியவேண்டும். அப்படியான ஒரு சந்தர்ப்பத்தை நேரில் பார்த்துவிட்ட திருப்தியில் எதுவும் பேசாமல் நின்றிருந்தாள்.

"அம்மா, என்னம்மா பேசாமலிருக்கின்றீர்கள்?" என்றாள் பானு.

"என்னடியம்மா பேசுவது? பேசுவதற்கு இடமில்லாத ஒரு நிலையை நீங்கள் உருவாக்கிவிட்டீர்களே!" என்றாள்.

"அத்தை, இவள் கண்டபடி கதைப்பதற்குத் துணிந்து விட்டாள். என்னை ஒரு மதிப்பில்லாது பேசுகின்றாள். பிச்

சைக்கார நாய்களை வீட்டில் கண்டபடி சுற்றவிட்டால் இப் படித்தானே பேசுவாள்'' என்றாள் மோகினி.

பானுவின் முகமெல்லாம் குங்குமம் போலச் சிவந்து ஜொலித்தது. அன்னபூரணி அம்மாளின் கால்களில் விழுந்தாள்.

''பானு! எழுந்திரம்மா. அவள் என்னவோ பிதற்று கின்றாள். நீ அதைக் காதில் போட்டுக் கொள்ளாதே. நீ படித்தவள். உனக்கு நான் புத்தி சொல்லவேண்டியதில்லை'' என்றாள் அன்னபூரணி.

''அத்தை, உங்களை நல்லா வளைத்துப் பிடிக்கத் தெரிந்து வைத்திருக்கின்றாள். இப்படித்தான் ரகுவையும் பிடித்தாள்'' என்றாள்.

''மிஸஸ் ராஜாராமன்! உங்களிடம் ஒரேயொருகேள்வி மட்டும் கேட்கின்றேன். ரகு உதவாக்கரை, அவன் உன்னைக் கெடுத்துவிடுவான். நீ ஓடிவிடு என்று என்னிடம் கூறினீர் களே? இன்று நான் ரகுவைப் பிடித்துவிட்டதாக நீங்கள் ஏன் என்மீது கோபப்பட வேண்டும்?'' என்றாள்.

அவள் கேள்விகளுக்கு மோகினியால் பதில் கூறமுடிய வில்லை. பிரமித்துப்போய் நின்றாள்.

''ஏன் மோகினி! அவள் கேட்கின்றாளே? நீ ஏன் வாய டைத்துப்போய் நிற்கின்றாய்? மறுமொழி கூறேன்'' என் றாள் அன்னபூரணி.

''அண்ணி எப்படியம்மா கூறுவார்கள்? தன் தங் கையை ரகுவின் அறைக்குப் போகும்படி கூறிவிட்டு, அவனே தன் தங்கையை வரவழைத்துக் கெடுக்க முனைந் தான் என்று குற்றஞ் சாட்டி வீட்டைவிட்டே வெளியேறி, என் கல்யாணத்துக்கு ஒருநாள் மட்டுமே அந்நியர்கள் போல வந்துவிட்டுப். போன இவர்களா பதில் கூறுவார் கள்?'' என்றாள் அங்கே வந்த பார்தி.

''என்னடியம்மா புதுக்கதை கூறுகின்றாய்?'' என்றாள் மோகினி.

''புதுக் கதை இல்லை அண்ணி, உங்கள் இரகசியத் திட்டங்களைத்தான் கூறுகின்றேன்'' என்றாள் பாரதி.

''என்னடி இரகசியம்? நீயும் இவளும் சேர்ந்து சதித் திட்டம் போட்டிருக்கின்றீர்களா?'' என்றாள் மோகினி.

''அப்படி ஒரு திட்டம் எங்களுக்குள் உதயமாகாது அண்ணி. அப்பாவி அண்ணனை ஏமாற்ற நீயும் உன் தங்கை கீதாவும் பத்தாயிரம் ரூபா அந்த அயோக்கியன் நாகலிங்கத்திற்குக் கொடுத்தீர்களே ஏன்?''

''பாரதி!'' என்று மோகினியும் பானுமதியும் ஏககாலத்தில் அவள் பெயரை அழைத்தனர்.

''பானு! நீ பயப்படாதே. இனியும் உண்மைகளை நீ மூடிவைக்கத் தேவையில்லை. எங்கள் குடும்ப கௌரவத்திற்குக் கெட்ட பெயர் வருமென்று நீ மூடிவைக்க, அண்ணி உன்னைக் கெட்டவளாக்க முனைகின்றாள்'' என்று ஆதியோடந்தமாக எல்லாவற்றையும் கூறிவிட்டு, ''பானு, இன்று பெரியண்ணா வந்ததும் நானே அவரிடம் கேட்டுவிடுகின்றேன்'' என்றாள்.

''என்ன கேட்கப் போகின்றீர்கள்? இதோ நானே வந்துவிட்டேன். மோகினி உன்னை எங்கெல்லாம் தேடுவது?'' என்றார் அங்கே வந்த ராஜாராமன்.

## அத்தியாயம் இருபத்தேழு

மோகினி ஒருகணம் அசந்து போனுள். பின்னர் தன்னைச் சமாளித்துக் கொண்டு "பார்த்தீர்களா? தங்கை தங்கை என்று ஓடி வந்தீர்கள். இங்கே உங்கள் தங்கை என்னை சதிகாரி, பழிகாரி, குடிகேடி என்றெல்லாம் தூற்றுகின்ருள்" என்று அவர் பக்கமாகச் சென்ருள்.

"அப்படியா சொன்னுள்? ஏன் அம்மா நீங்களும் பார்த்துக் கொண்டா நிற்கின்றீர்கள்?" என்று தாயைக் கேட்டார் ராஜாராமன்.

"அடே ராஜா! கேளடா இந்த அநியாயத்தை" என்று அவள் தொடங்கிய பொழுது, "அம்மா நான் கதைகேட்க வரவில்லை. மோகினியைப் பாரதி திட்டினுளா?" என்ருர்.

"நீங்கள் வராவிட்டால் அடித்தே துரத்தினுலும் துரத்தியிருப்பார்கள். உங்கள் அம்மா என் பின்னுலேயே வந்துவிட்டார்கள். தாயும் மகளும் இந்த மானங் கெட்டவளும் சேர்ந்து நடத்திய காரியத்தை நீங்கள் கேட்கவில்லை" என்ருள் மோகினி.

"மோகினி! நான் எல்லாம் கேட்டுக்கொண்டு தான் நின்றிருந்தேன்" என்ருர் ராஜாராமன்.

"கேட்டீர்களா?" என்று அவள் கேட்டு முடிக்கு முன்பே ராஜாராமன் வெறிகொண்ட மிருகம்போலஅவள் மீது பாய்ந்தார். அவளுடைய தலைமயிரைப் பிடித்துக் கொண்டே மாறிமாறி கன்னத்திலும் முதுகிலும் அறைந்

தார். அதே வேளையில் அங்கே ஓடிவந்த ரகு, ''அண்ணு இதென்னண்ணு?'' என்று அவரை இழுத்தான்.

''டேய் ரகு! இன்றுதாண்டா ராஜாராமன் ஓர் ஆண் மகனுக மாறினுன். அதை நீ கெடுத்துவிடாதே; விட்டா கையை'' என்ருர்.

''அண்ணு! உங்களை மன்ருடிக் கேட்கின்றேன். இனி அடிக்காதீர்கள். ஒரு பெண்ணைக் கை நீட்டி அடிப்பது உங்களுக்குத்தான் பாபம்.''

''பெண்ணை அடித்தால் தானே பாபம். பெண் உருவில் உள்ள இந்தப் பேய்க்குப் பாபம் காட்டக் கூடாது. இவள் என்னையும் உங்களையும் பிரித்தது மட்டுமல்ல, மற்றவர்கள் என்னை ஒரு மடையனுக நினைத்துச் சிரிக்கவும் செய்து விட்டாள். சண்டாளி! இவளைச் சும்மாவிடக் கூடாது. கொலை செய்தாலும் என் ஆத்திரம் தீராது'' என்று கர்ஜித்தார் ராஜாராமன்.

''அடே ராஜா போதுமடா; என்ன இருந்தாலும் அவளும் ஒருபெண்தாண்டா?''என்ருள் அன்னபூரணியம்மாள்.

''அம்மா உங்களையும் என்னையும் பிரித்துவிட சற்று முன்தானே சதி நாடகமாடினுள். நீங்களும் சேர்ந்து சதி செய்ததாகக் கூறினுள். இவளுக்கா பரிவு காட்டுகின்றீர்கள்?'' என்ருர்.

''அண்ணு! தெரியாத்தனத்தால் செய்தவற்றுக்கும் மன்னித்து விடுவதுதான் முறை. நீங்கள் படித்தவர். பண்புள்ளவர்'' என்ருன் ரகு!

''டேய் ரகு! நானு படித்தவன். எம்.ஏ. படித்துவிட்டதால் அறிஞனு? கேவலம் என்னுடன் பிறந்த உன்னையே புரிந்து கொள்ளமுடியாதவனுய், இந்த நஞ்சு என் அறிவையே மயக்கி விட்டதே'' என்று மோகினியைச் சுட்டிக் காட்டினுர்.

"அண்ணு நீங்கள் என்னை எப்படிவேண்டுமானுலும் பேசலாம், எப்படியும் நினைக்கலாம். நான் உங்களை வெறுக்கவுமில்லை, பகைக்கவுமில்லை."

"அது உன் உயர்ந்த குணம். ஆனுல் என் மனம் இந்தச் சாக்கடையில் அல்லவா அமிழ்ந்துவிட்டிருந்தது. இவளோடு வாழ்ந்தது போதும். இனி எனக்கு என்ன வாழ்வு? நான்...நான்... ரகு..." என்று அவனைக் கட்டிப்பிடித்துக் கொண்டு கண்ணீர் விட்டார் ராஜாராமன்.

"அண்ணு! வானத்து மீனையும், நிலவையும்கூட கருமுகில்கள் மறைப்பதுண்டல்லவா? அப்படி அவை மறைக்கப்பட்டுவிட்டால் தம் ஒளி இழந்து மங்கிவிடுவதில்லையே. எல்லாம் கண நேரம் நடக்கும் விதியின் விளையாட்டுத்தான். கவலையை உதறுங்கள்" என்றவன் அழுது கொண்டிருக்கும் மோகினியைப் பார்த்து 'அண்ணி' என்ருன்.

"என்னை மன்னித்துவிடுங்கள்" என்று ராஜாராமனின் காலடியில் விழுந்தாள் மோகினி.

"என் காலைப் பிடித்துப் பலனில்லை மோகினி! நீ பிடிக்கவேண்டியது இவன் கால்களை" என்ருர் ராஜாராமன்.

"அண்ணு! என்னண்ணு நீங்கள்!" என்ருன் ரகு.

"மோகினி! அவனைப் பெற்றவளிடம் மன்னிப்புக் கேட்டு நீ செய்த பாவத்திற்குப் பரிகாரம் தேடிக்கொள்" என்ருர்.

உடனேயே மோகினி மாமியாரின் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டாள். ஆனுலும் அவள் மனத்தில் குரோத எண்ணம் மறைந்துவிடவில்லை. பெட்டிப் பாம்புபோல அடங்கிக் கிடந்த ராஜாராமன் விழித்துக்கொண்டு விட்டாரே என்றுதான் தயங்கினுள்.

அதே வேளையில் ராஜாராமனுக்கு அந்த வீட்டில் அவர்கள் குடும்பத்தின் உண்மை நிலைகளை ஓரளவுக்குக் கூறிவைத்த பாரதியின் கணவன் மகேசன், எதுவுமே தெரியாத அப்பாவி போல சாய்வு நாற்காலியில் படுத்துக் கொண்டே ஏதோ ஒரு மர்ம நாவலில் மூழ்கியிருந்தான்.

அங்கே ஒரு பெரும் புயலடித்து ஓய்ந்து அமைதி நிலவியிருந்தது. எல்லோரும் சென்றுவிட்டனராயினும் பானு என்ன நடந்து முடிந்ததென்று நினைக்க முடியாத அளவுக்கு அதிர்ச்சியில் மூழ்கியிருந்தாள். பூசை மாடத்திலிருந்த கண்ணன் சிலை அவள் தோற்றத்தைப் பார்த்துச் சிரிப்பதுபோலிருந்தது அவளுக்கு. அந்த மாடத்தில் ஒளி பரப்பி நின்ற குத்துவிளக்கின் திரி எண்ணெய் இன்றிக் கருகியதால் ஏற்பட்ட நெடி அவள் சுவாசத்தில் கலந்த போதுதான் சுய உணர்வு பெற்றாள்.

அவள் சிந்தனையில் ரகு—ராஜாராமன் ஆகிய இருவரது அன்புப் பிணைப்புத்தான் முதலிடம் பெற்றிருந்தது. தாலி கட்டிய மனைவியின் துர்ப்போதனையால் உடன் பிறந்தவன் மீது வெறுப்பு ஏற்பட்டிருந்தாலும் அந்த வெறுப்புணர்ச்சியின் கீழ் நின்ற பாசப் பிணைப்புத்தான் அவளைச் சிந்திக்க வைத்தது. ஆனால் ரகு அவரை வெறுக்கவோ, பகைக்கவோ இல்லையென்று கூறிய பொழுது அவர் இதயமே கசக்கிப் பிழிந்தது போன்ற வேதனையுடன் விட்ட கண்ணீர் அவர்களிடையேயுள்ள இரத்த பாசத்தின் முனை அறுந்துவிடவில்லை என்பதையே நிரூபிப்பதாக இருந்தது.

ஆனால் ரகுராமன்? அவன் ஒரு அபூர்வப் பிறப்புத் தான். தன்னை வெறுத்தவர்களிடமே அன்பு காட்டும் பண்பும்...இந்த நிலை... என்று எண்ணியவளாய்ப் பூசை மாடத்திலிருந்த கண்ணன் சிலையைப் பார்த்தாள். அந்தச் சிலையின் முகத்தில் தோன்றும் சிரிப்பு, அதில் தவழும் அருள், அந்தச் சிறு விழிகளில் மிளிரும் குறும்பு, அத்த

லையும் அந்த ரகுராமனிடம் நிறைந்திருக்கின்றதே! அன்று கல்லூரியில் மாணவிகளுக்குப் பாரதி பாடலில் போதித்த பாடல் வரிகள் அவள் மனதில் சுழன்று காதிலே ஒலித்தன.

''சின்னக் குழந்தைகள் போல் விளையாடிச்
சிரித்துக் களித்திடுவான் - நல்ல
வண்ண மகளிர் வசப்படவே...
கோபத்திலே ஒரு சொல்லில் சிரித்து
குலுங்கிடச் செய்திடுவான்...
பெரும் ஆபத்திலே வந்து பக்கத்திலே நின்று
அதனை விளக்கிடுவான்...''

என்று அவள் நினைவில் சுழன்ற கவிதையின் அடிகளில் ரகுராமனே நின்று சுழன்று சுழன்று கொண்டிருந்தான். அதே வேளையில் அவள் மனதில் வேறொரு துன்பமான செய்தியும் சேர்ந்து சுழல ஆரம்பித்தது. அந்தச் செய்தியால் நடந்தவைகளையே மறந்து, பித்துப் பிடித்தவள் போல ஓடிச் சென்று கட்டிலில் விழுந்தாள்.

ரகுராமனை அவள் நம்புகின்றாள். அவனிடம் தன் உள்ளத்தைப் பூரணமாக ஒப்படைத்து விட்டாளாயினும், அவனுடைய மர்ம நடத்தையின் மீதுள்ள சந்தேகம் அவள் மனதை அரித்துக்கொண்டிருந்தது. சந்தேகம்கூட ஒருவித புற்றுநோய் போன்றதுதான். நாம் எப்படி எமக்கு ஒன்றுமில்லையென்று மனதைத் திடப்படுத்திக் கொள்ள முனைந்தாலும் ஈற்றில் அப்படி ஒன்று இருக்கும் என்ற நினைவு தோன்றும்பொழுது பல நாட்களாகத் திடமாக்கி வைத்திருக்கும் மன உறுதி ஒரு நொடிப் பொழுதில் ஈடாட்டம் கண்டுவிடும். பானுமதியின் மனச் சோர்வின் காரணமாகவோ என்னவோ தூக்கத்திற்கு அடிமையாகி விட்டாலும் நினைவுகள் கனவுகளாகித் தூக்கத்திலும் அவளைத் துன்புறுத்திக் கொண்டிருந்தன.

அன்றுதான் அன்னபூரணியம்மாளுடைய மனதில் குதூகலம் பொங்கி வழிந்தது. அண்ணனும் தம்பியும் ஒருவருக்கொருவர் அன்பும், பாசமும் குழையப் பேசிக் கொண்டதைப் பார்த்தபொழுது அவள் பெற்ற மனம் இன்பத்தால் நிரம்பி வழிந்துகொண்டிருந்தது.

## அத்தியாயம் இருபத்தெட்டு

மறுநாள் அதிகாலையே எழுந்துவிட்ட பானுமதி தலைக்கு எண்ணெய் தேய்த்து முழுகியிருந்தாள். தலை உலர்வதற்காகச் சாம்பிராணித் தட்டில் தணலிட்டு சாம்பிராணியைப் போட்டுவிட்டு அந்தப் புகையில் தனது அழகிய கூந்தலை நீவி விட்டுக்கொண்டிருந்தாள். உடலில் சுற்றியிருந்த மெல்லிய ஆடையுடன் மட்டுமே அவள் ஒருக்களித்துச் சாய்ந்திருந்தாள். அந்த வேளையில் அங்கே யாரும் வரமாட்டார்கள் என்பதுதான் அவள் எண்ணம். ஆனால் ரகுராமன் முதல்நாளிரவு நடந்த சம்பவத்தின் பின்னர் அவளைச் சந்திக்க முடியாததினால் அதிகாலையில் எழுந்ததும் அங்கே சென்றான். அங்கே அவன் கண்ட காட்சி அவனை மெய்சிலிர்க்க வைத்துவிட்டது. ஆச்சிரமத்தில் வாழும் ரிஷிபத்தினிபோல விரித்தகூந்தலை நீவி விட்டபடி ஒரு மெல்லிய துணியால் உடலைச் சுற்றிக் கொண்டிருந்த பானுமதியின் தோற்றமே அவனை அந்நிலைக் குள்ளாக்கியது. தந்தத்தில் கடைந்தெடுத்தது போன்று விளங்கிய கைகளும், அந்தக் கைகளைத் தாங்கி நின்ற தோளும், தோளுக்குக் கீழேதெரிந்தபகுதியும், சங்குபோன்று பளிச்சிடும் கழுத்தும், உள்ளாடை எதுவுமின்றி ஒற்றைத் துணியை மட்டுமே சுற்றியிருந்ததால் செழுமையான

அவள் மேனியின் மேடு பள்ளங்களும், யாவும் தெட்டத் தெளிவாக, ரவிவர்மாவின் ஓவியத்தில் வரும் அழகுப் பதுமை போல அவளிருந்த காட்சி, அவனுடைய ஆண்மை உணர்வுகளுக்கு சவால் விடுவதுபோன்றிருந்தது. இத்தனைக்கும் அவள் அவனைப் பார்க்கவில்லை. அவளது முதுகுப் புறமே அவன் நின்றிருந்தான். திருட்டுத்தனமாக அப்படித் தான் நிற்பது கௌரவமில்லை என்று உணர்ந்து கொண்ட பொழுது, அவன் திரும்ப முயன்றான். அந்தச் சமயத்தில் அவளும் அவனைத் திரும்பிப் பார்த்தாள்.

''ரகு!'' என்றாள் பானுமதி.

''என்ன?'' என்றானாயினும் திரும்பியவன் திரும்பிய படியேதான் நின்றிருந்தான்.

''ஏன் ரகு? வந்துவிட்டுத் திருடனைப்போலத் திரும்பிச் செல்கின்றீர்கள்?''

''நான் திருடனாகி விடக்கூடாது என்பதால்தான் பானு.''

''ஓ...'' என்று அப்பொழுதுதான், தன் நிலைதான் அவன் செயலுக்குக் காரணமென்பதை உணர்ந்துகொண்டவளாய், ''நான் இதோ உடை மாற்றிக்கொண்டு வந்து விடுகிறேன்'' என்று அறைக்குள் சென்றாள்.

சில நிமிடங்களிலேயே அவள் திரும்பிவிட்டாள். ரகு ஓர் கதிரையில் உட்கார்ந்து விழிகளை மூடிக்கொண்டிருந்தான்.

''என்ன அப்படிக் கண்களை மூடிக்கொண்டே இருக்கின்றீர்கள்?'' என்று அவன் கன்னத்தில் செல்லமாகத் தட்டினாள்.

''உடை மாற்றிவிட்டாயல்லவா? நீ இருந்த நிலையை கண்ணுக்குள் மூடிவைத்து ரசித்துக்கொண்டிருக்கிறேன்'' என்றான் சிரித்தபடியே.

''அப்படியே இருந்திருப்பேனே. நீங்கள்தான் பயந்து ஓடினீர்களே!''

''பானு!''

''ரகு! நான் உங்களுடையவள், உங்கள் சொத்து. எப்படியிருந்தாலும் உங்களடியில்தானே?''

''பானு! என்ன இருந்தாலும் உன் அழகின் கவர்ச்சி என் அறிவையே கெடுத்துவிடலாம். தவிர நம்மிடையே தடையெதுவும் இல்லை. ஆகவே, நாமே எமக்குத் தற்காப்புச் செய்துகொள்ளவேண்டும். அதுமட்டுமல்ல பானு, அழகை ரசிக்கலாமே தவிர அசிங்கப்படுத்தக்கூடாது'' என்றான்.

''என்னிடம் மட்டும்தான் இப்படிப் பேசுவீர்களா? அல்லது எல்லோரிடமும் இப்படித்தான் பேசுவீர்களா?''

''பானு! உன்னிடம் பேசுவதுபோலவும், நடப்பது போலவும்தான் நான் எங்கும் இருப்பேன் என்று நினைத்து விட்டாயா?'' என்று அவன் கூறிக்கொண்டிருக்கும் பொழுது பானு தன் ஆள்காட்டி விரலால் அவன் கன்னத்திலும், காதிலும் கோலம் வரைந்துகொண்டிருந்தாள்.

''ஏய் பானு! கூச்சம் காட்டுறியா?'' என்று அவள் விரலைப் பற்றினான்.

''நான் என் மனதுக்குக் கட்டுப்பாடு போட்டாலும் இந்த விரல் உங்களைத் தீண்ட ஆசைப்பட்டுத் துடிக்கின்றதே ரகு.''

''இதுதானே?'' என்று அந்த விரலை வருடிவிட்டான்.

''ஆமாம்!''

''இதற்கு நான் ஒரு பரிசு கொடுக்கவா?''

''கொடுங்களேன்'' என்று அவள் கூறி முடிக்குமுன் அவளுடைய அந்த விரலைத் தன் இதழ்களில் பொருத்தி 'இச்' என முத்தம் கொடுத்தான்.

''ரகு!''

''என்ன பானு?''

''இந்த விரல் பாக்கியம் செய்ததுதான்'' என்றாள்.

## அத்தியாயம் இருபத்தொன்பது

கொழும்பு மெயில் வண்டியில் இரண்டாம் வகுப்பில் பிரயாணம் செய்துகொண்டிருந்தான் ரகுராமன். அவனுடைய சீற்றுக்கு எதிர்ப்புறம் காலியாகவே இருந்தது. வண்டி கொடிகாமத்திலிருந்து புறப்படும் பொழுது ஒரு நாகரீக யுவதி அந்தச் சீற்றுக்கு வந்து சேர்ந்தாள். பல நாட்கள் பழகியவள் போன்று ரகுராமனைப் பார்த்துப் புன்முறுவல் பூத்தவளாய், ''எனக்குத் தெரியும் நீங்கள் இன்று இந்த வண்டியிலே பிரயாணம் செய்வீர்களென்று'' என்றாள்.

திகைப்படைந்த ரகுராமன், அவளை நன்கு உற்று நோக்கினான். எங்கேயோ பார்த்த முகம். ஆனாலும் நினைவுக்கு வரவில்லை. பதிலுக்கு அவளைப் பார்த்துச் சிரித்தவனாய், ''என்னை நீங்கள் தெரிந்துகொண்டிருக்கிறீர்கள். ஆனால்...'' என்றான்.

அவள் கொண்டுவந்த பிரயாணப் பையை வைத்துவிட்டு அவனுக்கு எதிரில் அமர்ந்திருந்தாள். இருபத்தினன்கு வயது மதிக்கத்தக்க உருவம். அழகியாயில்லையெனினும் கவர்ச்சிகரமான முகமும், சுறுசுறுப்புடையவளுமாகத் தோற்றமளித்தாள்.

''நான் 'அப்துல்லா அன் கோ'வில்தான் வேலை செய்கின்றேன். என்னை நீங்கள் பார்த்திருக்க முடியாது. ஆனால், உங்களைப்பற்றிய சகல விடயமும் எனக்குத் தெரியும். என் பெயர் மிஸ் ரதிதேவி.''

''அப்படியா? நீங்கள் எந்த 'பிரூஞ்சில்' வேலை செய்கிறீர்கள்?''

''ஆபீஸில் இல்லை. அப்துல்லாவின் வீட்டில். அங்கே நீங்கள் இரண்டு தடவைகள் வந்திருக்கின்றீர்கள். உங்களை நான் பார்த்திருக்கிறேன்.''

''ஆச்சரியமாயிருக்கே. நீங்கள் எங்கே...?''

''நான் உடல் நலமில்லையென லீவு கேட்டிருக்கின்றேன். உண்மையில் என் உடலுக்கு ஒன்றுமில்லை. ஆனால் உங்களைப் பார்க்குமுன் உங்களைப்பற்றி அறிந்தளவில் நீங்கள் ஓர் முதலாம் நம்பர் அயோக்கியன் என்றுதான் நினைத்திருந்தேன்'' என்று அவள் கூறிய பொழுது, புன்முறுவல் தவழ அவளையே பார்த்துக்கொண்டிருந்தான் ரகுராமன்.

''நான் கூறுவது உங்களுக்கு வேதனையைத் தரலாம் இல்லையா மிஸ்டர் ரகு?''

''இல்லை. நீங்கள் கூறுவதைக் கூறலாம் மிஸ்!''

''ஆனால், நேரில் உங்களைப் பார்த்ததும் அப்படிப்பட்ட எந்தவிதமான அம்சங்களும் உங்களிடம் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை.''

''ஆளைப் பார்த்து எடைபோடுவது தவறாகவும் இருக்கலாம் இல்லையா?''

''இருக்கலாம். ஆனால் நீங்கள் அப்படிப்பட்டவரல்ல என்பதற்கு ஒரு சாட்சியும் கிடைத்தது.''

''என்ன சாட்சி?''

"நாகலிங்கம் வீட்டில் நீங்கள் மிஸ் பானுமதி என்ற பெண்ணைக் காப்பாற்றிய விடயம்."

"ஓ... அதுவா? அது எப்படி உங்களுக்குத் தெரிய வந்தது?"

"ரோஸியிடம் நாகலிங்கம் போனில் பேசியபொழுது கேட்டேன்."

"ம்! அப்புறம்" என்று அலட்சியமாக ஜன்னலினூடே வெளியே பார்த்துக் கொண்டிருந்தான் ரகு.

"மிஸ்டர் ரகு! நான் உங்களை நம்பித்தான் இந்த முடிவுக்கு வந்தேன். என்னை நீங்கள் காப்பாற்றுவதானாலும் காப்பாற்றலாம். இல்லையெனில் காட்டிக் கொடுப்பதானாலும் கொடுக்கலாம். ஆனால் நான் ஒரு அனாதை. என்னை இந்த வேலையிலிருந்து விடுவித்து எனக்கு வாழ்வளியுங்கள்" என்று அவன் கரங்களைப் பற்றினாள்.

அவள் 'கூறுவது உண்மையா? அல்லது நடிப்பா? என்று புரியாமல் திணறினான் ரகுராமன். ரகுராமனைப்பற்றி அவள் நிறையத் தெரிந்து வைத்திருக்கின்றாள். ஆகவே அவன் எப்படிப்பட்டவனாயிருக்கலாம் என்று பரீட்சிக்க அப்துல்லாவே ஏன் அவளை அனுப்பியிருக்க முடியாது? ரகு, அவளுடைய உண்மை நிலையை ஆராய முயன்று கொண்டிருந்தான். அதே வேளையில் அவள் விம்மி விம்மி அழுதாள். அவளைப் பார்க்கவே பரிதாபமாக இருந்தது.

"மிஸ்டர் ரகு! என்னை நீங்கள் சந்தேகிக்கின்றீர்களென நான் நினைக்கிறேன். உண்மைதான். இப்படித்தான் சில அப்பாவிகளை நான் ஏமாற்றியிருக்கிறேன். அதற்குத் தண்டனையாகத்தான் இந்த நரகத்தில் கிடந்து உழலுகின்றேன். தொடர்ந்து என்னால் அங்கே இருக்கவும் முடியாது. விலகவும் முடியாது" என்று கதறினாள்.

"ஏன் நீங்கள் விலக முடியாது?" என்று சாதாரணமாகவே கேட்டான் ரகுராமன்.

''ரகு! உண்மையிலேயே உங்களுக்குத் தெரியாமல் தான் கேட்கிறீர்களா? அல்லது என்னையே ஆழம் காண முயற்சிக்கிறீர்களா?''

''நிச்சயமாகத்தான் கேட்கிறேன். ஏன் உங்களால் விலகமுடியாது?''

''நான் விலகினல் என்மீது கொலைக் குற்றம் சுமத்தி விடுவார்கள். அப்புறம் ஜெயிலில் தள்ளுவதற்கான சகல முயற்சியையும் மேற்கொள்ளுவார்கள்.''

''கொலையா? நீங்கள் கொலை செய்தீர்களா?''

''இல்லை! இல்லை! ஆனுல் நானே அந்தக் கொலையைச் செய்தேன் என அவர்களால் நிரூபிக்க முடியும். அந்தக் கொலை...'' என்று கூறிவிட்டு விக்கலெடுத்து அழ ஆரம் பித்துவிட்டாள்.

ரகுராமனுடைய நினைவில் இன்ஸ்பெக்டர் இமானு வேல் கூறிய விடயங்கள் சுழன்றுகொண்டிருந்தன. இப் படி ஒரு சூழ்நிலை தனக்கு எதிராகவும் இடம்பெறக்கூடும். தானும் அவர்களுக்கு மாருக நடந்துகொண்டால் அப்படி ஒரு வம்பில் மாட்டிக்கொள்ள நேரிடுமென்று எண்ணிய பொழுது அவனுக்குச் சிரிப்புத்தான் வந்தது.

''மிஸ்டர் ரகு! நீங்கள் சிரிக்கின்றீர்களா?''

''இல்லை மிஸ் ரதிதேவி. உங்கள்மீது இப்படி ஒரு குற்றச்சாட்டை சுமத்தக் காரணம் நீங்கள் வேலையைவிட்டு விலக முயன்றது தானு?''

''அப்படித்தான். அதுவும் தவிர, அவர்களுடைய இரகசியங்கள் எனக்கு தெரியும். ஆகவே நான் வில கினல்...'' என்று மேலும் பல விடயங்களைக் கூறிக் கொண்டே வந்தாள்.

ரதிதேவி கூறிய கதைகளைக் கேட்டபொழுது விடுபட முடியாத சிக்கல்களோடு, அந்தப் பெண் ஆப்பிழுத்த குரங்கு போல அவதிப்படுவதாகவே அவன் உணர்ந்தான்.

''மிஸ் ரதிதேவி நீங்கள் கவலைப்படுவதில் அர்த்தமே இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. கைநிறைய சம்பளம் சுகஜீவனம், இவை போதாதா?'' என்றான்.

''மனம் நிறைந்த வாழ்வு எனக்கு இல்லையே மிஸ்டர் ரகு!''

''நான் இது விடயமாக ரோஸியுடன் கதைத்து ஒரு முடிவுக்கு வருகிறேன். அதுவரை நீங்கள் பொறுமையுடன் இருப்பதே நல்லது. ஆனால் எனக்கு உங்கள் ஒத்துழைப்பு இருக்குமல்லவா?''

''மிஸ்டர் ரகு என்னை நம்புங்கள்'' என்று கூறிவிட்டு, 'காப்பி' என்றாள்.

''தாங்கியூ'' என்று அவள் கையிலிருந்த கோப்பையை வாங்கிப் பருகினான்,

''மிஸ் ரதிதேவி! நான் கூறுகிறபடி ஒரு லெட்டர் எழுதி என்னிடம் தரவேண்டும். அதை வைத்துக்கொண்டு உங்கள் விடுதலைக்கு முயற்சி எடுக்கிறேன்'' என்றான்.

''மிஸ்டர் ரகு, நீங்கள் எது செய்யச் சொன்னாலும் செய்கிறேன். இந்த நரகத்திலிருந்து எனக்கு விடுதலை வாங்கித் தரவேண்டும்.''

''ஆல் ரைட் மிஸ். அது சரி உங்களைக் கொலைக் கேசில் சம்பந்தப்படுத்தி இருப்பதாகக் கூறினீர்களே, அது எந்தக் கொலை?''

''அது... அது... என் காதலன் ராமச்சந்திரனின் கொலை'' என்று கூறும்பொழுது அவள் மிகவும் நொந்து போயிருந்தாள்.

''மிஸ்டர் ராமச்சந்திரன் ஒரு கடத்தல்காரர்தானே?''

''ஆமாம் பத்திரிகைகளில் பார்த்திருக்கின்றீர்கள் போலிருக்கே. அவர் பம்பாய் சேட் ஒருவரிடமிருந்து கடத்திய வைரத்தை கம்பனிக்கு கொடுக்க மறுத்தார். அதைக் காரணமாகக் கொண்டு கொலை நடந்தது.''

''அந்தக் கொலைக்கும் உங்களுக்கும்...?''

''என்னை தன் அறைக்கு வரும்படி ராமச்சந்திரன் போன் செய்தார், நான் அப்போது அப்துல்லா வீட்டில் இருந்தேன். ரோஸியிடம் அனுமதி பெற்றுக் கொண்டே புறப்பட்டேன். அங்கே நான் சென்ற சமயம் அவர் பிணமாகக் கிடந்தார். அவருக்கருகில் ஒரு துப்பாக்கி இருந்தது. அதை நான் எடுத்தபொழுது ரோஸி என் பின்னால் வந்திருக்கின்றாள். என்னைப் பார்த்துவிட்டு, ''அடிபாவி! நீயா கொலை செய்தாய்?'' என்று கூறிஎன்னை இழுத்துக் கொண்டு சென்றுவிட்டாள். ஆனால் நான் ஒன்றுமறியேன். அன்று தொடக்கம்...'' என்று விக்கலெடுக்க ஆரம்பித்து விட்டாள் ரதிதேவி.

''விதி விளையாடிவிட்டது. சந்தர்ப்பம் உங்களைக் கொலைகாரியாக்கிவிட்டது, பரவாயில்லை. ரோஸி நல்லவளாகவே தென்படுகின்றார். முயன்று பார்க்கின்றேன்'' என்றான்.

''மீண்டும்...''

''என்னைப் பார்க்க விரும்பினால் என் வீட்டுக்கே வரலாம் இல்லையெனில் போன் செய்யலாம்'' என்று கூறிவிட்டு, பாக்கட்டிலிருந்து பேனையை எடுத்து ஒரு துண்டுக் கடிதத்தில் போன் நம்பரை குறித்துக் கொடுத்தான்.

## அத்தியாயம் முப்பது

மறுநாட் காலை பத்து மணியளவில் கொழும்பிலுள்ள 'சைனீஸ் ஹோட்டலில்' ஓர் அறையில்' அகத்தா-கிறிஸ்டியன் மர்ம நாவல் ஒன்றை படித்துக் கொண்டிருந்த ரகுமான் கதவு தட்டப்படும் ஓசை கேட்டு எழுந்தான். பின்னர் கட்டிலில் இருந்தான். இரண்டு நிமிடங்களின் பின்னர் 'ஜேஸ் கம் இன்' என்றான்.

'குட்மோனிங்' என்று கூறியவாறே இரண்டு வெளி நாட்டவர்கள் அறைக்குள் நுழைந்தார்கள்.

''குட்மோனிங், குட்மோனிங்' என்று இருவரையும் வரவேற்று உட்காரச் செய்தான் ரகுராமன்.

உள்ளே வரும் பொழுதே அவர்கள் கதவை மூடிவிட்டு வந்ததால் அவனுக்கு கதவுமூடும் சிரமம் இருக்கவில்லை, அந்த இருவரும் அப்துல்லா காட்டிய போட்டோக்களுக் குரிய அசல் உருவங்கள் என்பதை நிச்சயம் செய்துகொண் டதும். பேச்சு வார்த்தையை ஆரம்பித்தான் ரகுராமன். அடுத்த சில விநாடிகளில் அந்த ஓட்டலில் பெரும் அமளி துமளி ஏற்பட்டது. மாடிப்படிகளில் பலர் ஏறி ஓடிவரும் ஒலிகள். அதைத் தொடர்ந்து திடீரென அவர்கள் இருந்த அறைக் கதவு திறந்து கொண்டது. நீட்டிய துப்பாக்கி களுடன் பொலிசாரும் ஒரு இன்ஸ்பெக்டரும் நின்றிருந்த னர். அவர்களைப் பார்த்த மாத்திரமே ரகுராமன் காக்காய் வலிப்புக் கண்டவன் போல துடிதுடித்து நிலத்தில் விழுந் தான். பொலிசார் செய்ய வேண்டிய முறைப்படி வெளி நாட்டவரிருவரும் கைது செய்யப்பட்டனர். ரகுராமனைப் பொலிசார் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றனர்.

இரண்டு மூன்று மணித்தியாலங்களுக்கிடையில் இச் செய்தி அப்துல்லாவுக்கு 'சைனிஸ் ஓட்டல்' சொந்தக்காரரினால் அறிவிக்கப்பட்டது. செய்தி கேட்டதும் அப்துல்லாவே அதிர்ச்சி அடைந்தார். ரோஸி திடுக்கிட்டாள். ரகுராமன் என்ன ஆனான் என்று அறிய இருவருமே துடித்தனர். ஆனால் முடியவில்லை,

காலையில் அப்துல்லாவின் பங்களாவில் ரோஸி நுழைந்த பொழுது அவளை எதிர்பார்த்தவாறே நின்றிருந்தார் அப் துல்லா, அவர் புன்சிரிப்புடன், ''மிஸ் ரோஸி, ரகு கெட் டிக்காரன், ஹொஸ்பிட்டலிலிருந்து தப்பிஓடிவிட்டானாம். சில நிமிடங்களுக்கு முன்புதான் 'டிரங்கோல்' கிடைத்தது'' என்றார்.

''ரகு மிகவும் சாமர்த்தியசாலி. நாம் குறிப்பிட்ட படியே அவனைப் பற்றியோ, எமது கம்பனி பற்றியோ எது வித குறிப்பும் அவனிடம் கிடையாது. பொலிஸிற்கும் கிடையாது'' என்று கூறிச் சிரித்தாள்.

அவர்கள் உரையாடலைக் கேட்டுக் கொண்டிருந்த மூன் றாவது நபரைப் பற்றி அவர்கள் கவனிக்கவில்லை. அந்த நபர் இருந்தது அவர்களுக்குத் தெரிந்தாலும் அவர்களுக்கு அதுபற்றி அக்கறை இருக்கவில்லை.

மறுநாட் காலையே ரகு அங்கே வந்துவிட்டான். அவன் கூறுவதைக் கேட்டு அப்துல்லாவே அதிர்ச்சி அடைந்தார்.

''நீங்கள் கூறுவதை என்னால் நம்ப முடியவில்லை மிஸ் டர் ரகுராமன்'' என்றார் அப்துல்லா.

''நீங்கள் நம்பாமல் இருக்கலாம். ஆனால், பொலிஸார் சொல்லி வைத்த மாதிரி எமது அறையை வந்தடைந்தார் களென்றால் அதற்குக் காரணம் இருக்க வேண்டும்.''

''மிஸ்டர் ரகு! நட்டம் நட்டமேதான். பரவாயில்லை. நீங்கள் இரண்டு வாரமோ, ஒரு வாரமோ இந்தப் பக்கம்

வராமலிருந்தால் நல்லது. ஏனெனில் அந்தப் பிரான்சுக் காரர்கள் ஏதாவது கூறி வைத்தால், பொலீசார் இங்கே விசாரணைக்கு வரலாம். அந்த வேளையில் உங்களை இங்கே பார்த்தால்...''

''ஆமாம் அதுவும் நல்ல யோசனைதான். மிஸ் ரோஸியை நான் சந்திக்கலாமா?''

''யேஸ், யேஸ்'' என்று கூறிவிட்டு மேசையிலிருந்த ஒரு பட்டனை அழுத்தி, ''ரோஸி, மிஸ்டர் ரகு உன்னைச் சந்திக்க விரும்புகின்றார்'' என்று கூறிவிட்டு, ''சரி நீர் போகலாம் என்றார். ரகுராமன் ரோஸியின் அறையை நோக்கிச் சென்றான்.

''குட் மோனிங் ரோஸி'' என்று கூறிக்கொண்டே ஒரு கதிரையில் அமர்ந்தான்.

''எப்படி சௌக்கியமா? உடம்புக்கு என்ன? திடீரெனப் பொலீசைக் கண்டதும் மயங்கிவிட்டீர்களாமே?''

''அடடே இதெல்லாம் யார் சொன்னது? அது என்னுடைய ஸ்ரண்டு. அது சரி ரோஸி, எனக்கு உன் மீதே சந்தேகம்'' என்றான்.

''என்ன? என் மீதே சந்தேகமா?'' என்று ஆச்சரியப் பட்டாள் ரோஸி.

''யேஸ், யேஸ். ஏனென்றால் நான் இந்த விடயமாகச் சென்றது உன்னையும், பொஸ்சையும் தவிர வேறு யாருக்குமே தெரியாதல்லவா?''

''ரகு! நீ...''

''பொலிசிற்கு 'மெசேஜ்' கொடுத்து என்னைக் காட்டிக் கொடுக்க நீ ஏன் முனைந்திருக்கக் கூடாது? இப்படி நான் கேட்டால் உனக்கு ஆத்திரம் வரும். அப்படித்தானே?'' என்று கூறி விட்டுச் சிரித்தான்.

அதே வேளையில் அவளுடைய மேசையில் 'கிர், கிர்' என்று ஒருவித ஒலி எழுந்தது. அதைத்தொடர்ந்து, ''வெரி குட், மிஸ்டர் ரகு. ஆனால், ரோஸி அப்படிச் செய்ய மாட்டாள்'' என்று அப்துல்லாவின் குரல் ஒலித்தது.

''தாங்கியூ பொஸ். வேடிக்கையாகத்தான் கேட்டேன் என்று கூறிய ரகுராமன், ''பயந்துவிட்டாயா ரோஸி?'' என்று கூறிவிட்டு அவளைப் பார்த்துச் சிரித்தான்.

''ரகு! நீ வேடிக்கையானவன் மட்டுமல்ல, மிகவும் ஆபத்தானவனும் கூடத்தான்'' என்றாள்.

''ரோஸி! இந்தப் பங்களாவில் பொஸ்சும், நீயும் வேலைக்காரர்களும்தான் இருக்கின்றீர்களா?''

''இல்லையே மிஸ் ரதிதேவி என்றொரு பெண்ணும் இங்கேதான் வேலை செய்கிறாள்.''

''அவளுடைய அறையிலும் இப்படிக் கருவி பூட்டப் பட்டிருக்கின்றதா?''

''இல்லையே! ஏன் அப்படிக் கேட்கின்றாய்?''

''எனக்கு எல்லாவற்றிலுமே சந்தேகமாயிருக்கு ரோஸி. அந்தப் பெண்......''

''அவள் அப்படிச் செய்யமாட்டாள். அவள் ஒரு அப் பாவி. தவிர அவள்...''

''அவள் என்ன கிழவியா?''

''இல்லை ரகு! நீ நன்கு பயந்துபோய் இருக்கின்றாய்.''

''ரோஸி! எனக்கு இரண்டு வார லீவு கொடுக்கப்பட் டிருக்கின்றது. அதற்கிடையில் எப்படியும் பொலிசிற்கு செய்தி கொடுத்த நபரைக் கண்டு பிடித்துவிட வேண்டும். இல்லையெனில் தொடர்ந்து நான் வேலை செய்ய முடியாத

நிலை ஏற்படும். நான் பொலிசிற்குப் பயந்து வாழ முடியாது ரோஸி.''

''ரகு! நீ பயப்படாதே. இது வெறி சிம்பிள் கேஸ்' ரதிதேவியை நீ பார்த்தால் சந்தேகிக்க மாட்டாய். அவளை அழைக்கவா?''

''வேண்டாம், இங்கே வேண்டாம். ஏதாவது காரணம் காட்டி அவளை என்னிடம் வீட்டிற்கு அனுப்பிவை...''

''ரகு...'' என்று பொருள் பொதிந்த பார்வையுடன் புன்சிரிப்பொன்றை உதிர்த்தவாறே ''எட்லின் அறிந்தால் கோபப்படுவாள்'' என்றாள்-

''எட்லினுக்கு நான் துரோகம் செய்யமாட்டேன் ரோஸி. ஆனால், எனக்குத் துரோகம் நினைப்பவர்களையும் விட்டு வைக்க மாட்டேன்'' என்று கூறிவிட்டு விடைபெற்றுச் சென்றான்.

அவன் வெளியே சென்றதும், ஒரு அலுமாரியின் பின் அதுவரை மறைந்து நின்ற எட்லின், ''எனக்கு இவன்மீதே சந்தேகமாயிருக்கு ரோஸி. டைமன்களைக்கடத்துவதற்காக இவனே இப்படி ஒரு நாடகத்தை ஆடி பொலிசிற்கும் எங்களுக்கும் ஏமாற்றுக்காட்ட முனைந்திருக்கலாம் அல்லவா?'' என்றாள்.

எட்லின் கூறியதைக் கேட்டதும் ரோஸியும் சிந்திக்கலானாள். அவள் முகத்தில் சிந்தனையின் குழப்பம் மலிந்திருப்பதை உணர்ந்தார் அப்துல்லா.

''என்னால் நம்ப முடியவில்லை எட்லின். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் பொஸ்?'' என்றாள் ரோஸி.

''அதிக நம்பிக்கையே சில சமயம் நம்பிக்கை வைப்பவனையே வேரோடு வீழ்த்திவிடக்கூடும். எதற்கும் தீர அறிந்துவிடுவதுதான் நல்லது'' என்றார்.

ரோஸியும், எட்லினும் விடைபெற்றுப் புறப்பட்ட பொழுது மாலை நான்கு மணியாகிவிட்டது. அவர்கள்தான் காரில் இருந்தார்களே தவிர, அவர்களுடைய மனம் ஒரு நிலையில் இருக்கவில்லை.

''என்ன இருந்தாலும் அவளை ரகுராமனிடம் பழக விட்டது உன் தப்புத்தான்.'' என்றாள் எட்லின்.

''எட்லின் என்னை என்னவென்று நினைத்தாய்? நீ கூறுவது மட்டும் உண்மையாக இருந்தால்......'' என்று கூறிவிட்டு தன்பாட்டிற்கே தலையாட்டிக்கொண்டாள்.

ரதிதேவியின் வீடு அவர்கள் எதிர்பார்த்தபடி பூட்டப்பட்டுக் கிடந்தது. ரகுராமன் வீட்டில் இல்லை. அப்படியானால் எட்லின் கூறுவதிலும் உண்மை இருக்கத்தான் வேண்டும். அவளை வேலையிலிருந்து நீக்க வேண்டுமென ரகு ஒரு வாரமாகப் பிடிவாதம் பிடித்தவன், பின்னர் ஏன் அவளுடன் சேர்ந்து திரிய வேண்டும்? சில சமயம் அவன்...

''எட்லின்! ரகுராமன்தான் பெண்பித்து பிடித்தவனாயிற்றே! அந்தக் காரணத்தால் ரதியை அழைத்துக்கொண்டு அப்படித் திரியலாமல்லவா?'' என்றாள் ரோஸி.

''இங்கேதான் நீ தவறு செய்கின்றாய். ரகு சாமானியமானவனில்லை. அவளிடமிருந்து இரகசியங்களை அறிந்துகொண்டு எங்களையே மிரட்டிக் காரியம் சாதிக்கக் கூடியவன். என்னைக் காதலிப்பதாகக் கூறி என்னிடமிருந்தே விடயங்களை அறிய முயன்றான். ஆனால் நான்...''

''அது சரி எட்லின்! அவன் அப்படித் தெரிந்து கொள்வதால் எமக்கு என்ன?''

''அவன் எங்களை கைப்பொம்மையாக்கி, நாகலிங்கத்திடம் பணம் கறந்தது போல் கறக்க முனைவான் ரோஸி.''

''சரி சரி'' என்று கூறிவிட்டு ஆழ்ந்த சிந்தனையில் மௌனமானாள்.

## அத்தியாயம் முப்பத்தியொன்று

இரண்டு வாரங்களாக ரதிதேவியுடன் தான் அலைந்து திரிந்தான் ரகுராமன். அடிக்கடி அவள் அவனைத் தேடி வருவதும், இரவு நெடு நேரம் வரையில் ரகுராமனின் அறையிலேயே தங்குவதும் கதவைக்கூடப் பூட்டிக் கொண்டு இருவரும் தனித்திருப்பதும் அன்னபூரணி அம்மாளுக்கே அருவருப்பாக இருந்தது. பானுமதிக்கோ சொல்லவேண்டியதில்லை. பகலில் அவள் கல்லூரிக்குச் சென்றுவிடுவதுண்டு. காலையில் சில நிமிடங்கள் மட்டுமே அவளுடன் உரையாடுவான். அதுவும் முன்போலில்லை என்று தான் பானு உணர்ந்தாள். ரதி தேவியைப் பற்றியோ, அவளுடன் சேர்ந்து திரிவதைப் பற்றியோ அவளும் எதுவும் கேட்பதில்லை. அவனும் கூறுவதில்லை.

பானுவினுடைய உள்ளம் அவன் செய்கைக்காக அடிக்கடி கலங்கும். ஆனல், அவன் அதை உணர்ந்தால்தானே?

என்னிடம் இல்லாத எதை மற்றப் பெண்களிடம் அவன் காண விழைகின்முனே? என்னிடம் பெரிய மனிதத் தனமாக நடந்து கொள்ளும் அவன், மற்றப் பெண்களிடம் இப்படி ஏன் நடந்து கொள்கிருன். மனிதத் தன்மைக்கு உயர்ந்த மனிதனுக்கு அத்தாட்சியாக ஒரு கணம் காட்சியளிப்பவன், மறுகணம் மனிதப்புழுவாகத் தோன்றுவதேன்? இதைப் பற்றி மேலும் அவனிடம் பேசவே அவள் விரும்பவில்லை. அப்படி விரும்பாததற்கு காரணங்களும்

இருந்தன. அவனுடன் பேசினால் அந்தப் பேச்சே கடைசிப் பேச்சாக முடிந்து விடுமோ என அஞ்சினாள் பானு. அவன் இஷ்டப்படியெல்லாம் அவள் நடக்கத் தயாராகத்தான் இருந்தாள். அவன்...?

அன்று மாலை கல்லூரியால் பானு வந்து கொண்டிருக்கும் பொழுது, ரதிதேவியுடன் வெளியே புறப்பட்டுக் கொண்டிருந்தான் ரகுராமன். பானுவைக் கண்டவுடன் அவன் சிரிக்க முயன்றான். ஆனால், பானு அதைப் பாராதவள் போன்று அலட்சியமாகச் சென்று விட்டாள். தன் முன்னிலையில் வேறு ஒருத்தியுடன் செல்வதைப் பெருமையாக அவன் நினைக்கிறானா? அவனைப் பொறுத்தவரையில் அது பெருமையாக இருக்கலாம். ஆனால், தன்னையே நம்பி இருக்கும் ஒருத்தியின் மனதைக் கசக்கிப் பிழிகின்றோமே என்று அவன் நினைக்கவில்லையே! பெண்களின் ஒவ்வொரு அசைவிலும் ஆண்கள் அசைந்து தம் மனதை அலட்டிக் கொள்வார்கள் என்று கவிஞர்கள், கதாசிரியர்கள் எல்லாம் புளுகுவார்களே! இவனோ ஒவ்வொரு பெண்ணின்மனத்தையும் கலக்கி, எருமை குளித்த குட்டைபோலாக்கிவிட்டுச் சிரித்து விளையாடுகின்றானே. அது பற்றிக் கவலைப்படுபவனாகவும் தெரியவில்லையே! எனக்கு மட்டும் யோக்கியமானவனாக நடந்து கொள்வது, தன்னையே நான் விரும்பி விரும்பி ஏங்கிச் சாக வேண்டும் என்பதற்காகவா?

இரவு ஒன்பது மணியளவில் ஓர் வாடகைக் காரில் வந்து இறங்கினர் இருவரும். அந்த வாடகை வண்டி ரோட்டில் நின்று கொண்டிருந்தது. அவர்கள் இருவரும் உள் வீட்டிற்கும் ரோட்டிற்கும் இடையேயுள்ள நடைபாதையில் நின்று கொண்டிருந்ததைப் பானு பார்த்தாள். அவர்கள் இருவரும்என்னதான்கதைக்கின்றார்கள் என்று அறியவிரும்பியது அவள் மனம். ஒட்டுக் கேட்பது தவறு என்று தெரியும். ஆனாலும் மனித மனம் தவறுஎன்று தெரிந்து கொண்ட பின்பும் பல தவறுகளைச் செய்கின்றதுதானே! எனவே,

தன்னுடையவனுகப் போகிறவன் அந்தப் பெண்ணிடம் என்ன கூறுகின்ருன் என அறிய அவள் ஆவல் கொண்டது தவறு என்றும் கூற முடியாது. சில வேளை அப்படிக் கேட்பதன் மூலமே அவள் சந்தேகம் நீங்கவும் கூடுமல்லவா?

அவர்கள் நின்ற இடத்திற்குச் சமீபமாக அவள் வரவில்லை. பக்கத்திலிருந்த வளர்ந்த குரோட்டன் செடிகளுக்கு அருகே நின்றுவிட்டாள். அவர்கள் அங்கே கதைப்பது அவளுக்கு நன்கு தெளிவாகக் கேட்டது.

''மிஸ் ரதி! நீ நினைப்பது போல் பயப்படவேண்டிய அவசியம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. உனது ராஜிளுமாக் கடிதத்தைப் பதிவுத் தபாலில் அனுப்பிவை. ஏதாவது நடந்தால் உடனே எனக்கு அறிவித்து விடு, உன் வீட்டில் போன் இருக்கிறதுதானே.''

''இருக்கின்றது.''

''என்னிடம் ஏதாவது கூறிஞயா என்ருல் கிடையாது என்று கூறிவிடு. நான் மிகுதியை ரோஸியுடன் பேசிக் கொள்கிறேன்'' என்ருன்.

''ரகு! உங்களுக்கு...''

''எனக்காக நீ பயப்படவேண்டாம். நீ என்னிடம் எதுவும் சொல்லியிருப்பாய் என அறிந்தால் உனக்குத்தான் ஆபத்து'' என்ருன்.

ரோட்டில் அப்பொழுது ஒருலொறி இரைந்துகொண்டு சென்றதால் அவளுக்கு அவர்கள் உரையாடலில் பெரும் பகுதியும் கேட்கவில்லை. ''உனக்குத்தான் ஆபத்து'' என்று ரகு கூறியது மட்டுமே கேட்டது. அவள் டாக்ஸியை நோக்கிச் சென்ருள். ரகுவும் வீடு நோக்கிச் சென்று கொண்டிருந்தான்.

இரண்டு நாட்களுக்குப் பின் ரோஸிக்குப் போன் செய்தான் ரகுராமன். அவள்தான் போனை எடுத்திருந்தாள்.

''ஹலோ ரோஸி! ரதிதேவி சம்பந்தமாக நான் உன்னிடம் கூறியது ஞாபகமிருக்கா?''

''யேஸ், யேஸ். மிஸ்டர் ரகு! நீ அவள் விடயத்தில் எச்சரிக்கையாயிருப்பது நல்லது. அவள் ஒரு கொலைகாரி. பணத்துக்காகவே ராமச்சந்திரனைக் கொலை செய்தவள். எங்கள் கம்பெனி பற்றி இல்லாத பொல்லாத கதைகளை அவனிடம் கூறி பொலிசில் முறையிடச் சொல்லியிருக்கின்றாள். விபரம் எங்களுக்குத் தெரிந்த பொழுது அவனைக் கொலை செய்து விட்டாள். அவளோடு நீ நெருங்கிப் பழகுவதாக அறிகிறேன்... உனக்கும்...''

''ராமச்சந்திரனின் கதி நேராதிருக்க வேண்டும். அப்படித்தானே நீ நினைக்கின்றாய் ரோஸி.''

''யேஸ். யேஸ்.''

''ரோஸி! அவளிடம் ஒரு 'அக்கிரிமென்ட்' எழுதிவாங்கிக்கொண்டு அவள் விருப்பப்படி நடந்து கொண்டால் என்ன?''

''அதுவும் சரிதான் ரகு. ஆனால் அவள் சம்பந்தப்பட்ட விடயத்துக்கு நீ பொறுப்பேற்கத் தயாராக இருக்கின்றாயா ரகு?'?

''நானா? சரி ரோஸி.''

''உனக்கு ஏதாவது பயன்கிடைச்சுதா?'' என்றுகேட்டுவிட்டு ரோஸி சிரிப்பது கேட்டது.

''ரோஸி! சிரிக்கிறாயா?''

''எட்லின் கூட இங்கே இருக்கிறாள். அவள் உன்னிடம் பேசவிரும்புகின்றாள்'' என்று கூறிவிட்டு போனை அவளிடம் கொடுத்தாள்.

''ஹலோ ரகு! எப்படி?'' எட்லின் குரல்.

'எட்லின் டியர்! உன் குரலைக் கேட்கும் பொழுது எனக்கு...''

"ஏன் ரகு! ரதிதேவி எப்படி?"

"ஷீ இஸ் வெறி புவர். பட்..."

"ரகு! டு யு லவ் மீ?"

"ஏன் இந்தச் சந்தேகம்."

"டூ யு லவ் மீ? கமோன்! ரெல் மீ. ரகு."

"யேஸ், யேஸ்."

"அப்படியானால் ரதி? இடையில் ஏற்பட்ட தாகமா?"

"எட்லின்! நீ என்னைத் தவறாகப் புரிந்துவிட்டாய். பரவாயில்லை. விரைவில் நீ புரிந்து கொள்வாய்" என்று கூறிவிட்டு போனை வைத்து விட்டான்.

அன்று மாலையே ரதிதேவியிடம் விபரம் கூறி அவளை வீட்டுக்கு அனுப்பி வைத்தான். அவனுக்கு அவளைப் பற்றிய விடயத்தில் மன நிம்மதி ஏற்பட்டிருந்தது. நடந்து முடிந்தவைகளை அன்றிரவு பானுவுக்குச் சொல்லவேண்டுமென்றிருந்தான். ஆனால், பானுவுக்கு அன்று கல்லூரியில் பரிசளிப்பு விழா இருந்ததினால், அவள் இரவு பத்து மணியாகியும் வீட்டுக்கு வரவில்லை. திடீரெனப் போன் மணி ஒலித்தது. ஓடிச் சென்று போனை எடுத்தான் ரகுராமன். பானுதான் போன் செய்தாள்.

"பானு நீயா? உன்னிடம் மிக முக்கியமான விடயம் கதைக்கவென்று இருந்தேன். நீ எனக்குக் கூட சொல்லவில்லையே பானு" என்றான்.

"நான் சொல்லத்தான் நினைத்தேன்! முயன்றேன். நீங்கள் அப்படி ஒரு நிலையில் இல்லாத போது எப்படிக் கூறுவது?"

"பானு! நீ மீண்டும் பழைய பானுவாகத்தான் இருக்கின்றாய் போலிருக்கே!"

"நீங்கள்... வேண்டாம் ரகு. நான் இரவு வர நேரமாகும். இரண்டுமணியளவில் தான் வருவேன். வெளிக்கேற்

றைப் பூட்டாது விட்டால் நல்லது'' என்று கூறிவிட்டு போனை வைத்துவிட்டாள்.

ரகுராமனுக்கு அதிர்ச்சி தாளவில்லை. அவளோடு பெரும் சச்சரவு ஒன்று மீண்டும் ஏற்படப்போகின்றது என்பதை உணர்ந்தான். அதேவேளையில் மீண்டும் போன் மணி ஒலித்தது.

''ஹலோ! ரூ நோட் திறீ. ரகு ஸ்பீக்கிங்.''

''ரகு! எனக்குப் பயமாயிருக்கு ரகு. தயவுசெய்து என் வீட்டுக்கு வந்து போங்கள்.'' ரதிதேவிதான் அழைத்தாள்.

''இந்த நேரத்திலா?''

''ரகு! பிளீஸ் என்னைக் காப்பாற்றுங்கள்'' என்று அவள் கெஞ்சுவது அவன் மனதை உருக்கியது, அடுத்த நிமிடமே அவன், தம்பி சிவராமனின் பைசிக்கிளை எடுத்துக்கொண்டு விரைந்தான்.

அவன் மனதில் பல்வேறுசிந்தனைகள். ஒரு மணி நேரத்தின் பின் அவள் வீட்டை அடைந்தான். அவள் வீட்டில் மின்விளக்கு எரிந்து கொண்டிருந்தது. கதவும் திறக்கப் பட்டே இருந்தது. அவளை அழைத்தவாறே உள்ளே சென்றவன் படுக்கையறையில் அவள் மீளாத் துயிலில் ஆழ்ந்து விட்டிருப்பதைக் கண்டு திகைத்தபடியே நின்றான்.

எதையும் எதிர்பாராத இடத்தில் சந்தித்து விட்டால் மனித மனம் சில சமயத்தில் தடுமாற்றமடைந்து விடுகின்றது. ரதிதேவி சுட்டுக் கொலை செய்யப்பட்டுக் கிடந்த நிலையை ரகு பார்த்ததும் திகைத்துப் போய்விட்டான். அவளுக்கு அப்படியொரு சாவு நேருமென்று அவன் எதிர்பார்கவுமில்லை. அதைவிட அதிர்ச்சியான சம்பவம் அந்தச் சந்தர்ப்பத்தில் ரோஸி அங்கு வந்தாள். அவள் வந்ததும் வராததுமாக ''ரகு!'' என்று வீறிட்டுக் கத்தி அவனைப்

பேதலிக்கச் செய்துவிட்டாள். அந்தக் காட்சி மீண்டும் ரகுவின் மனதில் நிழற்படம்போல் விரிந்தது.

''ரோஸி! நீயா? நீ ஏன் இங்கே வந்தாய்?'' என்றான்.

''தனக்கு ஏதோ ஆபத்து என்று ரதி அழைத்தாள்.''

''என்னையும் அப்படித்தான் அழைத்தாள்'' என்றான் நிதானமாக.

''ரகு என்னிடமே கதை அளக்கின்றாயா?''

''ரோஸி! நீ என்ன கூறுகின்றாய்?''

''நீதான் இவளைக் கொலை செய்திருக்க வேண்டும். அதோ ரிவால்வர் கூட இருக்கே.''

''என்னைக் கொலைகாரன் என்று தீர்ப்புக்கட்டி விட்டாயா?''

''ஆமாம் பொலிசிற்குப் போன் செய்துவிடுகின்றேன். உண்மை, பொய்யை அவர்களே அறிந்து கொள்ளட்டும்'' என்று தொலைபேசியை எடுத்தாள். அவள் கரத்தைப் பற்றிக் கொண்டான் ரகுராமன்.

''ரோஸி! நீ துணிந்து விட்டாய் இல்லையா? சரி, போன் செய். நீயே இவளைக் கொலை செய்தாய் என்று நான் நிரூபித்து விடுகின்றேன்.''

மிஸ்டர் ரகு! கோபமா? எங்களுக்கிடையில் தகராறு எதற்கு, நமக்கிடையில் ஒரு ஒப்பந்தம் செய்து கொள்வோம் என்றாள்.

''என்னவென்று?''

''இது பற்றி இருவருக்குமே தெரியாதது போலப் போய்விடுவோம்.''

''ஆல்ரைட்.''

''ஆனால் ரிவால்வர்?''

''அதுபற்றிக் கவலையில்லை. புறப்படு'' என்றுகூறிவிட்டு இருவருமே புறப்பட்டனர். அவனுடைய பைசிக்கிளையும்

காரில் ஏற்றிக்கொண்டுவந்து அவன் வீட்டு வாசலில் இறக்கிவிட்டாள் ரோஸி. அதே சமயம் பானுவும் தன் தோழிகளுடன் வந்து இறங்கினுள். அவள் வருவதற்கு முன்பே ரகு வீட்டிற்குள் சென்றுவிட்டானுயினும் அவனை யும், அவனை இறக்கிவிட்டுச் சென்ற காரில் இருந்தவளையும் பானு கவனிக்கத் தவறவில்லை.

## அத்தியாயம் முப்பத்திரண்டு

இரவு நேரம் சென்று தூங்கியதினுல் பானு எழுந் திருக்கும் பொழுது எட்டு மணிக்கு மேலாகிவிட்டது. காலைக் கடன்களை முடித்துக்கொண்டு தேநீருக்காக வந்த சமயத்தில் வாசலில் பொலிஸ் நின்றுகொண்டிருப்பதைக் கவனித்தாள். அவசரமாக உள்ளே நுழைந்தவள் முன் கூடத்தில் ரகுராமனைப் பொலிசார் விசாரணை செய்வதைக் கண்டு திகைத்து நின்ருள். ரகுவிடம் எப்பொழுதாவது வரும் இன்ஸ்பெக்டராயிருக்கும் என்றுதான் அவள் முத லில் நினைத்தாள். ஆனுல், அவள் எதிர்பாராத ஒரு விசா ரணை அங்கே நடந்துகொண்டிருந்தது.

''மிஸ்டர் ரகுராமன்! உங்களுக்கும் அந்தப் பெண்ணுக் கும் நட்பு இருந்தது என்பதை ஒப்புக்கொள்ளும்பொழுது அவள் பற்றிய மர்மங்களை நீங்கள் ஏன் மறுக்கவேண்டும்?'' என்ருர் பொலிஸ் சார்ஜன்.

''நான் எதையும் மறுக்கவில்லை. அவளோடு எனக்கு நட்பு இருக்கக்கூடாது என்று சட்டம் எதுவும் இல்லையே. அதற்காக அவள் கொலைக்கும் எனக்கும் சம்பந்தம் உண் டென நீங்கள் கருதுகின்றீர்களா?''

''மிஸ்டர் ரகு! உங்களைக் கொலைகாரர் என்று நாங்கள் நினைக்கவில்லை. அந்தக் கொலை பற்றிய மர்மம் தெரிவதற்கு உதவும்படிதான் கேட்கின்றோம்.''

''கேளுங்கள். தாராளமாகக் கேளுங்கள். எனக்குத் தெரிந்த எதையும் நான் மறைக்கவில்லை.''

''நேற்றிரவு நீங்கள் எங்கே இருந்தீர்கள்? அதாவது கொலை நடந்த இரவு.''

''வீட்டில்தான் இருந்தேன்.''

''வெளியே எங்கும் செல்லவில்லையா?''

''இல்லை!''

''கடைசியாக மிஸ் ரதிதேவியை எப்போது, அதாவது எத்தனை மணிக்குச் சந்தித்தீர்கள்?''

''நாலு மணி இருக்கலாம். அதன்பின்பு நான் பார்க்கவில்லை!''

''ஆல்ரைட். எங்கள் அனுமதியின்றி இந்தக் கேஸ் சம்பந்தமான விசாரணை முடியும்வரைக்கும் நீங்கள் வெளியூருக்குப் போகப்படாது. ஏனெனில், அடிக்கடி உங்களுக்குத் தொந்தரவு கொடுக்க நேரிடும். மன்னிக்கவேண்டும்'' என்று கூறிவிட்டுப் புறப்பட்டார்.

''ஏன்டா ரகு! என்னடா இதெல்லாம்? கொலையென்று வந்து உன்னை விசாரிக்கின்றார்களே?'' என்று ஒப்பாரி வைக்க ஆரம்பித்தாள் அன்னபூரணி அம்மாள்.

''அம்மா! என்னுடன் இங்கு வந்து திரிந்தாளே ஒரு பெண். அவளை நேற்றிரவு யாரோ கொலைசெய்துவிட்டார்களாம்.''

''அதுக்கு ஏன்டா உன்னை... நீயும் இதில் சேர்ந்தவனென்று?''

''தெரிந்தவர்களை விசாரிக்கின்றார்கள்.''

''அடேய்! முன்புதான் நீ வீணுளாய்த் திரிந்தாய். அழகும், குணமும் நிறைந்த ஒரு பெண்ணை உனக்கு என்று நிச்சயம் செய்த பிறகு ஏன்டா புத்திகெட்டலைகின்ருய்? டேய் ரகு! கொலைக் கேஸ் சம்பந்தமாக பொலிஸ் வருமள வுக்கு எங்கள் குடும்பத்தைக் கெடுத்திட்டியேடா'' என்று மீண்டும் ஒப்பாரி வைக்கலானுள்.

''அம்மா! நான் கெட்டுப்போனுலும் உங்கள் குடும்ப மானத்தைக் கெடுத்திடமாட்டேன்!''

''இனி என்னடா கெடுக்கவேணும்? டேய்! எங்களைத் தான் கெடுத்தாய். அந்தப் பெண்ணையும் வாழாவெட்டி யாக்கிவிடாதே.''

''அம்மா! பேசாமலிருங்கம்மா. நான் சொல்வதை உங்களால் நம்பமுடியாது. வேண்டாம் நிறுத்துங்கள்'' என்று கூறிவிட்டுத் திரும்ப முயன்ருன்.

''மிஸ்டர் ரகு!'' என்ருள் பானுமதி.

''என்ன? பொலிஸ், அம்மா விசாரணைகள் முடிந்தது. இனி நீங்களா?'' என்ருன்.

''ரகு! என்னிடம் ஒரு ஐந்து நிமிடம் வரமுடியுமா?''

''ஐந்து நிமிடமா? என் வாழ்நாள் முழுவதுமே உன் ஞடன்தானே வரப்போகிறேன். ஏன் நீங்கள் ஐந்து நிமி டம் என்று... சரி, நடவுங்கள் வாறேன்'' என்று கூறிவிட்டு அறைக்குள் சென்ருன்.

பானு தன் வீட்டுக்கு ஓடிச் சென்ருள். பூசை மாடத் தில் வைக்கப்பட்டிருந்த முருகனும், கண்ணனும் அவளைப் பார்த்துச் சிரிப்பதுபோன்ற உணர்வேற்பட்டது.

''கடவுளே! நான் யாருக்கு என்ன தீங்கு செய்தேன்? என்னை ஏன் வருத்துகின்ருய்? ரகுவைச் சந்தித்து, அவ

னிடம் என் மனதைப் பறிகொடுத்து, இப்பொழுது கதறிக் கண்ணீர் வடிக்கின்றேனே? உன் விழிகள் மூடிக்கொண்டு விட்டனவா? கண்ணு! உன்னை நினைத்தே அவனை நினைத் தேன். போதும்! நான் பட்டதெல்லாம் போதும்! எனக் குள்ள மனவுறுதியைக் கெடுத்துவிடாதே. இன்றே இரண் டில் ஒன்று முடிவுகட்டிவிடுகிறேன்'' என்று அவள் நினைத் துக்கொண்டபொழுது, 'பானு' என்ற ரகுராமனின் குரல் கேட்டது. அந்தக் குரல் பொய் சொல்லுமா? அவளால் நம்பவே முடியவில்லை. ''ஆண்டவனே! அவர் முன் என் உள்ளத்தில் பலவீனத்தைத் தோற்றுவித்துவிடாதே!'' என்று வேண்டிக்கொண்டு, அவனிருந்த இடத்திற்குச் சென்றாள். ஆனால், அவளால் எதுவுமே பேசமுடியவில்லை' பேச்சுக்குப் பதில் கண்ணீர்தான் வழிந்தோடியது.

''பானு! என்ன இது? இப்ப என்ன நடந்தது? ஏன் அழுகின்றாய்?'' என்றான்.

''நான் அழவில்லை ரகு. நீங்கள் அழவைக்கின்றீர்கள். உங்கள் வாக்கை நம்பி, எதுவும் உங்களிடம் கேட்கப் படாது என்று தான் இதுநாள்வரை பேசாமலிருந்தேன். ஆனால்,இப்போ என்னைக் கேட்கவும் வைத்துவிட்டீர்களே'' என்றாள்.

''பானு! உண்மை விரைந்து செல்வதில்லை. அது சில சமயம் ஊமையாகிவிடுகின்றது. அதற்காக அது அடங்கிச் செத்துவிடுவதில்லை.''

''தத்துவம் பேசுகின்றீர்களா? நீங்கள் பொய் கூறு கின்றீர்கள். அப்புறம் உண்மையைப் பற்றிப் பேச உங்க ளுக்கு எப்படி நா வருகின்றது?''

''பானு! நீ...''

''நான் உங்களுடையவள் என்ற உரிமையுடன்தான் கேட்கின்றேன். பொலிசாரிடம் பொய் கூறியதுபோதும்.

உங்களுக்கும், அந்தப் பெண் கொலைக்கும் தொடர்பு இல்லையா?''

''பானு! நீ என்னை கொலைகாரன் என்றே கூறுவாய் போலிருக்கே.''

''கொலைகாரன் என்றே கூறுவேன். நேற்றிரவு ரோஸி யும், நீங்களும் காரில் வந்ததை நான் பார்த்தேன். அது மட்டுமல்ல ரகு, அந்தப் பெண்ணிடம், ''உனக்கு ஆபத்து வரும்'' என்று அன்று மிரட்டி அனுப்பினீர்கள். ஏன் இது எல்லாம்? அந்தப் பெண்ணை நீங்கள் கொலை செய்யவில்லை யானாலும் அதில் உங்களுக்கும் தொடர்பு உண்டு. சொல் லுங்கள் ரகு. நான் உங்களைக் காட்டிக்கொடுக்கமாட் டேன். உண்மையை அறியவே கேட்கிறேன்'' என்றாள். அவள் முகத்தில் நிலவிய உணர்ச்சிகளைக் கண்டு ரகுராமன் ஒருகணம் அயர்ந்துபோனான்.

''பானு! வெண்ணெய் திரளும்பொழுது தாழியை உடைத்துவிடு என்று நீ கேட்கின்றாய். நான் கொலை செய் திருப்பேன்—அல்லது அதற்கு உடந்தையாக இருந்திருப் பேன் என்று நீ நம்பிவிட்ட பின்பு, நான் எதைச் சொன்னாலும் நீ நம்பப்போவதில்லை. நான் பொலிசா ரிடம் கூறியது பொய். வேண்டுமென்றே அப்படிச்சொன் னேன். அதுமட்டுமல்ல, அன்று அந்தப் பெண்ணிடம் நான் கூறிய ஒரேயொரு வார்த்தையை மட்டுமே நீ கேட் டிருக்கின்றாய். பரவாயில்லை. அதற்கெல்லாம் விரைவில் முடிவு தெரிந்துவிடும். அதுவரை நீ பொறுமையோடு இரு. எனக்குள்ள குழப்பத்தில் நீயும் என்னைக் குழப்பிவிடாதே பானு'' என்றான்.

''பானு! பானு!! என்று தேனொழுக அழைக்கின் றீர்களே! இந்தப் பானுவிடம் இல்லாத எதை அந்த ரதி தேவியிடம் கண்டுவிட்டு அவள் பின்னே சுற்றினீர்கள்? அறையில் இருவரும் பூட்டிக்கொண்டு மணிக்கணக்கில்

இருந்தீர்களே! அப்பொழுது உங்கள் வீட்டிலேயே உங்களுக்காக ஒருத்தி இருக்கிருளென்பதை மறந்துதானே போயிருந்தீர்கள்?''

''பானு! நீ நினைப்பது தவறு. நான் கெட்ட எண்ணத்துடன் நடந்துகொண்டால் அல்லவா அப்படியெல்லாம் நினைத்திருப்பேன்.''

''அப்படி நீங்கள் கூறுவதை நான் நம்பவேண்டுமென எதிர்பார்க்கின்றீர்கள். சரி, நீங்கள் அப்படி நடந்துகொண்டது ஏன் என்ருவது எனக்கு இப்பொழுது கூறலாமல்லவா?''

''பானு! நீ... நீ... கேட்பதில் உண்மையிருக்கின்றதாயினும் தயவு செய்து என்னிடம் எதுவும் இப்போ கேட்காதே. நான் மிகவும் குழம்பிப்போயிருக்கின்றேன். பிளீஸ் பானு! நான் உன்னைத் தவிர வேறு யாரையும் விரும்பியதில்லை. என்னை நம்பு'' என்று அவள் கரங்களைப் பற்றினுன்.

''ரகு! என் கையை விடுங்கள். நீங்கள் எதுவும் கூற விரும்பாவிட்டால் சரி போகலாம். மீண்டும் பானுவைப் பற்றி நினைக்காமலே போங்கள்'' என்ருள்.

''பானு! நீ நினைக்கும் எவையும் உண்மையில்லைபானு. சத்தியமாகச் சொல்லுகிறேன். என்னைப் பெற்ற தாய் மீது ஆணையாகச் சொல்லுகிறேன். நான் நிரபராதி. என்னை நம்பு. பின்னர் எல்லாம் தெரியவரும்'' என்ருன்.

''நம்பி நம்பி நான் மோசமடைந்ததுபோதும். செய்வதையும் செய்துவிட்டு, பெற்றதாயின்மீதே ஆணையிட்டு ஒரு பெண்ணை ஏமாற்ற நினைக்கிறீர்கள். நீங்கள் நினைத்தது—நினைப்பது எல்லாம் நானறிவேன். இவ்வளவு ஒரு கேவலமானவராக இருப்பீர்களென்று நான் நினைக்கவில்லை ரகு!''

''பானு! வார்த்தைகளைக் கொட்டுவது சுலபம். நாவினுல் சுட்ட வடு ஆருது என்றும் படித்திருப்பாய். பின்னர் துயரப்படுவாய். என்ஞல் எதையும் இப்போது கூற முடியாது. ஆனுல், நீ என்னை நம்பமாட்டாயா?''

''நம்பமுடியாது ரகு! நம்பமுடியாது! எனக்கு உடனேயே உண்மைகள் தெரியவேணும்.''

''அவ்வளவுதானு? பானு! உன் காலைப்பிடித்துவேண்டுமானுலும் கெஞ்சிக் கேட்கின்றேன். ஒரு மாதம் அவகாசம் கொடு. என்னை நம்பு பானு.''

''ஒரு பெண்ணின் காலைப் பிடிக்க உங்களுக்கு வெட்கமாயில்லை? போங்கள் வெளியே'' என்று கையை நீட்டி, ஆட்காட்டி விரலைக் கதவுக்கு நேரே காட்டினுள். ரகு அதிர்ந்துபோய் நின்றிருந்தான்.

உலகமே இருண்டுவிட்டது போன்ற உணர்வே தோன்றியது ரகுராமனுக்கு. தன்னை நோக்கி நீட்டிய அந்த ஆட்காட்டி விரலையும், அதைச் சேர்ந்து நின்ற கையையும், அந்தக் கைக்கு உரியவளான பானுமதியையும் பார்த்தான். அவனுடைய கலங்காத விழிகள் கூடக் கலங்கிவிட்டன. பேசுவதற்குக்கூட நா எழவில்லை. இந்த உலகில் எதை இழந்தாலும் அவள் அன்பை இழந்துவிடக் கூடாதென்றே தோன்றியது அவனுக்கு. மறு நிமிடம் அவன் இதயத்தில் ஏதோ ஓர் உணர்வு; விழிகளில் ஒரு புத்துணர்ச்சி! முகத்தில் பழைய மந்தகாசம்.

''பானு! நீ ஒரு முடிவுக்கு வந்துவிட்டாய் என்றே நான் கருதுகிறேன். ஆனுல், அவசரப்பட்டு அந்த முடிவை உறுதி செய்துகொள்ளாதே!'' என்ருன்.

''இது முன்னர் போல தடுமாற்றத்தினுல் ஏற்பட்ட முடிவல்ல. திடமான முடிவுதான்'' என்ருள் பானுமதி.

''பானு! இந்த அழகான விரல், என்னைத் தீண்டி விளையாட விரும்பிய விரல், நான் முத்தமிட்டு மகிழ்ந்த

விரல் என்னை வெளியே போ என்று வழிகாட்டுகின்றது. அதேவேளையில் நீ செய்வது தவறு என மற்றும் விரல்கள் உன்னையே பார்த்துக்கொண்டிருக்கின்றன. பானு! நான் எதை இழந்தாலும் உன் அன்பை இழக்கமுடியாது பானு!''

''அப்படி எண்ணம் உங்களுக்கு உண்மையிலேயே இருந்தால் நான் கேட்டவற்றுக்குப் பதில் கூறுங்கள்.''

''என்னைப் பொய் சொல்லும்படி கேட்கின்ருயா?''

''உங்களுக்குப் பொய்யே பேச வராது. அப்படித் தானே?''

''பானு! நீ நினைக்கிறது, பேசுறது அத்தனையும் தவறு. இதற்காகப் பின்பு வருந்துவாய்.''

''இப்ப மட்டும் என்னவாம். தயவுசெய்து போங்கள். என்னை நிம்மதியுடன் வாழவிடுங்கள்.''

''பானு! என்னுல் உன்னை வெறுக்கமுடியாது. உன்னை இழக்கவும் முடியாது. என்னை ஏமாற்றிவிடாதே பானு!'' அவன் விழிகள் நீர்மல்கி நின்றன.

''சீ! உங்களுக்கு வெட்கமாயில்லை? நீங்கள் உங்கள் திட்டத்தை நிறைவேற்றுமுன் நான் விழித்துக்கொண்டு விட்டேன் என்று பொருமுகின்றீர்கள். ரகு! உங்களுக்கு இந்த உடலை அடைய முடியவில்லையே என்ற ஏமாற்றம் இல்லையா? கெட்டவள் நான் கெட்டுப்போகின்றேன். உங்கள் இஷ்டப்படி செய்யுங்கள் ரகு!'' என்று அவனுக்கு முன்னுல் உராய்ந்துகொண்டு நின்ருள்.

அந்த வேளையில் அவனிடம் என்ன பேசுகிருேம், என்ன செய்கிருேம் என்ற உணர்வின்றி அவள் ஒரு சீறும் புலியாகவே நின்றிருந்தாள்.

''பானு! நீ...?''

"நீங்கள் செய்த நன்றிக்குப் பிரதியுபகாரமாக உங்களுக்கு என் உடலையே..." என்று அவள் கூறி முடிக்கு முன்பு 'பளீர்' என அவள் கன்னத்தில் பட்டுத் திரும்பியது அவன் கரம்.

பானுமதி நிலைகுலைந்துபோனாள். அவளுடைய பூவுடல் நடுங்கிக்கொண்டிருந்தது,

"பானு! நீ என்னை ஒரு மிருகமென்று நினைத்துவிட்டாய். உன் அழகைப் பார்த்தோ, உன் அந்தஸ்தைப் பார்த்தோ உன்னை நான் விரும்பவில்லை. உடல் உணர்ச்சிகளுக்கு நான் அடிமைப்பட்டவன் என்று நீ நினைத்தாய்? விளக்கில் வந்துவிழும் விட்டில்கள்போல்எத்தனையோ அழகிகள் என்னை அடைய முயன்றும் முடியாமல் என்மீது பழி சுமத்தியபோதும், என்னை உணர்ந்து ஏற்க முன்வந்த உன் நல்ல உள்ளத்தையே நான் விரும்பினேன். உன் அழகையும், உடலையும் நான் விரும்பியிருந்தால் இத்தனை நாளுக்குள்ளும் அடைந்திருப்பேன். பானு! காதல் என்பது உடல் உறவுக்கு மட்டும் உரியதல்ல. திருமணம் செய்பவர்களே உடலை விரும்பித்தான் உள்ளத்தை நாடுகின்றனர். என் உறவுக்கு முதலிடம் உள்ளம்தான். நீ என் இதயத்தில் ஏற்றிய காதல் தீபம் எரிந்துகொண்டிருக்கும் பொழுதே கதவுகளை மூடிவிட்டாய். ஆனால், பானு நீ ஒரு நாளைக்காவது உண்மையை உணர்வாய். அப்பொழுது என்னைத்தேடி ஓடி வருவாய். என்னை இரு கைநீட்டி வரவேற்க நீ வருவாய். அப்பொழுது என்னை 'வெளியே போ' என்ற கரம் எப்படி நீளும் என்று பார்ப்போம். என்னால் விரைவில் அன்பு செலுத்தவோ, விரைவில் வெறுக்கவோ முடியாது. நீ என் மீது அடிக்கடி சந்தேகப்பட்டாய்—வெறுத்தாய்—கண்ணீர்விட்டாய். அது உன் பேதமை. ஆனால், நான் விடும் இந்தக் கண்ணீருக்கு நீ பதில் சொல்லியே தீரவேண்டும்."

''பானு! என்னால் உன்னை வெறுக்கமுடியாது. ஆனால், உன் அழகிய இந்த உடலையும், உன்னையுமே மறந்துவிடுகின்றேன். இவ்வளவு நாளும் நான் அன்பு வைத்திருந்த என் பானு என்னுள்ளேயே இருக்கின்றாள். நான் வருகின்றேன்'' என்று கூறிவிட்டுத் திரும்பியவன், ''மிஸ் பானுமதி! என்னால் நீங்கள் இந்த இடத்தைக் காலிபண்ணவேண்டாம்; இந்த விவகாரத்தை என் தாய்க்கும், கணவன் வீடு சென்றுள்ள தங்கை பாரதிக்கும் சொல்லவேண்டாம். அதுவும் உங்கள் விருப்பம். மிஸ் பானுமதி! என் காதல் காலை மலர்ந்து மாலை வாடிவிடும்மலர்போலாகிவிட்டது. ஆனால், என் உயிருள்ளவரை இந்த இடைக்காலத்தில் வீசிய நறுமணமே இனித்து நிற்கப் போதுமானது. ரகு சாதாரண ஒரு மனிதப்பிறவிதான். ஆனால், அவன் இலட்சியம் இமயத்தைப் போன்றது. அது என்றைக்கும் நத்தை வயிற்று முத்தாக இருந்துவிடாது. ஒரு நாளைக்கு முத்தாரத்தில் ஜொலிக்கத்தான் போகின்றது'' என்று கூறிவிட்டுப் புறப்பட்டான்.

## அத்தியாயம் முப்பத்துமூன்று

அன்று மாலை வீட்டைவிட்டுப் புறப்பட்டவன் இரண்டு நாட்களாகியும் வீட்டுக்குத் திரும்பவில்லை. யார் யாரோ எல்லாம் தொலைபேசியில் விசாரித்தார்கள். பொலிசார் தேடிவந்தார்கள். அவன் எங்கே என்ற விடயம் யாருக்குமே தெரியவில்லை. அன்னபூரணி அம்மாள் அடிக்கடி புலம்பிக் கொண்டிருந்தாள். பானுமதி உள்ளுக்குள் புலம்பினாலும், வெளியில் எதுவும் தோற்றமல் திரிந்தாள்.

ரகுராமன் கடைசியில் கூறிச் சென்றவை அவள் இதயத்தையே ஈடாடச் செய்துவிட்டதாயினும் அவளால் எதுவும் பேசமுடியவில்லை. கன்னத்தில் அவன் அடித்த அடியில் அவள் கதிகலங்கிப் போயிருந்தாள்.

அவன் எவ்வளவு கெட்டவனுய் இருந்தாலும் பொறுமைசாலி. அந்தப் பொறுமையே பொங்கிவிட்டதென்றுல் அவனுடைய தன்மானத்தின்மீது, தான் நடாத்திய தாக்குதல்தான் காரணம் என்பதை அவள் சந்தேகமின்றிப் புரிந்துகொண்டு விட்டாள். அதைவிட அன்று காலையில் அவளுடைய கல்லூரி முகவரிக்கு வந்த கடிதமே அவளை மேலும் நிலைகுலையச் செய்தது. அந்தக் கடிதத்தை மீண்டும் ஒருமுறை படித்துப்பார்த்தாள் பானு.

செல்வி பானுமதி அவர்களுக்கு,

தங்கள் நிம்மதியைக் கெடுத்துவிட்ட அயோக்கியனின் கடிதத்தை நீங்கள் பார்க்காமல் போட்டாலும் போட்டுவிடலாம். அன்று நான் மனிதனுகவே இருந்தேன். பெண்களைக் கைநீட்டி அடிக்கக்கூடாது என்ற என் கொள்கையிலிருந்தும் என்னை விலகச் செய்துவிட்டது தாங்கள்தான். எந்தப் பெண்மை பிறனிடம் பறிபோகவிருந்ததோ அதே பெண்மையை என்னிடம் கேவலமான முறையில் நீங்கள் தரமுனைந்ததே என்னை அந்நிலைக்காளாக்கியது. நான் வீட்டுக்கு வர இரண்டு நாட்களாவது செல்லும். அதற்கிடையில் என் இதயம் வெடித்துச் செத்துவிட்டாலும் நான் செய்த தவறுக்கு மன்னிப்புக் கேட்கவே இதை எழுதுகின்றேன். தவறு என்று நான் செய்தது ஒன்று உண்டென்றுல் அது உங்களைக் கைநீட்டி அடித்ததே. தயவு செய்து என்னை மன்னிப்பீர்களென்று நம்புகின்றேன்.

இங்ஙனம்

ரகுராமன்,

அவனுடைய எழுத்தில் மனிதத்தனத்தின் உயர்ந்த நிலை பிரதிபலித்தது. அது உண்மையில் அவன் மனம் வருந்தி எழுதிய கடிதம் என்பதை உணர்ந்தாளாயினும் அவள் மனதில் மாற்றம் எதுவும் இருக்கவில்லை.

'அப்துல்லா அன் கோ'வைப் பொலிசார் முற்றுகை யிட்டிருந்தனர். அப்துல்லாவின் மாளிகையும்பொலிசாரால் முற்றுகையிடப்பட்டிருந்தது. ஒரே நேரத்தில் 'அப்துல்லா அன் கோ'வுக்குச் சொந்தமான சகல ஸ்தாபனங்களும், கிளைகளும், பங்குக்காரர்களும் பொலிசாரின் வலையில் வீழ்ந்திருந்தனர். அந்த நிருவாகத்தில் வேலை செய்தவர்கள் அனைவரும் கைதுசெய்யப்பட்டனராயினும், ரகுராமனும், எட்லினும் மட்டும் தப்பிச் சென்றுவிட்டனர்.

அன்று காலையில் ரகுராமன் வீட்டுக்கு வந்துவிட்டான் என்றறிந்ததும் பானுமதியின் மனதில் சந்தோஷம் நிலவி யது. ஆனாலும் அவனை மீண்டும் அந்த ஸ்தானத்தில் வைத் துப் பார்க்க அவள் விரும்பவில்லை. 'அப்துல்லா அன் கோ' பொலிசாரால் முற்றுகையிடப்பட்ட விபரம் வெளியில் பலருக்குத் தெரியாமலே நடைபெற்றதாகும். ஆனாலும் சிவராமன் அறிந்திருந்தான். அண்ணன் ராஜாராமனே அவனுக்குப் போன் செய்திருந்தார். அவரும் சிலமணி நேரத்தில் வீடுவந்து சேர்ந்திருந்தார். தம்பி வீட்டிலிருந்த தும் மௌனமாகவே இருந்துவிட்டார்.

ரகுராமனை நேருக்கு நேர் இரண்டு மூன்று முறை சந் தித்த பொழுதும் பானுமதி அவனுடன் எதுவும் கதைக்க வில்லை. அவனும் அவளுடன் கதைக்கவில்லை. மாலை மூன்று மணியளவில் எட்லின் ரகுராமனைத் தேடி இரகசியமாக வந்திருந்தாள். அவள் வருவதைத் தூரத்திலிருந்தே அவ தானித்தாள் பானு. ஆனால், அவள் அந்த வீட்டிற்குள் நுழைந்ததையோ ரகுராமனின் அறைக்குள் சென்ற தையோ யாரும் காணவில்லை.

''குட்மோனிங் மிஸ்டர் ரகுராமன்'' என்ருள் உள்ளே நுழைந்த எட்லின்.

''எட்லின்!ஏது இந்தப் பக்கம்? எப்படியிருக்கின்ருய்? என்ருன்.

''ரகு! நீ எதுவுமே தெரியாதவன் போல் நடிக்கின்ருயே!''

''என்ன எட்லின்?''

''உண்மையிலேயே உனக்கு ஒன்றும் தெரியாதா?''

''வீட்டைவிட்டு வெளியில் போனுல் அல்லவா எதுவும் அறிந்துகொள்வதற்கு.ஏன்?''

''அப்துல்லா அன் கோவைப் பொலிசார் கைப்பற்றி விட்டனர்!''

''நம்பமுடியாது. நீ, நான் எல்லோருமே இருக்கின்ருேமே'' என்ருன்.

''மிஸ்டர் ரகுராமன்! நீ புத்திசாலிதான். ஆனுல், நான் இன்று அங்கு போகாததினுல் தப்பிக்கொண்டேன். நீயே பொலிசிற்குத் தகவல் கொடுத்திருக்கவேண்டும்.''

''ஏன்?என்ன தகவல்?''

''ரகு!என்னைப் பார்!'' என்று அவள் கூறியபொழுது அவளுடைய கையில் நவீன துப்பாக்கி ஒன்று பளபளத்தது.

''எட்லின்!உனக்கு என்ன பைத்தியமா?''

''பைத்தியம்தான். கோடிக் கணக்கான பங்கீட்டுப் பணம் போய்விட்டது.நான் பைத்தியம் பிடித்த நிலையில் தான் இருக்கின்றேன். ரகு! நீ விளையாடாதே! உன்னைக் கொல்லாமல் நான் விடமாட்டேன். நீ யார்? ஏன் இந்த வேலை செய்தாய்?நம்பி நடந்தவர்களுக்கு ஏன் துரோகம் செய்தாய்?''

அவள் சீறும் புலியென நின்றிருந்தாள்.

''நீ விளையாடாதே எட்லின்!ஐ லவ் யூ எட்லின்.''

''சட் அப் ராஸ்கல்!நீ ஒரு துரோகி.''

''நானா துரோகி?எட்லின் மீண்டும் அப்படிச் சொல்லாதே'' என்றான்.

''ரகு!நீ எல்லோரையும் ஏமாற்றலாம். ஆனால், இந்த எட்லினை ஏமாற்றமுடியாது.ரகு,நான் உன் அழகில் மயங்கியது என்னவோ உண்மைதான். ஆனால், நீ...நீ... ஒரு முதலாம் நம்பர் அயோக்கியன்.உன்னை நாய் சுடுவதுபோன்று சுட்டுத் தள்ள வேண்டும்'' என்று அவள் கூறிமுடிக்குமுன்பே 'டுமீல்' என்ற சப்தமும், 'ஐயோ' என்ற அலறலும் அந்த வீட்டையே கதிகலங்கச் செய்தது.

## அத்தியாயம் முப்பத்துநான்கு

இருந்தாற்போல் வீட்டுக்குள் — அதுவும் ரகுராமனுடைய அறையில் வெடிச் சப்தம் கேட்டதும் எல்லோரும் அங்கே ஓடிவந்து குழுமிவிட்டனர். பானுவும் வேகமாக வந்து அறை வாசலில் நின்றிருந்தாள். அதேவேளையில் ரகுராமன் எட்லினுடைய இரு கரங்களையும் இழுத்துப் பின்னால் வளைத்துப் பிடித்தபடி நின்றிருந்தான்.

''பார்த்துக்கொண்டு நிற்கிறீர்களே?என்னைக் கெடுக்க முயன்றான்.நான் துப்பாக்கியால் சுட்டுவிட்டேன். என்னைக் காப்பாற்றுங்கள்'' என்று கதறினாள் எட்லின்.

''அடி பாவி! நீ எப்படிப்பட்டவள் என்பது இவர்களுக்கா புரியப்போகின்றது?'' என்று ரகுகூறி விட்டு,

பாக்கட்டிலிருந்த கைக்குட்டையை எடுத்து அவளுடைய இரு கைகளையும் ஒன்றாகப் பிணைத்தான்.

''டேய் ரகு! இது என்னடா அக்கிரமம்?'' என்றாள் அன்னபூரணி அம்மாள்.

''மிஸ்டர் ரகு! அவளை விடுங்கள்'' என்றாள் பானுமதி. சிவராமனும் ராஜாராமனும் மட்டும் எதுவும் பேசாமல் நின்றிருந்தனர்.

''மிஸ்டர் ரகு! அவளை விட்டுவிடுங்கள். இல்லையெனில்...'' என்றாள் பானுமதி.

''பானுமதி! இது என் விடயம். நீங்கள் இவளுக்குப் பாவம் பார்க்கவேண்டிய அவசியம் இல்லை'' என்றான் ஆத்திரத்துடன்.

''ஊரார் வீட்டுப் பெண்ணை உங்கள் வீட்டில் வைத்து, இப்படிச் செய்வது உங்கள் சொந்த விடயமா?'' என்றாள்.

''என் விடயம் பற்றிக் கேட்க நீ யார்? பிளீஸ் கெட் அவுட்'' என்றவன், தன் கையில் இரத்தம் கசிந்துகொண்டிருந்த இடத்தில் ஒரு கைக்குட்டையால் சுற்றிக் கட்டினான்.

''அண்ணா! நீங்கள் மௌனமாக நிற்கின்றீர்களே? நீங்களும் ஏதும் சொல்வதுதானே'' என்றான் அலட்சியமாக.

''ரகு! நான் அவசரப்படவில்லையப்பா. என்ன நடந்தது? இவள் ஏன் உன்னைச் சுட்டாள்?'' என்றார்.

''அண்ணா! அப்துல்லாவின் தில்லுமுல்லுகள் பொலிசிற்குத் தெரிந்து, 'அப்துல்லா அன் கோ'வையே பொலிசார் கைப்பற்றியிருக்கின்றார்கள். அந்தப் புதரிலிருந்து தப்பியோடிய நச்சுப் பாம்பு இது. நான்தான் பொலிசிற்கு உளவு சொன்னேன் என்று என்னைச் சுடுவதாக மிரட்டினாள். நான் திடீரெனத் துப்பாக்கியை அடித்துத் தள்ளினேன். அது என் கரத்தில் காயத்தை ஏற்படுத்திவிட்டது'' என்று கூறிக்கொண்டே கீழே கிடந்த கைத் துப்பாக்கியை எடுத்துப் பார்த்தான்.

''எட்லின்! இங்கே நிற்பவர்கள் உன் புரளியை நம்ப மாட்டார்கள். நம்பக்கூடியவர்கள் வேண்டுமானால் பொலிசிற்குப் போன் செய்யட்டும். அதற்கு முன் நீ நான் கேட்பதற்குப் பதில் சொல்.''

''துரோகி! உனக்கு நான் ஏன் பதில் சொல்ல வேண்டும்?'' என்று கர்ஜித்தாள் எட்லின்.

''அயோக்கிய நாயே! உன்னைப் பற்றி எனக்குத் தெரியாது என்று நினைத்தாய்?'' என்று அவளின் புஜத்தில் பிடித்து அழுத்தி, கைத்துப்பாக்கியைக் கன்னத்தில் வைத்து அழுத்தினான்.

''ரகு! நீ ஏன்டா அவளை...பொலிசில் ஒப்படைத்துவிட்டால் போகிறது'' என்றார் ராஜாராமன்.

''அண்ணா! பேசாமலிருங்கள். பொலிசார் வருமுன் இவளிடமிருந்து ஓர் உண்மையை நான் தெரிந்துகொள்ள வேண்டும்.''

''உனக்கு எதுவுமே சொல்லமுடியாது. நீ என்னைக் கேள்வி கேட்கவும், உனக்கு நான் பதில் சொல்லவும் தயாராய் இல்லை'' என்றாள் எட்லின்.

''அப்படியா? சரி, மிஸ் எட்லின், ரதிதேவியைக் கொலை செய்தது நீதானே?'' என்றான்.

''அதைக் கேட்க நீ யார்? நீயே கொலை செய்துவிட்டு கையும் மெய்யுமாக ரோஸியிடம் பிடிபட்ட பின்பு ஓடி ஒளித்துத் திரிந்தாயே! இன்று என்மீதா பழி சுமத்துகின்றாய்? நான் செய்தேனா இல்லையா என்பதைக் கேட்க உனக்கு என்ன தகுதி? என்னைக் கேள்வி கேட்க நீ யார்?'' என்றாள்.

''நான் யார்? நான் யார் என்பதை இனியாவது நீ புரிந்துகொள்ளவேண்டும்'' என்று கூறிவிட்டு, சட்டைப் பையிலிருந்த ஒரு சிறு அறிமுக அட்டையை எடுத்துக் காட்டினான்.

''ரகு! நீ... நீ... பொலிஸ்'' என்று பேசமுடியாமல் திணறினாள் எட்லின். எல்லோரும் பிரமித்துப் போய் நின்றார்கள்.

''எட்லின்! இனியாவது சொல். அழகான உன் மேனியில் அடிவாங்க விருப்பமாயிருந்தால் பேசாமல் இருக்கலாம். உன்னிடமிருந்து உண்மையைக் கேட்காதவரையில் நான் விடப்போவதில்லை. நீயே ரதிதேவியைக் கொலை செய்தாய் என்பது எனக்கு உடனேயே தெரியும். ஆனாலும் நான் உன்னிடமிருந்தே கேட்டறிய வேண்டுமென்று நினைக்கிறேன். அதோ நிற்கின்றார்களே! ரீச்சரம்மா. அந்த அம்மாவிடம் கூறு. யார் ரதிதேவியைக் கொலை செய்தது?''

''நான்தான்'' என்றாள் எட்லின் ஈனக் குரலில்.

''அவள் காதலன் ராமச்சந்திரனை?''

''நானேதான்.''

''அடி பாவி!'' என்று அன்னபூரணி அம்மாள் கூறியதும், ரகு புன்முறுவல் தவழத் தாயைத் திரும்பிப் பார்த்தான்.

''நட வெளியே'' என்று அவளைத் தள்ளிக்கொண்டு வந்தான், பின்னர் தொலைபேசியை எடுத்து பொலிசாருக்கு அறிவித்தான்.

பதினைந்து நிமிடத்தில் பொலிஸ் ஜீப் வந்து நின்றது. பொலிஸ் வண்டியிலிருந்து கபூரும் இரண்டு பொலிஸ் கான்ஸ்டபிள்களும் இறங்கி நேரே வந்து ரகுராமனுக்கு முன் சல்யூட் அடித்து நின்றனர்.

''கொன்கிருச்சுலேசன் மிஸ்டர் ரகுராமன்! உங்களால் எங்கள் இலாகாவுக்கே பெருமை. எல்லோரையும் பிடித்து விட்டோம். இந்தக் கடிதத்தை இன்ஸ்பெக்டர் இமானுவேல் தந்தார்'' என்றார் கபூர்.

கடிதத்தைப் பிரித்துப் படித்த ரகுராமன், தன் அண்ணனிடம் கடிதத்தைக் கொடுத்தான். அதைப் படித்த ராஜாராமன் ''தம்பி'' என்று அவனைக் கட்டிக்கொண்டு ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார்.

''மிஸ்டர் கபூர்! இவளை 'அரஸ்ட்' செய்துகொண்டு செல்லுங்கள். ராமச்சந்திரன், ரதிதேவி இருவரையும் இவளே கொலைசெய்தாள். இவளுடைய வாய்முறைப்பாடு இதோ இருக்கின்றது'' என்று கூறி பாக்கெட்டிலிருந்து சிறு ஒலிப்பதிவுக் கருவியை எடுத்து அவரிடம் கொடுத்தான்.

''ரகு!...இது...காயம்'' என்றார் கபூர்.

''பரவாயில்லை. நானே ஹாஸ்பிட்டலுக்குச் சென்று பார்த்துக் கொள்கிறேன்'' என்றான்.

பொலிசார் மீண்டும் சல்யூட் அடித்து விடைபெற்றனர். அந்தக் காட்சியைக் கண்டு எதுவும் புரியாமல் அன்னபூரணி அம்மாள் விழித்தாள்.

''அம்மா! இவன் சாதாரண ரகு இல்லையம்மா, பொலிஸ் இலாகாவில் துப்பறியும் அதிகாரியாக வேலை பார்க்கின்றான். 'அப்துல்லா அன் கோ' ஒரு திருட்டுக் கோட்டையாம். அவர்கள் தேசவிரோதமான காரியங்களில் ஈடுபட்டு பல கொலைகளையும் செய்துவிட்டு வெளியே தெரியாமல் நல்லவர்களாக இருந்திருக்கின்றார்கள். அவர்களைப் பிடிக்க பொலிசார் பலமுறை முயன்றும் முடியாதுபோகவே, இவனை அனுப்பி அங்கே வேலைசெய்ய நியமித்திருக்கின்றார்கள்'' என்று ராஜாராமன் கூறிய பொழுது, அன்னபூரணி அம்மாள் திகைப்படைந்தவளாய் ரகுராமனைக் கட்டிக் கொண்டாள்.

''அம்மா! உன் குடும்ப கௌரவத்தை நான் சிதைத்து விட்டதாக அழுதாயே. இன்று பார்த்தியா? என்னைக் கைது செய்ய வந்த பொலிசே 'சல்யூட்' அடிக்கின்றான்'' என்றான் ரகு.

"ரகு! ரகு! உடனே போய் மருந்தைக் கட்டடா கைக்கு. போடா ரகு" என்று பதறினாள் அன்னபூரணி அம்மாள்.

ரகுராமன் பானுமதி நின்ற பக்கமே பார்க்காது புறப் பட்டுச் சென்றான். அவன் வெளியே செல்வதற்கும் இன்ஸ் பெக்டர் இமானுவேல் காருடன் வந்து நிற்பதற்கும் சரி யாக இருந்தது.

"ரகு! ரகு; வெற்றி, வெற்றி" என்று அவனைக் கட்டித் தழுவியபடியே காரிலேறினார் இன்ஸ்பெக்டர் இமானு வேல்.

அரைமணி நேரம்தானிருக்கும். அவர்கள் மீண்டும் திரும்பிவந்தபொழுது, ரகுராமனின் வீட்டில் பாரதியும் அவள் கணவனும் வந்திருந்தனர். பானுமதிகூட அங்கே தான் நின்றிருந்தாள். இன்ஸ்பெக்டர் இமானுவேலும் கூடவே வந்திருந்தார்.

அன்னபூரணி அம்மாளுக்கு வேலையே ஓடவில்லை. அவர் களுக்குத் தேநீர் கொண்டு வரும்படி பாரதியிடம் கூறி விட்டு ரகுவுடனேயே நின்றிருந்தாள்.

"அம்மா! எங்களை மன்னிக்கவேண்டும். நீங்கள் எல் லாம் அறிந்திருப்பீர்கள். உங்கள் பிள்ளையைப்போலத் தங்கமானவன் இருக்கவே முடியாது. சில தேசத்துரோகி களையும், பயங்கரச் சதிகளையும் கண்டுபிடிப்பதற்காகவே உங்கள் மகன் பல கெட்ட பெயர்களைச் சுமக்க நேரிட்டது. உங்கள் அனைவரினதும் அன்பை இழந்தும், ஏச்சுப் பேச்சுக் களைக் கேட்டும் சகித்து நடந்து கொண்டு, தான் எடுத்த இலட்சியத்தை அவன்நிறைவேற்றிவிட்டான். எத்தனையோ துப்பறிபவர்களை நாம் நியமித்தபோதும், மிகவும் சாமர்த் தியமாகவும், நுட்பமாகவும் அவர்களை ஏமாற்றி கண்ணியம் மிக்க ஒரு ஸ்தாபனம்போல இந்த 'அப்துல்லா அன்கோ' இயங்கி வந்தது. கடத்தல் முதல் கொலைவரை அவர்களுக்கு

கைவந்த கலையாகும். பல இளம் பெண்களைத் தகாத வேலைகளிலும் ஈடுபடுத்தி வந்திருக்கிறார்கள். உங்கள் மகன் பல்கலைக்கழக பட்டப் படிப்பை விட்டதே இந்த வேலைக்குத் தெரிவு செய்யப்பட்டபின்புதான். எங்கள் இலாகா மேலதிகாரியிடம் வடபகுதி சுப்ரிண்டனே இப்படி ஒரு வழியைக் கையாண்டு பார்க்கும்படி முறையிட்டதால் இந்த ஊரைச் சேர்ந்த ரகுராமனே இதற்கு நியமிக்கப்பட்டான். அம்மா! உங்கள் பிள்ளைக்கு பதவியுயர்வும், வெகுமதியும் வெளி நாட்டில் பயிற்சிபெற அனுமதியும் கிடைக்கப்போகின்றன. மிஸ்டர் ராஜாராமன்! நீங்கள் என்னிடம் உங்கள் தம்பி ரகு பற்றி முறையிட்டதற்காக வருந்துகின்றீர்கள் போலும்'' என்றார் இன்ஸ்பெக்டர்.

''சார்! ரகு பெரிய ரகுராமனாகிவிட்டான். எனக்குத் தான் இரட்டிப்பு மகிழ்ச்சி'' என்றார் ராஜாராமன்.

''மிஸ்டர் ரகு! ஒரு வாரமாக ஓய்வின்றிக் கஷ்டப் பட்டதற்குக் கைமேல் பலன் கிட்டிவிட்டது. இனியாவது ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள்'' என்று கூறிவிட்டு விடை பெற்றுச் சென்றார் இன்ஸ்பெக்டர் இமானுவேல்.

''அம்மா! நான் கொஞ்சநேரம் தூங்கலாம் என்று நினைக்கின்றேன்'' என்றான் ரகு.

''அதுதான் நல்லது ரகு'' என்றான் பாரதியின் கணவனான மகேசன்.

பாரதி! பானுமதியின் கரங்களைப் பற்றியவாறே அவளைக் கேலி செய்தபடி நின்றிருந்தாள்.

''அடி பானு! ரகு அண்ணாவைவிட நீதான் பெரிய துப்பறியும் புலியடி. இல்லையெனில் அவனை நீ மடக்கியிருக்க மாட்டியே'' என்றாள்.

பானுவால் எதுவும் கூறமுடியவில்லை. அவள் விழிகள் கலங்கி நின்றன. நடந்தவைகள் எல்லாம் ஒரு மர்மப்படம்

பார்ப்பதுபோல் இருந்தனவேயன்றி அவளால் நம்பக்கூடியனவாக இருக்கவில்லை.

"ஏன்டி என்னுடன் கோபமா?" என்றாள் பாரதி.

"இல்லை பாரதி! நான் முட்டாளாகிவிட்டேன். என் செல்வத்தை நானே இழந்துவிட்டேன். என் விழிகளை நானே குத்திக்கொண்டேன்" என்று கூறிவிட்டு விக்கல் எடுத்து அழ ஆரம்பித்துவிட்டாள்.

"என்னடி நடந்தது பானு? என்ன நடந்தது என்று சொல்லேண்டி" என்று அவள் முகத்தை நிமிர்த்தினாள்.

அவள் கூறிய கதையைக் கேட்டுக்கொண்டிருந்த பாரதிக்கு என்ன கூறுவதென்றே புரியவில்லை. அவள் தலையே சுற்றியது. ரகுராமனுடைய இயல்பான குணத்தை அவள் நன்கு புரிந்து கொண்டவள் என்பதினால், எதுவுமே பேச முடியாதவளாக நின்றுகொண்டிருந்தாள்.

"பானு! நீ கூறுவது உண்மைதானா?" என்றாள்.

"ஏன் பாரதி! நான் பொய்யா சொல்கிறேன்?"

"அடி பைத்தியமே! நான் இல்லாத வேளையில் நீ இப்படி நடந்துகொண்டுவிட்டாயே! அவன் ஒரு வழியான ஆள் என்று தெரிந்தும் நீ இப்படி அவமதித்துவிட்டாயே" என்று அவள் கூறும் பொழுது, அங்கே அன்னபூரணி அம்மாள், "அடி பாவி! என் ஆசையைக் கெடுத்திட்டியே" என்று ஓலமிட்டபடி வந்தாள்.

"அம்மா! என்னை மன்னித்துவிடுங்களம்மா. நான் செய்த தவறுக்கு அவர் என்னைக் கொன்றாலும் நான் ஏற்றுக்கொள்வேன்" என்று பானுமதி புலம்பிக் கதறினாள்.

## அத்தியாயம் முப்பத்தைந்து

இந்த உலகமே பலவிதமான வர்ணங்களைப் பூசிக் கொண்டிருப்பதுதான். இவ்வர்ணங்கள் யாவும் விரைவில் போய்விடலாம். போனபின் எஞ்சியிருப்பது வெண்மை தான். அந்த வெண்மைதான் உண்மை என்பது. இதையே ஆண்டவன் என்று கூறுவர் இந்துக்கள். ஏன் நன்கு நாத்தீகம் பேசுபவன் கூட உண்மையைத் தேடித்தான் அலைகின்றான். எனவே அவன் கூட ஆண்டவனையே தேடுகின்றான். சகல மதங்களின் அடிப்படைத் தத்துவமும் இவற்றையே உணர்த்துகின்றன. நமது மனம் நமக்கு வசமாக வேண்டும். மனம் அடங்கிவிட்டால் மனிதன் கோபத்தையும் ஆசையையும் அடக்கி ஆள்கின்றான். சித்தத்தை இவ்விதம் சுத்தி செய்ய முடியாதவர்கள், உடலைச் சுத்திசெய்து உண்மையைத் தேடி ஆலயங்களுக்குச் செல்கின்றனர். அங்கேயும் பலர் மேலும் வர்ணங்களைப் பூசிக்கொண்டு வருவதாகவே கருதினான் ரகுராமன். அன்று இணுவில் சிவகாமி அம்மன் கோயிலில் விசேட உற்சவம் பார்ப்பதற்காக வீட்டினர் பலரும் சென்றுவிட்டிருந்தனர், ஆனால் ரகு மட்டும் போகவில்லை. அதனால் அவன் நாஸ்திகனில்லை.

ஒருவன் ஆஸ்தீகனாகவிருப்பது, ஒழுக்கமுடன் வாழ்வது அவனவன் மன இயல்பைப் பொறுத்தது. ஒழுக்கம் பற்றிய தர்க்கத்தில் இறங்கினால் எப்படியும் வாதிடலாம். இன்றைய உலகில் நாகரிகமும், காலத்துக்கேற்ற பண்பாடும் எப்படியும் வாழலாம் என்ற கொள்கைக்கே ஆதரவுள்ள மக்கள் கூட்டமும் இருப்பதால், தான் நடப்பதுதான் சரி

என்று விபசாரிகூட வாதிடுவாள். இதற்காக நாம் ஏன் மனதைப் போட்டுக் குழப்புவான் என்று நினைப்பவன்எமது கதாநாயகன்.

பூசை அறையில் உட்கார்ந்திருந்தாள் பானுமதி. அவள் இதயம் தான் செய்த பாவத்திற்காக இறைவனிடம் மன்றாடிக் கொண்டிருந்தது.

ரகுராமன் 'ஸ்கொட்லன்யாட்'டில் பயிற்சிக்குச் செல்வதற்கான சகல வசதிகளும் செய்யப்பட்டுவிட்டன. அந்த ஒரு மகிழ்ச்சியே அவள் உள்ளத்தில் இனம் புரியாத ஓர் திருப்தியை ஏற்படுத்தியது. அவன் ஓர் உண்மையான மனிதன். உண்மைக்காக உழைப்பவன். அவன் ஒரு லட்சியப் புருஷன் என்று நினைத்த பொழுது அவள் அன்று அவனை விரட்டிய காட்சி நினைவுக்கு வந்தது. தொடர்ந்து அவன் கண்ணீருடன் சென்ற காட்சியும் தோன்றியது. உண்மை தெரிந்த பின்பு கூட அவன் தன்னைப் பற்றிப் பெருமை பேச அவளிடம் வரவில்லை. அவளாகவே அவனிடம் சென்றாள். அப்பொழுது அவன் செய்த உபசரணைகள்! உபசரணைகளா அவை? அவளுடைய கர்வத்திற்கு அவன் அளித்த தண்டனைகள்! பானுவின் மனதில் அந்தக் காட்சி விரிந்தது.

''யார், மிஸ் பானுமதியா? வாருங்கள் உட்காருங்கள்'' என்றான் ரகுராமன்.

''ரகு'' என்றவள் மேலே பேச முடியாமல் அவன் பாதங்களில் விழுந்தாள். அவன் விலகி நின்றுவிட்டான்.

''மிஸ் பானுமதி! நீங்கள் நினைத்த ரகுராமன் உங்கள் வீட்டிலே, நீங்கள் போ வெளியே என்று கூறியபொழுதே போய்விட்டான். ஆசைகளின் அற்பப் பிரதிநிதி அவன். கேவலம் ஒரு பெண்ணின் அன்பைப் பெறமுடியாத முட்டாள் அவன். அவன் போய்விட்டான். அந்த ரகுராமன் உங்களை வரவேற்கவில்லை. உங்களைச் சந்திக்க முன்புஇருந்த ரகுராமன் தான் வரவேற்கின்றான், ஆனால் அன்று தெரி

யாமல் இருந்த சில பட்டம் பதவிகளுடன் ஒரு 'பொலிஸ் டிக்டெக்டில்' தான் நீங்கள் காணும் ரகுராமன். ஆகவே பந்தம், பாசம், அன்பு, காதல் இவைகளுக்கு இடமில்லாத விசுவாசமான ஓர் அதிகாரியின் அறையில்தான் உங்களுக்கு வரவேற்பு அளிக்கப்பட்டுள்ளது'' அவன் கூறிய பொழுது அவன் நா தழுதழுத்தது.

''எனக்கு மன்னிப்பே கிடையாதா?'' என்றாள் அவனை ஏறிட்டுப் பார்த்தவாறே. அவள் விழிகளில் இருந்து நீர் முத்துக்கள் உருண்டு கொண்டிருந்தன.

''மிஸ் பானுமதி! உங்களை மன்னிப்பதற்கு நீங்கள் எதுவிதத் தவறும் செய்யவில்லை. ஆனால் என்னைப் பொறுத்தளவில் என் வாழ்வு முடிந்துவிட்டது. என் சொந்த வாழ்வில் பகைவனைக்கூட நான் மன்னிப்பேன். ஆனால் துரோகிகளை என்னால் மன்னிக்க முடியாது.''

''யார் துரோகி? நான் என்ன துரோகம் செய்தேன் ரகு?''

''அன்பு—அந்த அன்பின் சக்திக்குப் பின்னே குழி தோண்டி என்னை விழுத்திவிட்டுப் பின்னர் அவமதித்தது... நீங்கள் போகலாம்...''

''ரகு! மன்னிக்கவேண்டும். உங்கள் பதவியையோ, அந்தஸ்தைக் கொண்டோ நான் உங்களை அன்றும் விரும்பவில்லை. இன்றும் விரும்பவில்லை. ஆனால் நான் செய்த பாபம்...அன்று...ரகு...ரகு...'' என்று அழுது கொண்டே ஓடிச் சென்றவள் அன்று வரை அவன் முகத்தில் விழிக்கவில்லை.

விழிகளில் நீர் நிறைந்து குளமாகி நிற்க, சிந்தனை அறுந்தவளாகப் பூசைமாடத்திலுள்ள கண்ணனை நோக்கினாள். அந்த மாயக் கண்ணன் அவளுக்குக் கண்ணனாகத் தெரியவில்லை. ரகுராமனாகவே நின்றிருந்தான். அவனுடைய

அஞ்சன விழிகளில் 'நீ என்னைத் தீண்ட முடியாது பானு' என்று கூறும் கர்வம் மிளிர்ந்தது. அந்தச் சிரிப்பு, கபட மற்ற பார்வை அவளைச் சுட்டெரித்தது.

"ரகு! நான் கண்ணிருந்தும் குருடியாய், காதிருந்தும் செவிடியாய், அறிவிருந்தும் பேதையாய்ப் போனேன் ரகு! நீங்கள் விட்டில்கள் வீழ்ந்து மாளும் தீயல்ல ரகு! என் போன்ற அறிவிலிகளின் மன இருளைப் போக்கும் ஒளி விளக்கு" என்று அவள் வாய்விட்டுப் புலம்பினாள். அதே வேளையில் குத்துவிளக்கின் திரி கருகிக்கொண்டு வந்தது. எண்ணெய்ப் போத்தலை எடுத்து எண்ணெய் ஊற்றிவிட்டுத் திரியைத் தீண்டினாள். அந்தத் திரியில் எரியும் தீ கூட அவளுக்கு ஒரு பொருட்டாகத் தோன்றவில்லை. அவள் மனதில் தோன்றிய ஏதோ ஒரு வேகம் பாட்டாக ஒலி எடுத்தது. அந்த ஒலி அறையில் படுத்திருந்த ரகுராமனின் செவிப்பறையினூடாக நுழைந்து, அவன் பூட்டியிருந்த இதயக் கபாடத்தை இடித்துத் திறந்தது.

"எனது உடலும் எனது உயிரும் உனதல்லவோ..."

அந்த வரிகள் அவன் உடலைப் புல்லரிக்கச் செய்தன. அவளுடைய தேனினுமினிய குரல் அவனைக் கட்டி இழுத்தது. 'பானு' என்றவன் எழுந்து பைத்தியம் பிடித்தவன் போல ஓடி வந்தான்.

"எனக்கும் உனக்கும்
இசைந்த பொருத்தம்
என்ன பொருத்தமோ?
இந்தப் பொருத்தம்
உலகில் பிறர்க்கு
எய்தும் பொருத்தமோ—இறைவா"

என்று அவள் மீண்டும் பாடி முடித்துவிட்டு, "ரகு! நான் இறைவனை நினைக்கவில்லை. இறைவனை உன் வடிவில் தான் கண்டேன். நீயே என்னை வெறுத்தால் நான் யாரிடம்

முறையிடுவேன்'' என்று கூறிவிட்டு, மீண்டும் கருகி அணைய விருந்த தீயைத் தீண்டினுள்.

''ரகு! பார்க்குமிடமெல்லாம் உன் தோற்றம், ஆனுல், நீ ஏன் பேசமாட்டேன் என்கிருய்? இந்த ஜோதியில்கூட உன்னைத் தீண்டும் இன்பத்தையே நான் உணர்கின்றேன்'' என்று குத்துவிளக்கில் முத்துப் போலச் சுடர்விட்டெரியும் அந்தத் தீயில் தன் ஆள்காட்டி விரலை வைத்துக் கொண்டேயிருந்தாள். அவளுடைய செயலில் தன்னை மறந்தவனுய் பின் நின்று பார்த்துக்கொண்டிருந்தான் ரகுராமன்.

''ரகு! எனக்கு உண்மையிலேயே பைத்தியம், ஆமாம் பைத்தியம்தான். இல்லையென்ருல் உன்னைத் தீண்டி விளையாடிய விரல் இந்தத் தீயைத் தீண்டும்பொழுது இன்பமடையுமா? என் உள்ளத்தை இது சுடவில்லை ரகு! உன்னை அவமதித்த அந்த விரல் எரிந்து பொசுங்கி என் உள்ளத்திலுள்ள பாவ எண்ணங்களை அழிக்கட்டும். நான்...'' என்று அவள் கூறிவிட்டு மௌனமானபோது, ''பானு'' என்ருன் ரகுராமன்.

''ரகு! ரகு! நீங்களா? இல்லை! இல்லை! நீங்கள் என் ரகு இல்லை'' என்று கதறினுள்.

''பானு! உனக்கு என்ன பைத்தியமா?''

''ஆமாம்! பைத்தியம்தான். நீங்கள்...?''

''பானு! உன்னைப் பார்க்க எனக்குப் பரிதாபமாக இருக்கு பானு... உன்னை நான் அன்றும் சரி, இன்றும் சரி வெறுக்கவில்லை. ஆனுல் என் தொழிலில் நான்...'' என்று நிறுத்திவிட்டு அவளைப் பார்த்தான்.

''தெரியும். பல பெண்களோடு பழக நேரிடும். நீ சந்தேகப்படுவாய் என்று கூறப்போகிறீர்கள். ரகு! அந்த பானு செத்துவிட்டாள். இப்பொழுது இருப்பவள் புதிய பானு. நீங்கள் சந்தனக் கட்டை ரகு. எந்தச் சாக்கடையி

லிருந்தும் பானு இனி அதை இனம் கண்டுகொள்வாள்'' என்றாள்.

''நீ இப்பொழுது இப்படிக் கூறுவாய். சமயத்தில்...... என்னை...''

''ரகு! உங்கள் முடிவை நீங்கள் மாற்ற வேண்டாம் ரகு! ஆனால், நீங்கள் சந்தோஷமாகப் போங்கள். அதற்காகவே நான் உயிருடன் இருக்கின்றேன். நீங்கள் திரும்பி வரும்பொழுது இந்த பானுவுக்காக இரு சொட்டுக் கண்ணீர் விட்டு மன்னித்தேன் என்று ஒரு வார்த்தை சொன்னால் போதும்'' என்று கூறிவிட்டு அவன் பாதங்களில் விழுந்தாள். அவள் கொண்டையில் சொருகியிருந்த மலர்த் தொடை அவன் பாதங்களில் விழுந்தது.

''பானு'' என்று அவளை அள்ளி எடுத்து மார்போடு அணைத்தான் ரகுராமன்.

''ரகு! இதைப் பார்த்தீர்களா?'' என்று அந்த ஆள் காட்டி விரலைக் காட்டினாள். அழகிய விரல் செந்தீயில் கருகிப்போயிருந்தது.

''பானு! என்ன... பானு?'' என்றான்.

''ரகு! உங்களை அவமதித்த, இதற்குத் தண்டனைக்காகத் தீக்குள் வைத்தேன். ஆனால்... ஆனால்... ரகு...'' என்று தடுமாறினாள் பானுமதி.

''நீ என்ன பானு?'' என்று அந்தக் கரத்தைக் கன்னத்துடன் அணைத்தான். ''தீக்குள் விரலை வைத்த போதும் எனக்கு அது சுடவில்லை ரகு. பதிலுக்கு உங்களைத் தீண்டும் போது ஏற்படும் இந்த இன்பமே ஏற்பட்டது...'' என்று தன் பட்டுக் கன்னத்தை அவன் மார்பில் பதித்துக் கொண்டாள்.

''பானு'' என்று அவள் முகத்தை நிமிர்த்தி ''எனக்காக இரண்டு வருடங்கள் பொறுத்திருப்பாயா பானு?'' என்றான்.

''இரண்டல்ல, இருபது வருடங்கள் வேண்டுமானுலும் இந்த பானு காத்திருப்பாள்'' என்று கூறும்பொழுது பனியில் நனைந்த முள்முருக்கம் பூவிதழ்போன்று அவள் இதழ்கள் துடித்தன.

''பானு'' என்று அவளை இறுகத் தழுவி அவள் இதழ்களோடு தன் இதழ்களைப் பொருத்தினுன்.

நிமிடங்கள் ஓடிக்கொண்டிருந்தன. பானுவுக்கு உலகமே பறப்பது போன்றிருந்தது. ''பானு! முத்தமே காதலின் முத்திரை என்ருர் ஷேக்ஸ்பியர். அந்த முத்திரைதான் இது'' என்று அவள் கூந்தலை வருடிவிட்ட பொழுது கோயிலுக்குச் சென்றவர்கள் திரும்பி வந்துகொண்டிருந்தனர்.

## அத்தியாயம் முப்பத்தாறு

கட்டுநாயகாவிலுள்ள சர்வதேச விமான நிலையத்தில் ரகுராமன் ஆகாய விமானத்தின் படிகளில் ஏறி நின்று திரும்பிப் பார்த்தான். கலங்கிய விழிகளோடு பானு, பாரதி எல்லோருமே கையசைத்தனர். அவன் விமானத்துள் நுழைந்த சில நிமிடங்களில் அந்த ஜெட் விமானம், பானுமதியின் இதயத்தையே பறித்துக்கொண்டு ஆகாயத்தில் பறப்பது போன்று விரைந்து பறந்து மறைந்தது.

# நன்றி!

ஈழத்திலே புத்தக வெளியீட்டுத் துறையில் ஓர் புதுமையைத் தோற்றுவித்து, வாசகர்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யவும், எழுத்தாளர்களை ஊக்குவிக்கவும், சீரிய திட்டமொன்றை வகுத்துச் செயலாற்றி வரும் 'வீரகேசரி' நிறுவனத்திற்கு எனது நன்றி.

இந்நவீனத்தை, தமது பத்திரிகையில் தொடர் கதையாகப் பிரசுரித்து, பின்னர் புத்தகமாக வெளியிட அனுமதியளித்த 'சுதந்திரன்' ஆசிரியருக்கு எனது நன்றி.

இந் நவீனம் நூலுருவில் வெளிவர உதவிய 'வீரகேசரி' பிரசுர குழுவுக்கும், முக்கியமாக பிரதம ஆசிரியராய் இருந்த திரு. கே. வி. எஸ். வாஸ் (ரஜனி) அவர்கட்கும், புத்தக வெளியீட்டுத்துறை நிர்வாகி திரு. எஸ். பாலச்சந்திரன் அவர்கட்கும் எனது நன்றி.

எழுத்துலகில் என்னை வரவேற்று, உற்சாகமூட்டி வளர்த்தெடுத்த ஈழத்து வாசகர்கள் அனைவருக்கும் என் நன்றி.

கே. எஸ். ஆனந்தன்.

ரகுராமனை —'காமுகன்'— என்று
ஊரார் ஒதுக்கினர். அவனை—'கயவன்'
—என்று சுற்றத்தாரும் ஒதுக்கினர்.
பெற்றமனம் கண்ணீர் வடித்தது.
அவன் சிரித்தான்!
சிரித்துக்கொண்டே வாழ்க்கை
அளித்த இன்ப போகங்களை அணு
அணுவாகச் சுவைத்தான்!!
...மோகினி ஒருத்தி, ரோஸி மற்
றொருத்தி, எட்லின் இன்னொருத்தி...
இன்னும் யார் யாரோ...?
ஏதோ ஒரு மயக்கும் காந்த சக்தி
அவனிடமிருந்தது.
...பண்புள்ள பெண் பானுமதி, ஏன்
அந்த வலையில் வீழ்ந்தாள்?...
தீ சுடுமெனத் தெரிந்தும் துணிந்து
ஏன் விஷப் பரீட்சையில் இறங்கினாள்?
...பரீட்சையின் முடிவில் உண்மை
விஸ்வரூபமெடுத்தது.
பானுமதி கண்ணீர் வடித்தாள்!
...உத்தமனான ஒருவனைப் புரிந்து
கொள்ளவில்லையே என்று உருகி உரு
கிக் கண்ணீர் வடித்தாள்.
கண்ணீரின் பின்எழுந்த உண்மைஎன்ன
...ரகுராமன் யார்?...அவன் கயவனா...?
அவன் காமுகனா...?

2704